
ராணி
முத்து
பட்டுக்கோட்டை பிரபாகர்
ரூ. 6
துரோகம்
இன்று
தொடக்கம்

## ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி
## குழந்தை பாக்கியம் இல்லாமை

தரவான மாதர்களிடத்தில் சென்றதினால் உண்டான பால்வினை நோய், விடி (V.D), ஆண் உறுப்பில் புண், புள்ளி, சிறு கொப்பளம், அரிப்பு, தடிப்பு (V.D. Herpes) சிறுநீர் போகும்போதும் எரிச்சல், வலி, ஆண் உறுப்பில் மரு (Warts)



Dr. N. தர்மராஜன்

**குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் :** ஆண்களுக்கு உயிர் அணுக்கள் உற்பத்தி இல்லாமை, (Sperm count Nil) Azoospermia ... Fallopian Tube Block ...

உலகை புகழ் பெற்ற சித்த வைத்திய நிபுணர், பிரபல கைராசியான
**பாண்டிச்சேரி டாக்டர் N. தர்மராஜன்** அவர்களின்

| | | |
|---|---|---|
| **சென்னை விஜயம்** பிரதி மாதமும் 1,16,17,18,26,27 தேதிகளில் | **காஞ்சிபுரம் விஜயம்** பிரதி மாதம் 2-ந் தேதி ராஜாஸ் லாட்ஜ் ... காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரை | **வேலூர் (NA) விஜயம்** பிரதி மாதம் 2-ந் தேதி ஹோட்டல் வசந்த விஹார் ... மாலை 4 மணி முதல் 7 மணி வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| **ஓசூர் விஜயம்** பிரதி மாதம் 3-ந் தேதி | **ஈரோடு விஜயம்** பிரதி மாதம் 4-ந் தேதி கல்யாண லாட்ஜ் மேட்டூர் ரோடு | **கோவை விஜயம்** பிரதி மாதம் 5-ந் தேதி ஹோட்டல் சோனா | **பழனி விஜயம்** பிரதி மாதம் 6-ந் தேதி ஸ்ரீராம் லாட்ஜ் | **திண்டுக்கல் விஜயம்** பிரதி மாதம் 6-ந் தேதி ஹோட்டல் குறிஞ்சி ... மாலை 4 முதல் 7 மணி வரை |
| **மதுரை விஜயம்** பிரதி மாதம் 7-ந் தேதி | **திருநெல்வேலி விஜயம்** பிரதி மாதம் 8-ந் தேதி ஹோட்டல் அருணகிரி | **நாகர்கோவில் விஜயம்** பிரதி மாதம் 9-ந் தேதி ஆஸாத் லாட்ஜ் 78, பாலமூர் ரோடு | **புதுக்கோட்டை விஜயம்** பிரதி மாதம் 10-ந் தேதி ஹோட்டல் ராயல் பார்க் புதிய பஸ் நிலையம் எதிரில் | **திருச்சி விஜயம்** பிரதி மாதம் 11,23ந் தேதிகள் ஹோட்டல் ஆர்யபி |
| **தஞ்சாவூர் விஜயம்** பிரதி மாதம் 12,24-ந் தேதிகள் அசோகா லாட்ஜ் | **மாயவரம் விஜயம்** பிரதி மாதம் 12,24ந் தேதிகள் ராஜபிரீன்ஸ் ஹோட்டல் | **கரூர் விஜயம்** பிரதி மாதம் 23-ந் தேதி K.V.R. ஹோட்டல் 123, ஜவகர் பஜார் | **விழுப்புரம் விஜயம்** பிரதி மாதம் 20-ந் தேதி ஹோட்டல் ஆதித்யா புதிய பஸ் நிலையம் எதிரில் | **திருவண்ணாமலை விஜயம்** பிரதி மாதம் 20-ந் தேதி ராதா லாட்ஜ் 94, சின்னகடை வீதி |

பாண்டிச்சேரி ஹெட்டாபிஸில் பிரதி மாதம் 13,14,15,19,21,22,25,28,29,30,31 – ந் தேதிகளில் டாக்டர் அவர்களை நேரில் சந்தித்து ஆலோசனையும், சிகிச்சையும் பெற்று சுகவாழ்வு வாழுங்கள்

... சிகிச்சை கட்டணம் ரூ.10,500, ரூ.7,500, ரூ.5,500, ரூ.3,500, ரூ.2,500, ரூ.1,500 ... கட்டணம் : ரூ. 10,500 ரூ. 7,500 ... ரூ. 2,500 சேர்த்து Dr. N. DHARMARAJAN, PONDICHERRY, INDIA, ... (Western Union Money Charger) ... (0413) 2203025 ... 2201294 செல்: (0) 94432 - 23025

**டாக்டர் N. தர்மராஜன் வைத்தியசாலை**

... பாண்டிச்சேரி - 605 013.



# ராணி முத்து

**மாதம் இருமுறை இலக்கிய இதழ்**

முத்து: 715 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி-1 (டிசம்பர் 16, 2012)





பல்வேறு அம்சங்களில் நமது இந்தியாவின் வளர்ச்சி பிரமிக்க வைத்தாலும்... மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில், இரண்டு நாட்களில் 19 குழந்தைகள், ஊட்டச்சத்துக் குறைவு காரணமாக அடுத்தடுத்து இறந்த சம்பவம் வேதனையானதே!

உலக அளவில், இந்தியர்களின் ஆரோக்கிய வாழ்வின் மதிப்பீட்டை குறைக்கும் விதமாக இருக்கும் இத்தகைய சம்பவம் மேலும் தொடர்ந்துவிடக் கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்க வேண்டும்.

ஏனெனில், பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி மட்டுமே ஒரு நாட்டின் முன்னேற்ற அளவை தீர்மானிப்பவை அல்ல. சுகாதாரமான– ஆரோக்கியமான வாழ்வும் அவற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.



# வெற்றுக் காசோலை

தொழிலதிபர் திருச்சி ஜமால் முகமதுவைச் சந்தித்த காந்திஜி, தேச நிதி கேட்டார்.

உடனே காசோலையில் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு, "வேண்டிய தொகையைப் பூர்த்தி செய்துகொள்ளுங்கள்" என்றார் ஜமால்.

இதனைக் கண்ட காந்திஜி, "பிர்லாகூட இப்படி வெறும் காசோலை தந்தது இல்லை" என்று புகழ்ந்தார். காசோலையில் எழுதப்பட்ட தொகை ஒரு லட்சம்.

**–மெர்வின், சென்னை.**

# கூடு கட்டாத மரம்

★காது கேளாதோர், பேசும் திறன் இல்லாதோருக்காக நடத்தப்படும் ஒலிம்பிக் விளையாட்டு 'சைலண்ட் ஒலிம்பிக்' எனப்படுகிறது.

★இலந்தை மரத்தில் பறவைகள் கூடு கட்டாது.

★புதுடெல்லியில் பறவைகளுக்காக ஒரு ஆஸ்பத்திரி நடத்தப்படுகிறது.

★'லவகுசா' தமிழ்ப் படத்தில் இடம் பெற்ற பாடல்களின் எண்ணிக்கை– 63.

**–பச்சமுத்து, கிருஷ்ணகிரி.**





# துரோகம் இன்று தொடக்கம்

**பட்டுக்கோட்டை பிரபாகர்**

**1**

தொடர்ச்சியாக ஒன்பதாவது சிகரெட்டைப் பற்ற வைத்தான் மித்ரா. எட்டாவது சிகரெட் புகைக்கும்போது தெறித்து விழுந்த நெருப்புத் துண்டுகள்– 'பாலியஸ்டர்'

சட்டையில் பொத்தல்கள் இட்டதை அவன் கவனிக்கவில்லை.

கை நரம்புகள் விறைப்பாகி இருந்தன. பதற்றம் பாதம் வரை பாய்ந்திருந்தது. வாழ்வின் கடைசி ஆசையை செயல்படுத்துபவன் போல அந்தப் புகையை ஆழமாக உறிஞ்சினான்– இருமினான். பின் மீண்டும் மீண்டும் இழுத்தான்.

நிகழ்ச்சி முடிந்தும் அணைக்கப்படாமல் இருந்த தொலைக்காட்சி, 'மைக்ரோஸ்கோப்' கருவி வழியாகப் பார்க்கும் திசுக்களைப் போல திரை முழுக்க புள்ளிகளைக் காட்டிக்கொண்டிருந்தது.

ஆடம்பர சுவர்க் கடிகாரத்தின் பெண்டுலத்துடன் பொருத்தப்பட்டு இருந்த குதிரை– இடமும், வலமும் ஒரே சீராக சென்றுகொண்டிருந்தது. 'க்ளக்– க்ளக், க்ளக்,– க்ளக், க்ளக்– க்ளக்...'

மித்ரா தன் இரண்டு கால்களையும் கண்ணாடி வேய்ந்த செவ்வக 'டீப்பாய்' மீது போட்டிருக்க... இங்கிருந்து தெரிந்தவை மொத்தம் நான்கு மரக் கால்கள்.

தொலைபேசி ஒலித்தபோது மித்ராவின் கவனம் கலையவில்லை. ஆறாவது 'ட்ர்ர்ர்ரிங்' சத்தம் கேட்டதும் திரும்பி ஜென்ம விரோதியைப் போல தொலைபேசியைப் பார்த்து முறைத்தான். சிகரெட் புகையை அதன் மேல் ஊதினான். இரக்கம் காட்டாமல் அதைத் தொடர்ந்து கதறவிட்டான்– தன் பற்களைக் கடித்தான்.

அவனது கண்கள் மிகவும் சிவந்திருந்தன. கலைந்த தலையை ஒற்றைக் கையால் அடிக்கடி மேலும் கலைத்துக்கொண்டான். உதடுகள் துடித்துக்கொண்டிருந்தன. தொலைபேசி பிடிவாதம் பிடித்தது. அவன் நேற்றியோர நரம்புகள் விம்மின.

"யூ... ஷட் அப்!" கத்தினான்.

அது கேட்பதாய் இல்லை.

'படக்' என்று எடுத்து, 'ஹலோ' எல்லாம் சொல்லாமல், "என்ன எழவு வேணும் உனக்கு?" என்றான், வார்த்தைகளைக் கடித்து.

"மித்ரா இருக்காங்களா?"

"அவனேதான்..." என்றான்.

எதிர்முனை சில விநாடிகள் மவுன அதிர்ச்சியில் உறைந்திருந்தது.

"நான் சித்ரா பேசறேன்."

"முதல்ல போனை வையிடி."



எதிர்முனையின் பதிலைக் கேட்காமல் தொலைபேசியை 'பட்'டென வைத்தான். காற்றில் அறைந்து சாத்திக்கொண்ட ஜன்னல் கதவை முறைத்தான். எழுந்து நின்று தன் கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு அறையின் குறுக்கில் அபத்தமாய் பாதம் வைத்து நடந்தான். குறுக்கிட்ட நாற்காலியைக் காலால் உதைத்து நகர்த்தினான்.

சிகரெட் பெட்டி எடுத்துத் திறந்து பார்க்க– அது காலியாக இருந்ததால் இன்னும் ஆத்திரம் அடைந்தான்.

"வேலு..."

நான்கு தெருக்களுக்குக் கேட்கும்படி அடித் தொண்டையில் இருந்து கத்தினான்.

சத்தம் கேட்டு அவன் பதறியபடி அறைக்குள் வந்து, "அய்யா" என்றான்.

"என்ன நொய்யா!"

அவன் கழுத்தில் மாலையாய் போட்டிருந்த அழுக்கேறின சிகப்பு ஈரிழைத் துண்டின் இரண்டு முனைகளையும் சேர்த்துப் பிடித்து அருகில் இழுத்து, "சிகரெட் எங்கடா?"

"மேசைக்குள்ளாற ரெண்டு பாக்கெட் இருக்குதுய்யா,"

அவனை விடுவித்து, மேசையின் டிராயரை இழுத்த வேகத்தில் அது கையோடு வந்தது. உள்ளே இருந்த பலவிதப் பொருட்களும் கீழே விழுந்து சிதறின.

அந்த சிகப்பு 'டைரி'யும் மல்லாக்க விழுந்து, விசிறி.வாழை போல காற்றில் பக்கங்கள் புரள– அதன் உள்ளிருந்த அவளின் புகைப்படம் வழுக்கிக்கொண்டு தரையில் சில அங்குலங்கள் நழுவி நின்றது.

"எல்லாத்தையும் நான் எடுத்து வச்சிடறேன்ய்யா" என்ற வேலு, முதலில் அந்தப் புகைப்படத்தைத்தான் எடுக்கச் சென்றான்.

"முட்டாள்! தொடாதே... அவளைத் தொடாதே!"

மித்ரா பாய்ந்து அந்தப் புகைப்படத்தை எடுத்துக்கொண்டு கட்டிலில் அமர்ந்தான். அதை தன் உள்ளங்கையில் வைத்தபடி முறைத்துப் பார்த்தான்.

தரையில் சிதறிக் கிடந்த மற்ற பொருள்கள் அனைத்தையும் அள்ளிப் போட்டுவிட்டு, டிராயரை மேசையில் பொருத்திவிட்டு,

சிகரெட் பாக்கெட்டை அவனிடம் நீட்டினான் வேலு.

"டேய் உக்காரு! இங்கே உக்காரு" வேலுவின் கையைப்பிடித்து கட்டிலில் தன் அருகில் அமர வைத்து, "பாரு... எவ்வளவு அழகா இருக்கா பாரு! இந்தக் கண்ணைப் பாரு! உதட்டைப் பாரு! தெத்துப் பல்லைப் பாரு! முத்தம் கொடுக்கணும் மாதிரி இல்லை, பண்ணி இருக்கேன் வேலு. ஒரு தடவை, ரெண்டு தடவை இல்லை. கணக்கே வெச்சிருக்கேன். டைரியில முத்த நாளுன்னு எழுதி, எழுதி எண்ணி வெச்சிருக்கேன். எழுபத்தி நாலு தடவை! எத்தனை தடவை...?" என்றான் மித்ரா.

வேலுவுக்கு பயமாக இருந்தது.

"என்ன ஆச்சுங்கய்யா உங்களுக்கு?"

"சொல்லுடா... எத்தனைத் தடவை?"

"உங்களுக்கு உடம்பு சரியில்லைங்களாய்யா? டாக்டரை இட்டாரட்டுமா?"

"சொல்டா, எத்தனை தடவை?

வேலு அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான்.

"செருப்படி விழும் இப்போ. சொல்லு. இவளை நான் எத்தனை தடவை முத்தம் பண்ணி இருக்கேன்?"

"எழுபத்தி சொச்சம்" என்றான், நடுங்கியபடி.

"சொச்சம் இல்லைடா... எழுபத்தி நாலு தடவை! இவ பேர் என்ன?"

"எனக்குத் தெரியாதுங்க."

"மேனகா! வெறும் மேனகா இல்ல இப்ப! திருமதி. மேனகா ஸ்ரீதரன்! பார்த்தேன்டா. இன்னைக்குப் பார்த்தேன். நாலு வருஷம் கழிச்சி இன்னிக்குப் பார்த்தேன். தேடித் தேடி நான் கண்டுபிடிக்க முடியாம ஓய்ஞ்சு போன இவளை– இன்னைக்குப் பார்த்தேன். எவளாவது எழுபத்தி நாலு முத்தம் ஒருத்தனுக்குக் கொடுத்துட்டு இன்னொருத்தனோட போவாளாடா? இவ புருஷன்... அதான் மதிப்பிற்குரிய ஸ்ரீதரன் கவனிச்சானோ, இல்லையோ... முதுகுல 'பிரா' கொக்கி மாட்டற இடத்தில இவளுக்கு ஒரு மச்சம் இருக்கு வேலு. நான் பார்த்திருக்கேன். கொக்கியையும் மாட்டி விட்டிருக்கேன்."

வேலு பலியாடு போல கைட்டி உட்கார்ந்திருந்தான்.

மீண்டும் தொலைபேசி ஒலித்தது.



வேலு சென்று எடுத்துப் பேசி, "அய்யா... வந்து..." ரிசீவரை கையால் பொத்தி, "ஆடிட்டர் பேசறார் சார்" என்றான்.

"வைடா போனை... வைடா"– கத்தினான் மித்ரா.

"சார், அய்யா தூங்கறார். நாளைக்குப் பேசறீங்களா?"

ரிசீவரை வைத்துவிட்டு, "அய்யா, உங்களுக்கு சாப்பிட ஏதாச்சும் கொண்டு வரட்டுமா?"– கேட்டான்

"ஒரு தட்டு நிறைய மேனகாவோட சதையைக் கொண்டு வா."

"அய்யா, உங்களுக்கு என்னமோ ஆயிடுச்சி. நான் டாக்டரை..."

"பேத்துடுவேன். போடா! போய் விஸ்கி எடு!"

"வேணாம்" என்று கதவருகில் குரல் கேட்டது.

சித்ரா நின்று கொண்டிருந்தாள். கவர்ச்சியான மேலாடையும், முழங்கல் வரை 'ஸ்கர்ட்'டும் அணிந்திருந்தாள். முன் நெற்றியில் அழகாக கூந்தலை வெட்டி விட்டிருந்தாள். மெலிதாக 'லிப்ஸ்டிக்'. திருத்தப்பட்ட புருவங்கள். இன்றைய நாகரீகத்தின் பிரதிநிதியாக நின்றாள்.

அவனை நோக்கி நடந்து வந்தாள்.

"வேலு, நான் பார்த்துக்கறேன். நீ கிழே போ."

சித்ரா கட்டிலில் அமர்ந்து, தன் தோளில் தொங்கிய கைப்பையை ஓரமாக வைத்தாள். வேலு புறப்பட்டுச் சென்றான்.

இவன் முகத்தைத் தன் பக்கம் திருப்பி, "என்னாச்சுப்பா?"

தலையை விரல்களாலேயே கோதி சரி செய்ய முயன்றாள்.

அவள் கையைத் தட்டிவிட்டு? "ஏன் வந்தே?" என்றான்.

"என்ன கேள்வி இது? அடடா... போன வாரம் நான் வாங்கிக் கொடுத்த புதுச் சட்டைதானே இது. சிகரெட் நெருப்பால் ஓட்டை விழுந்திருக்கு. என்ன மித்ரா நீ?"

தலையணை மேல் வைத்திருந்த மேனகாவின் படத்தைப் பார்த்தாள்.

"ஓ... இதான் பிரச்சினையா? மலரும் நினைவுகளா? பழசை நினைக்கறது... பழைய செருப்பைப் போட்டுக்க முயற்சிக்கறது மாதிரி! பொருந்தாது. நாம வளர்ந்திருப்போம். மாறி இருப்போம்.

இதுல முடியலையா?”

“என்ன முடியலையா?”

“அவளை மறக்க முடியலையா?”
ஏந்திப் பிடித்து அவள் கண்களை

“சித்ரா” அவள் முகத்தை ஏந்திப் பிடித்து அவள் கண்களை உற்றுப் பார்த்தான், “எத்தனை வருஷமா பழகிட்டு இருக்கோம் நாம?”

“ஒரு வருஷம்.”

“முற்றுப்புள்ளி வச்சிடலாமா... இந்த நிமிஷம்”– கடிகாரத்தைப் பார்த்து, “பத்து மணி நாப்பத்தி ரெண்டு நிமிஷத்தோட முடிச்சுக்கலாமா? போய்டறியா? என்னை விட்டுப் போய்டறியா? மறந்துடுவியாடி என்னை?”

“முடியாது மித்ரா. உன்னால முடிஞ்சாலும் என்னால முடியாது.”

“அப்படித்தான் எனக்கு மேனகா! நாலு வருஷத்துக்கு அப்புறம் அந்தத் துரோகியை இப்பத்தான் விமான நிலையத்துல பார்த்தேன். பெங்களூர் விமானத்தில் இருந்து இறங்கி வர்றா... புருஷனோட கை கோர்த்துக்கிட்டு. நான் திகைச்சுப் போயிட்டேன். அப்படியே மரம் மாதிரி நின்னுட்டேன்.

ஒரு வருஷமா பைத்தியம் மாதிரி அவளை அப்படித் தேடித் திரிஞ்சேன். ஒரு கொலைக் குற்றவாளியைக்கூட போலீஸ் அந்த அளவுக்குத் தேடி இருக்காது. வெறுமனே தேடலை சித்ரா. ஒரு அடி நீளத்துக்கு கத்தி வாங்கி வெச்சிருந்தேன். அந்தக் கத்தியோட தேடித் திரிஞ்சேன்.”

“எல்லாம் சொல்லி இருக்கே மித்ரா. அதுக்கப்புறம் மூணு வருஷத்தில் நீ தொழில்ல கவனம் செலுத்தி பிரமாதமா வந்துட்டே. எல்லா இடத்திலயும் உனக்கு ரொம்ப நல்ல பேரு. உன்னை நம்பி எத்தனை வங்கிகள் கடன் கொடுக்குது? எவ்வளவு பெரிய அதிகாரிகள் எல்லாம் உனக்கு வணக்கம் சொல்ல காத்திருக்காங்க.

உன் தொழிலாளர்கள் உன்னை தங்களோட வீட்டுக்குக் கூப்பிட்டு குழந்தைக்கு பேர் வைக்கச் சொல்றாங்க. நல்ல காரியத்துல முதல் மரியாதை தர்றாங்க. ரெண்டு கார், பங்களா, வசதிகள், வங்கி இருப்பு எல்லாத்தையும் தேடிக்கிட்டே.

இதற்கிடையிலே என்னைச் சந்திச்சு... பழகி... என்னை அசத்தி,





உன்னையே சுத்தி சுத்தி வரச் செய்துட்டே. உன் ரணத்துக்கெல்லாம் நான் அப்பப்ப மருந்து போட்டுகிட்டு இருக்கேன். இப்ப நீ பழைய ஆசாமி இல்லை. எல்லாத்தையும் கலைச்சுட்டு புதுசா மாறிட்ட. இப்பப் போய் நீ இவ்வளவு ஆவேசப்படறது ஆச்சரியமா இருக்குப்பா."

"சித்ரா, நான் பாதிக்கப்பட்டவன். காயம் ஆறி இருக்கலாம். ஆனா, தழும்பு இருக்கே! அது அழியலையே!! இன்னிக்கு அவளைப் பார்த்ததும் அந்தத் தழும்பு மறுபடி ரணமாயிடுச்சி. அறிமுகப்படுத்தறா சித்ரா– அவ புருஷன்கிட்ட... 'இவர் என்னோட பழைய நண்பர் மித்ரா'ன்னு... த்தூ!"

"சரி, இத்தனை வருஷம் பார்க்காதவளைப் பார்த்தாச்சு. இப்ப என்ன செய்யணும்னு சொல்றே?"

"தெளிஞ்சி இருந்த தண்ணி குழம்பி சேறாய்டுச்சி சித்ரா."

"அமைதியா இருப்பா, விஸ்கி வேணுமா?"

"வேணும்."

சித்ரா எழுந்து சென்று எடுத்து வந்து ஊற்றித் தந்ததை வாங்கி 'கடக்' என்று விழுங்கினான். மீண்டும் மீண்டும் கேட்டு வாங்கி குடித்தான்.

சித்ரா கதவைச் சார்த்திவிட்டு வந்து, "இப்ப அமைதியா தூங்கு. மத்ததையெல்லாம் காலையில பேசிக்கலாம்" என்றபடி அவன் சட்டையின் பட்டன்களை கழற்றினாள்.

"இல்லை சித்ரா, அது எவ்வளவு பெரிய துரோகம்."

"உஷ்!" என்றாள். "எதுவும் பேசக்கூடாது. தூங்கணும்"– தன் மார்'பில்' அவன் தலையை அணைத்துக்கொண்டு முதுகில் குழந்தையைப் போல தட்டிக் கொடுத்தாள்.

நிமிர்ந்தான். "இன்னும் கொஞ்சம் விஸ்கி வேணும்."

ஊற்றித் தந்தாள்.

"இப்ப நீயும் வேணும்."

பின் அவளை இறுக அணைத்துக்கொண்டு, "நீ இல்லைன்னா நான் செத்திருப்பேன் சித்ரா" என்றான்.

"பேசாதேன்னு சொன்னேன்."

மித்ராவின் கண்களில் கசிந்த ஈரம், ஜில்லென்று அவளின்



தோளை நனைத்தது.

## 2

"உக்காருங்க. உங்க பேரு?"

"மேனகா ஸ்ரீதரன்."

"ஒரு வார இதழ்ல தொடர் கட்டுரை ஒண்ணு வருதே..."

"நான்தான் எழுதறேன் டாக்டர்."

"உங்களை சந்திச்சதுல ரொம்ப சந்தோஷம். உங்களைப் பார்த்ததுக்காக சொல்லலை. உங்க கட்டுரையைப் பாராட்டி அந்தப் பத்திரிகைக்கு ஒரு பெரிய கடிதம் எழுதணும்னு நினைச்சிட்டிருந்தேன். மனசில எழுதியாச்சு, காகிதத்துல எழுத நேரமில்லை. நோயாளிகள், சிகிச்சைகள்... நேரம் சரியாப் போயிடுது. ரொம்ப எதார்த்தமா இருக்கு உங்க கட்டுரை."

"நன்றி டாக்டர்."

அடக்கமாக கொண்டை இட்டு, சிறிய பொட்டு வைத்திருந்த டாக்டர் எழில்வதனி தன் கழுத்தில் இருந்த 'ஸ்டெத்தாஸ்கோப்'பைக் கழற்றி மேசை மேல் வைத்துவிட்டு, "உங்களுக்கு ஏதாச்சும் கொடுக்கணும். என்ன கொண்டு வரச் சொல்லட்டும்? காப்பி, டீயா அல்லது குளிர்ச்சியா ஏதாவது?" மேசை மணியை அழுத்தினார்.

"பரவாயில்லை டாக்டர், உங்களைப் பார்க்கறதுக்காக வெளியில அதிக நோயாளிகள் காத்திருக்காங்க."

"பத்து நிமிஷத்திலே எதுவும் ஆய்டாது."

எட்டிப் பார்த்த நர்சிடம், "ஒரு கூல்டிரிங்ஸ் வாங்கிட்டு வரச் சொல்லு வாணி" என்றார்.

மேனகா இளம் பச்சை நிற பருத்திச் சேலை கட்டி இருந்தாள். அணிந்திருந்த ரவிக்கை– கைகளை இறுக்கிப் பிடிக்க, புஷ்டி தெரிந்தது. இடுப்'பில்' சற்று வேண்டாத சதை, கவர்ச்சி சேர்த்திருந்தது. காதில் தேடினால் மட்டுமே தெரிகிற முத்துக் கம்மல்களும், கழுத்தில் ஒரே ஒற்றைச் சங்கிலியும் அணிந்திருக்க, அவளது முகம் பளபளப்பாக காணப்பட்டது.

காதருகில் கிருதா போல அடர்த்தியாக முடி. உயர்த்தி வாரின கூந்தலை பச்சை நிற 'ரப்பர் பாண்ட்' தன் ஆளுகையில் வைத்திருந்தது. வில் போன்று வளைந்த புருவம், உறுத்தாத லிப்ஸ்டிக், கழுத்துச் சங்கிலியுடன் தாலி தெரிந்தாலும் மற்றொரு முறை பார்க்கத் தூண்டும் பேரழகு அவள். மவுனமாக, கைகளைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்ததில் அடக்கமும், அழுத்தமும் இணைந்து வெளிப்பட்டன.

"நான் ஒரு பெரிய வாசகி இல்லை. ஆனா, படிச்ச வரைக்கும் நீங்க கதைகள் எதுவும் எழுதினதில்லைன்னு நினைக்கிறேன். பெரும்பாலும் கட்டுரைகள்தான். அதுவும் குறிப்பாக பெண்கள் பத்திரிகைகள்லதான். நான் சொல்றது தப்பாக்கூட இருக்கலாம்."

"இல்லை டாக்டர். நீங்க சொல்றது சரிதான். எனக்கு கதைகள் எழுதறதுல ஆர்வமில்லை."

குளிர்பானத்துடன் வந்த நர்ஸ் அதை மேனகாவிடம் கொடுக்கும்போது, ஒரு துளி அவள் சேலையில் சிந்தியது. இதற்கான நர்சை டாக்டர் கடிந்துகொள்ள, "பரவாயில்லை... விடுங்க டாக்டர்" என்றாள் மேனகா.

"உங்களுக்கு ஒரு நாப்பத்தஞ்சி, அம்பது வயசாவது இருக்கும்னு நினைத்திருந்தேன். ஆனா, நீங்க ரொம்ப இளமையா இருக்கிங்க.. இருபத்தி நாலு வயது இருக்குமா உங்களுக்கு?"

"இல்லை டாக்டர். இருபத்தி எட்டு."

"நம்பவே முடியலை...ரொம்ப போரடிச்சுட்டேன்னு நினைக்கிறேன். இப்பச் சொல்லுங்க... என்ன விஷயமா என்னைப் பார்க்க வந்திங்க?"

"டாக்டர் மணிமாறன்தான் உங்களைப் பார்க்க சிபாரிசு செஞ்சார். சுருக்கமா சொல்லணும்னா எனக்குக் கல்யாணமாகி நாலு வருஷமாச்சு. இன்னும் குழந்தை இல்லை. அதான் பிரச்சினை டாக்டர்."

"அப்படியா... இப்பதான் முதல் முறையா பரிசோதிக்க வந்திங்களா? இல்லை, ஏற்கனவே யார்கிட்டேயாவது..."

"இல்லை டாக்டர், இதுவரைக்கும் நான் பரிசோதிக்கவில்லை."

"உங்க கணவர்?"

"அவர் போன மாசம்தான் பரிசோதனை பண்ணிக்கிட்டார். டாக்டர் மணிமாறன்தான் பார்த்தார். அந்தப் பரிசோதனை



# உங்களுக்குத் தெரியுமா?





★ அமெரிக்க கடற்கரையில் பாதிக்குமேல் அலாஸ்காவில் உள்ளது.

★ உலகில் பிராண வாயுவில் 20 சதவிகிதத்தை அமேசான் மழைக் காடு உற்பத்தி செய்கிறது. அமேசான் ஆறு, கடலில் சங்கமித்த இடத்தில் இருந்து 100 மைல் தூரத்தில்கூட கடலில் சுத்தமான தண்ணீரைப் பெறலாம்.

★ பனிப் பாறைகளில் 90 சதவிகிதம் அண்டார்டிகாவில் உள்ளது. இது, உலகில் எந்த நாட்டுக்கும் சொந்தமில்லை.

★ கனடாவில் அதிக ஏரிகள் உள்ளன. இது ஓர் இந்திய வார்த்தை. இதற்கு, பெரிய கிராமம் என்று அர்த்தம்.

★ நமது உடலில் ரத்தம் ஒரு காலில் மேலே இருந்து கீழும், மற்றொன்றில் கீழே இருந்து மேல் நோக்கியும் ஓடிக்கொண்டிருக்கிறது.

★ ஒரு நொடிக்கு லட்சோப லட்சம் சிவப்பு ரத்த அணுக்கள் அழிகின்றன. அதே எண்ணிக்கையில் புது அணுக்கள் உருவாகின்றன.

★ வயதானவர்களின் ஞாபக சக்தி, பொழுது ஏற ஏற குறைகிறது.

★ 100 முறை வாய்விட்டுச் சிரிக்க ஆகும் சக்தி, 15 நிமிடம் சைக்கிளில் செல்வதற்கு சமம்.

★ நீரின்றி அதிக நாட்கள் வாழக்கூடியது எலி.

★ நம் உடலில் ஒரு சதவிகிதம் நீர் குறைந்தால் தாகம் எடுக்கும். 15 சதவிகிதம் குறைந்தால் மரணம் ஏற்படும்.

★ 10 சதவிகிதம் பேர் இடதுகை பழக்கம் உள்ளவர்கள்.

– கே.நிருபமா, பெங்களூர்.

# இதயம் பேசுகிறது

## இதயத் துடிப்பு எகிறியது!



இந்திரா சௌந்தர்ராஜன் எழுதிய 'தங்கப் பறவை' நாவல், அமானுஷ்ய அதிரடி... அச்சத்தின் சரவெடி என மின்னலாய் நெஞ்சைப் பறித்தது.

–பொன்.ரா்ஜ்குமார்
ஊத்தங்கால்.

ஒவ்வொரு அத்தியாயத்தின் தலைப்புச் செய்தியாக பல்வகை மரங்களின் அற்புதங்களை மிக அழகாக எழுதியது பாராட்டத்தக்கது.

–ம.வசந்தா,
கச்சிராயபாளையம்.

திகைக்க வைக்கும் 'திரில்' சம்பவங்களுடன் தங்கப் பறவையை விறுவிறுப்பாக... வித்தியாசமாக பறக்க விட்டிருந்தார்.

–அயன்புரம்
த.சத்தியநாராயணன்

தான் செய்த தவறால் தூக்குத் தண்டனை பெற்ற வரதன், இறந்தபின் அருவமாக இருந்து செய்யும் நற்செயலால் தங்க மனிதனாக உயர்ந்து நின்றார்.

–உள்ளகரம் பி.ஜெயராஜ்

தொடக்கம் முதல் இறுதி வரை சுவை குன்றாமலும், 'அடுத்து என்னாகும்?' என்ற ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும் இருந்தது.

–வி.எஸ்.மோகன், மதுரை.

நாவலைப் படித்ததும் மனதில் பய உணர்வு மேலோங்கி, இதய துடிப்பு எகிறியது!

–ராஜா, தைலாம்பாளையம்.

பொது அறிவுச் செய்திகள் அனைத்தும் அற்புதம். குடும்பப் பாங்கான இரண்டு சிறுகதைகளும் மனதை ஆசுவாசப்படுத்திக்கொள்ளச் செய்தன.

–பீ.யாசீன் முகமது, புதுக்கோட்டை.

உங்கள் கருத்துகளை
அனுப்ப வேண்டிய முகவரி:

**இதயம் பேசுகிறது,**
**'ராணி முத்து',**
**சென்னை– 600 007.**



முடிவையும் கொண்டு வந்திருக்கேன். மருத்துவ ரீதியா இருக்கிறதால எதுவும் புரியலை. ஆனா, அவர்கிட்ட எந்த குறையும் இல்லைன்னு டாக்டர் சொல்லிட்டார்."

"அப்படியா... நான் பார்த்துக்கிறேன்."

மேனகா தன் கைப்பையில் இருந்து மருத்துவ பரிசோதனை அறிக்கைகளை எடுத்துக் கொடுத்தாள். நெற்றியில் வழிந்த வியர்வையைத் தன் கைக்குட்டையால் ஒற்றிக்கொள்ள... உடனே, டாக்டர் தன் மேசை மேல் இருந்த மின்விசிறியை அவள் பக்கமாகத் திருப்பி வைத்தார்.

"இப்ப நீங்க மட்டும்தான் வந்திருக்கீங்களா?"

"என் கணவரும் வந்திருக்கார். கார்ல காத்திட்டிருக்கார்."

மருத்துவ அறிக்கையைப் பார்த்து முடித்ததும் டாக்டர் அதை மடித்து தனியாக வைத்துவிட்டு, "உங்களை 'டெஸ்ட்' பண்ணுறேன். அதுக்கு முன்னாடி சில அந்தரங்கமான கேள்விகளுக்கு தயக்கமில்லாம பதில் சொல்லுங்க.... சொல்வீங்கதானே?" என்றார்.

"கேளுங்க டாக்டர்."

"உங்களோடது காதல் திருமணமா?"

"இல்லை, பெரியவங்க ஏற்பாடு செஞ்ச திருமணம்தான்."

"நீங்க இந்த கல்யாணத்தில சந்தோஷமா இருக்கீங்களா?"

"முதல்ல ஒரு ஆறு மாசத்துக்கு இல்லை டாக்டர். அப்புறம் நான் ரொம்ப சந்தோஷமா இருந்தேன். இருக்கேன்."

"கல்யாணமான புதுசுல எல்லாருக்குமே வாழ்க்கை ஓட்டம் பிடிபட ஆறு மாசமாகும்."

"அதில்லை டாக்டர்... இது வேற காரணம்."

"என்ன அது?"

"ஒரு குற்ற உணர்ச்சி என்னை உறுத்திக்கிட்டே இருந்திச்சி."

"புரியலை."

"ஒருத்தருக்கு துரோகம் செய்யிறமோங்கிற குற்ற உணர்ச்சி."

"இப்பவும் புரியலை."

"மித்ரான்னு ஒருத்தரை நான் காதலிச்சேன். ஆனா, அவரை கல்யாணம் பண்ணிக்கிறது தப்புன்னு மனசுக்குப்பட்டது. அதனால விலகினேன். அப்புறமா இவரை கல்யாணம் செய்துக்கிட்டேன்.

தீர்மானமா முடிவு எடுத்திருந்தாலும், அதை செயல்படுத்தினதுக்கு அப்புறம் மனசுல சஞ்சலம் உண்டாச்சு. ஆறு மாசத்துக்கு மனசு அப்படியே குற்ற உணர்ச்சியில இருந்தது. அந்த நேரம் என்னால இவரை உண்மையான ஈடுபாட்டோட நேசிக்க முடியலை. மனசுக்கு ரொம்ப ரொம்ப இம்சையா இருந்திச்சி. அப்புறம் மெல்ல மெல்ல மனசை தேத்திக்கிட்டேன். மனசுல இருந்த கலக்கமும் மாறிடிச்சு."

"இது எனக்கு தேவையில்லாத விஷயம். இருந்தாலும் ஒரு ஆர்வத்துல கேக்கறேன். மித்ராவிடம் இருந்து ஏன் விலகுனீங்க?"

"மன்னிக்கணும் டாக்டர். தனிப்பட்ட அந்தக் காரணத்தை நான் சொல்ல விரும்பலை."

"பரவாயில்லை. நான் கேட்டதுக்கு மன்னிக்கணும். இந்த காதல் விவகாரம் உங்க கணவருக்குத் தெரியுமா?"

"தெரியும். நானே சொல்லிட்டேன். விபரமா சொல்லிட்டேன்."

"எப்ப சொன்னீங்க?"

"கல்யாணத்துக்கு முந்தியே."

"அவர் அதை எப்படி எடுத்துக்கிட்டார்."

"ரொம்ப எதார்த்தமா! என் சூழ்நிலையையும் அவர் நல்லா புரிஞ்சுக்கிட்டார்."

"அப்புறம் எப்பவாவது உங்க பழைய காதல் பற்றி பேசி இருக்காரா?"

"இந்த நிமிஷம் வரைக்கும் இல்லை."

"எரிச்சல் தர்ற கேள்வியா இருந்தா பதில் சொல்ல வேண்டாம். ஆனா, காரணமாத்தான் கேக்கறேன். கல்யாணத்துக்கு முன்னாடி ஏடாகூடமா ஏதாவது நடந்து... கருக்கலைப்பு பண்ணி இருக்கீங்களா?

'சுர்ர்' என்று எகிறிய கோபத்தை உடனே விழுங்கிக்கொண்டு, "இல்லை டாக்டர், மித்ராகிட்ட நான் எல்லை தாண்டி பழகலை."

"சரி... உடலுறவுல உங்களுக்கு ஈடுபாடு உண்டா, இல்லையா? அதாவது...'இது ஒரு மனைவியோட கடமை'ன்னு சம்மதிக்கிறீங்களா, இல்லை..."

"இயல்பான ஆர்வம், ஈடுபாடு எல்லாம் உண்டு டாக்டர்."

"உங்க கணவருக்கு?"



"அவருக்கும்தான்."

"கர்ப்பத் தடைக்காக ஏதாவது வழிமுறைகளைக் கையாண்டீங்களா?"

"ஆரம்பத்தில இருந்தே இல்லை. பத்தாவது மாசமே குழந்தை வேணும்னு அவர் சொன்னார்."

"........."

"ஆமா டாக்டர்."

"..........."

"சில நேரம் டாக்டர்."

"........."

"அது தப்பா டாக்டர்?"

"தப்பில்'லை. என்னோடு வாங்க."

அந்த அறையுடன் இணைந்த உள் அறைக்கு டாக்டருடன் சென்ற மேனகா, அவர் கூறியபடி அங்கிருந்த ஒரு நீள மேசை மீது படுத்துக்கொண்டாள். டாக்டர், கதவைச் சாத்தினார்.

பத்து நிமிடங்கள் கழித்து இருவரும் வெளியே வந்து முன்போல நாற்காலிகளில் அமர்ந்தனர்.

"ரத்தம், சிறுநீர் பரிசோதனைக்கு எழுதித் தர்றேன். இங்கயே பரிசோதனை மையம் இருக்கு. அந்த முடிவை பார்த்துட்டு நான் உங்களை போன்ல கூப்பிடறேன். அதுக்கப்புறம் நீங்க வரலாம். அவசியப்பட்டா 'ஸ்கேன்' பண்ணிப் பார்க்கறேன். எதுக்கும் நீங்க கவலைப்படாதீங்க. ஒரு பிரச்சினையும், குறையும் இல்லாதவங்களுக்குக்கூட எட்டு, ஒன்பது வருஷம் கழிச்சி குழந்தை பிறந்திருக்கு. எந்தக் குறையா இருந்தாலும், நிவர்த்தி செய்றதுக்கு இப்ப வழிகள் நிறைய இருக்கு. வேணா பாருங்க, உங்க குழந்தைக்கு நான்தான் பேர் சூட்டப்போறேன்"– சிரித்தார் டாக்டர்.

பேசிக்கொண்டே அவர் எழுதிக் கிழித்து நீட்டிய மருந்துச் சீட்டை வாங்கிக்கொண்டு எழுந்த மேனகா, " 'பீஸ்' எவ்வளவு டாக்டர்?"

"நாளைக்கு உங்க குழந்தை எனக்குக் கொடுக்கப் போற முத்தம்" என்றார் டாக்டர்.

உடனே மேனகா தன் கைப்பையில் இருந்து நூறு ரூபாய் நோட்டை வெளியில் எடுக்க முயன்றாள். ஆனால், அதைத் தடுத்தார்

டாக்டர்.

பின்னர் பரிசோதனை மையம் நோக்கி நடந்தாள் அவள்.

## 3

மித்ராவுக்குத்தான் முதலில் விழிப்பு வந்தது. ஜன்னல் கண்ணாடிக்கு வெளியில், தேய்ந்த வெளிச்சம் காலையின் பிரசவத்தை அறிவித்தது. இந்த நேரத்தில் வேலு சமையலறைக்குள் இருந்த தனது பிரத்தியேக சுவாமிப் படங்களுக்கு மணியடித்து பூஜை செய்வது மெலிதாகக் கேட்டது.

தன் மார்பின் குறுக்கில் விழுந்திருந்த சித்ராவின் கையை பூப்போல எடுத்து ஒரு தலையணையை செருகி அதன் மேல் வைத்துவிட்டு எழுந்தான். தலையில் தொங்கிய ஒன்றிரண்டு காய்ந்த மல்லிகைகள் உதிர்ந்தன.

உடைகள் கலைந்திருக்க, லேசாக வாய் பிளந்தவாறே அவள் உறங்கிக்கொண்டிருந்தாள். முழங்காலுக்கு மேல் உயர்ந்திருந்த அவளின் மேலாடையை சரி செய்துவிட்டு, தனி நாற்காலியில் அமர்ந்தான் மித்ரா. தலை வலித்தது. உடம்பை முறுக்கி சோம்பல் முறித்தபோது, உடல் அதிர்ந்து சில விநாடிகள் சிலிர்த்து அடங்கியது.

தரையில் கிடந்த சிகரெட் பெட்டியை எடுத்து, அதில் ஒன்றைப் பிரித்து பற்ற வைத்துக்கொண்டு சித்ராவைப் பார்த்தான். கழுத்துக்கு மேல் நான்கு வயது குழந்தை போல் இருந்தாள்.

'என்ன உறவு இது? என்ன பிடிப்பு இது? எத்தனை மோசமானவன் நான்! என் மேல் எப்படி இவளால் இத்தனை அன்பு செலுத்த முடிகிறது? என்னோடு பழகிய அத்தனைப் பெண்களும் மூன்றாவது சந்திப்பில் 'போடா' என்று போய் இருக்கிறார்கள். இவள் மட்டும் ஏன் என்னை ஆழமாகப் புரிந்துகொண்டாள்? அதெப்படி கோபமே வருவதில்லை இவளுக்கு?'

நினைவுகள் பின்னோக்கிச் சென்றன.

"சித்ரா, நான் ரொம்ப மோசமானவன்."

"அப்படியா?"



"ரொம்ப கெட்டவன். நான் வேணாமே உனக்கு!"

"ஏன்?"

"நான் ஒரு கிறுக்கு."

"அன்புக் கிறுக்கு. தப்பில்லை."

"நான் சராசரி மனுஷன் இல்லை."

"அந்த வித்தியாசம்தான் பிடிச்சிருக்கு."

"என் புத்தியில எங்கேயோ விரிசல் இருக்கும்மா."

"சரி செஞ்சிடலாம்ப்பா."

"எப்போ?"

"நம்ம கல்யாணத்துக்கு அப்புறம்."

"வேணாம் சித்ரா."

"தெளிவான காரணம் சொல்லு."

"நான் ஒரு நல்ல புருஷனா இருக்க மாட்டேன்."

"நல்ல புருஷனா நான் மாத்திக்குவேன்."

"என்னைப் பற்றி எனக்குத்தான் தெரியும்."

"என்னையும் எனக்குத் தெரியும்."

"ரொம்ப ஏமாந்துடுவே."

"ஏமார்றது எனக்குப் புதுசில்லை. பரவாயில்லை."

"ஏன்... ஏன்? என்னைப் போய்..."

"என்னைப் போய்ன்னா...! நீ என்ன மட்டமா?"

"ஆமாம். நான் செஞ்ச உதவிக்காக நேசிக்கிறியா?"

"அப்படின்னா நன்றி சொல்லிட்டு நகர்ந்திருப்பேன்."

"எனக்குள்ளே திமிர் இருக்கு."

"அதுவும் எனக்குப் பிடிச்சிருக்கு."

"எனக்குள்ளே முட்டாள்தனம் இருக்கு."

"அதுவும் பிடிக்கும்."

"எனக்குள்ளே ஒரு பயங்கர மிருகம் இருக்கு. ஒண்ணில்லை, நிறைய!"

"இருந்தாலும் உன்னை வெறுக்க முடியாது. சரி, இப்ப நான் கேக்கறேன். என்னைப் பிடிக்கலையா உனக்கு? சொல்லு... என்னை உனக்குப் பிடிக்கலையா?"

"பிடிச்சிருக்கு."

"என்னோட பேசிட்டிருக்க பிடிச்சிருக்கா?"

"ரொம்ப."

"என்னைத் தொடணும்னு தோணலையா?"

"அடிக்கடி."

"அப்புறம் எதுக்கு வேஷம்?"

"இது வேஷம் இல்லை சித்ரா, அக்கறை!"

"என்ன அக்கறை?"

"உன் எதிர்காலத்தைப் பத்தின அக்கறை."

"எதையும் மிகைப்படுத்திப் பார்க்கறே. நீயா புதுப் புது சித்தாந்தங்களை வகுத்துக்கறே. என்னைப் பிடிச்சிருக்கு. என்னோட பேச ஆசையா இருக்கு. என்னைத் தொடணும்னு ஆசையா இருக்கு. இதுல இப்ப என்ன நிறைவேறலை? ஆனா, இதை உரிமையோட செய்ய உனக்கு என்ன தயக்கம்?"

"நான் உன்னை விரும்பறேன் சித்ரா. ரொம்ப விரும்பறேன். என் மேனகாவை விரும்பினதைவிட ரெண்டு மடங்கு அதிகமா விரும்பறேன். அதனாலயே பயமா இருக்கு."

"என்ன பயம்?"

"என்னால இன்னொரு ஏமாற்றத்தைத் தாங்கிக்க முடியாது. பைத்தியம் பிடிச்சுடும். தற்கொலை செஞ்சுக்குவேன். நினைச்சாலே கலங்குது."

"உனக்கு மட்டும் ஏன் இப்படி விபரீதமான கற்பனை?"

"நீ ஆயிரம் சொல்லு. எனக்கு யோசிக்கணும். ரொம்ப யோசிக்கணும்."

"யோசி. பொறுமையா யோசி."

"நான் முடிவு எடுக்கற வரைக்கும் கல்யாணம்னு பேசாதே."

"சரி,பேசலை."

"கல்யாணம் வேணாம், ப்ளீஸ்..."

"சரி... வேணாம்."

"இப்படித்தான் மேனகாவை..."

"அவப் பேச்சும் வேணாம்."



"என் தேவதையா இருந்தா அவ."

"எனக்கு அப்படி இல்லையே. உன்னோட உண்மையான காதலை நான் மதிக்கிறேன். ஆனா, உன் மனசு பூரா அவளையே நிரப்பி வச்சிருக்கிறது கொஞ்சம் கஷ்டமா இருக்கு. தயவுசெய்து அவளுக்குப்பதில் எனக்கும் அங்கு இடம் கொடேன். ஒரு ஓரத்துல தந்தாப் போதும். என்னை வெறும் கட்டில் பாவையா மட்டும் நினைச்சுக்கிறியோன்னு பல நேரம் தோணுது."

"நிறுத்து! காசு கொடுத்தா ஆயிரம் பேர் 'அது'க்கு வருவாங்க. வந்திருக்காங்க. நான் தொட்ட முதல் பொண்ணு நீ இல்லை."

"தெரியும். சொல்லி இருக்கே. நானும்..."

"வேணாம். மறந்துடு. அதை சொல்ல வேணாம். மனசறிஞ்சு நடந்ததில்லை அது. வேணாம், இப்ப அதை எல்லாம் நினைக்க வேணாம்."

அந்த அதிகாலையில்– இரண்டாவது சிகரெட்டில்– சித்ராவை தான் முதன் முதலாக சந்தித்த விநோதத்தை நினைத்துப் பார்க்க ஆசையாக இருந்தது அவனுக்கு.

அந்தத் தெருவே இருட்டாக இருந்தது. மிக எப்போதாவது வாகனங்கள் கடந்து வெளிச்சம் இரைத்து, மீண்டும் பிடுங்கிக்கொண்டு இருட்டில் தவிக்க வைத்தது.

'க்ர்ர்ரீச்' என்று ரிக்ஷாக்காரன் பத்தடிக்கு முன்னால் 'பிரேக்' பிடித்து நிறுத்தின சத்தத்தில் நிச்சயம் சுற்று வட்டாரத்தில் நான்கு குழந்தைகளாவது தூக்கத்தில் இருந்து விழித்திருக்கும்.

"இறங்கு சார். இந்த வீடுதான்."

"ரொம்ப இருட்டா இருக்கே?"

"எல்லாம் தொழில் சவுகரியத்துக்காத்தான். தெருவில் எல்லா விளக்கையும் கல்லால அடிச்சி உடைச்சிட்டோம். வர்றது யாரு, என்னன்னு தெரியக்கூடாது பாரு."

"அது சரி, ரொம்ப இருட்டா இருந்தா ஐம்பது வயசு கிழவியை இருபது வயசு எளசுன்னு சொல்லி ஏமாத்திடுவான்."

"அட தொட்டா தெரிஞ்சுடாதா? சுதிர் அப்படியெல்லாம் செய்யமாட்டான். போயிட்டு வா துரை. நான் சாயா குடிச்சிட்டு, பீடி அடிச்சிட்டு வர்றேன்."

குறைந்த அளவு ஒளியைத் தரக்கூடிய விளக்கைத்தான் அந்த

வீட்டினுள் போட்டிருந்திருப்பார்கள்.

நெற்றியில் கைக்குட்டை கட்டின சுதிர் வந்து கையைப் பிடித்துக்கொண்டு, "வா துரை! பார்த்து நாளாச்சுது" என்றான்.

பணத்தை கத்தையாக உருவி, உருவி வழங்க வேண்டும். அப்போதுதான் துரை பட்டம். இல்லாவிட்டால் தரைமட்டம்.

"நல்லக் கதையா இருக்குதே! சொல்லாம கொள்ளாம நீ பாட்டுக்கு எடத்தை மாத்திட்டே. விசாரிச்சி மூணு ரிக்ஷா மாறி இங்க வந்திருக்கேன்."

"என்ன பண்ணுறது துரை? அந்த ஏரியாவுக்கு புது போலீஸ் அதிகாரி வந்துட்டார். அவர் மாமூல் வாங்கறதில்லை. பார்க்கலாம். எத்தனை நாளைக்கு! அதான் ஜாகை மாத்திட்டேன். உனக்குப் பிடிச்ச சரஸா இப்ப இல்லியே, அது பெங்களூர் போய் இருக்குது! ஆங்! ஷில்பான்னு ஒரு குட்டி இருக்கு. பேரே ஷோக்கா இல்லை? போ. உனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"எவ்வளவு?"

"பணம் கிடக்குது. உன்னாண்ட நான் என்னிக்கு பேரம் பேசி இருக்கேன்? திருப்தியா கொடு. மாடி மேல ரெண்டாவது அறை... போ."

மாடியில் இரண்டாவது அறையின் கதவைத் தள்ளி திறந்ததும்– மீண்டும் ஒரு சோகையான இருபத்தஞ்சி 'வாட்ஸ்' பல்பு. கட்டிலில் ஷில்பாவைத் தேடினான்.

இல்லை.

அறையின் மூலையில் இடுங்கிக்கொண்டு அமர்ந்திருந்த சல்வார் கமீஸ் அணிந்த பெண் லேசாக நடுங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது.

இவனை நிமிர்ந்து பார்த்து, இமைகளை உதறிப் பார்த்து, "வேணாம்" என்று சொல்வதாக நினைத்து "ழேணாம்"– கையெடுத்து கும்பிட்டாள்.

புரியவில்லை. அருகில் சென்றான். அவள் கைவிரல்களில் துல்லியமான நடுக்கம். தலை கலைந்திருந்தது. உதடுகள் துடித்துக்கொண்டிருந்தன.

"ஷில்பா" என்று தோளில் கை வைக்க, மின்சாரம் பாய்ந்தது போல உதறிக்கொண்டாள். தலையைத் தூக்கிப் பார்க்க முயற்சித்தாள்.



தலை நிற்கவில்லை. 'லொடக்' என்று ஒரு பக்கமாக சாய்ந்துகொள்ள, கண்களில் மயக்கம் இருந்தது.

"ழேணாம்" என்றவள்– மறுபடியும் ஒருமுறை கையெடுத்துக் கும்பிட்டாள்.

"என்னாச்சு உனக்கு? ஜுரமா?"

தொட்டுப் பார்த்தான். முழங்கால்களைக் கட்டிக்கொண்டு நத்தை தன் ஓட்டுக்குள் ஒளிவதைப் போல சுருங்கிக்கொண்டாள்.

"புதுசா?" என்றான்.

"ழேணாம்."

"உனக்கு என்ன பண்ணுதும்மா?"

காமம் காணாமல் போய், இரக்கம் ஊற்றெடுக்கத் தொடங்கியது.

"என்னை... என்னை...?"

"சொல்லு... உன்னை...?"

"ஊ... ஊசி போட்டு... முடியலை... என்னால முடியலை... வேணாம். காலைலேர்ந்து ஏழு பேரு. ழேணாம், பிளீஸ்..."

அவள் கண்களில் கண்ணீர்.

மித்ரா வேகமாக வெளியே வந்து, "சுதிர்! சுதிர்! என்ன இது?"

"என்னாச்சு துரை? முரண்டு பண்ணுறாளா?"

"ஊசி போட்டியா? என்ன ஊசி?"

"இதெல்லாம் சகஜம்தான் துரை. நேத்துதான் கிடைச்சது. சுளையா ரெண்டாயிரம் கொடுத்திருக்கேன். ஆரம்பத்தில் மிரளும். ஊசி போட்டுத்தான் ஆகணும். போதை ஊசி!"

"அய்யோ!"

"நீ கண்டுக்காம காரியத்துல இறங்கு துரை. கடிச்சிடமாட்டா. வேணும்னா இன்னொரு ஊசி போட்டுடறேன்."

"முட்டாள்! பொண்ணுடா! மிருகம் இல்லை! விட்டுடு. அவளை விட்டுடு. எவ்வளவு ரெண்டாயிரமா சொன்னே, நான் தர்றேன்."

"துரை, உனக்கெதுக்கு இந்த வம்பெல்லாம்?"

"பாவம்டா, திமிரெடுத்து வந்திருந்தா சரி. வேணாம்னு கையெடுத்து கும்புடறவளை... ச்சே! பாவம்டா! இந்தா! ஐநூறு சேர்த்து தர்றேன். இவளை நான் கூட்டிக்கிட்டுப் போறேன். ஆஸ்பத்திரியில சேர்த்து

சரி பண்ணி, விசாரிச்சி– அவ வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். பிடி! பிடிடா சொல்றேன்."

ஆஸ்பத்திரியில் மறுநாள் அவள் கைகூப்பி கண்களில் கண்ணீருடன், "நீங்க தெய்வம்" என்றாள்.

"இல்லை, மகா மோசமான மனுஷன். அதை விடு ஷில்பா, நீ எந்த ஊரு?"

"என் பேரு ஷில்பா இல்லை, சித்ரா."

"சரி, எந்த ஊரு... சொல்லு. உன்னைப் பத்திரமா அனுப்பி வைக்கிறேன்."

"அனுப்பி வெச்சி? எந்த மூஞ்சியை வச்சிக்கிட்டு என் குடும்பத்தில் நுழைய முடியும் சார்?"

"என்ன நடந்துச்சி?"

"காதல். அவனை ரொம்ப நம்பினேன். எல்லாரையும் உதறிட்டு ஓடி வந்தேன். வித்துட்டுப் போயிட்டான். என்னோட விலை வெறும் ரெண்டாயிரம் ரூபா சார்."

கண்களில் இருந்து முத்துகள் உதிர்ந்தன.

"சரி... ஊருக்குப் போக விரும்பலைன்னா உன்னை இங்கேயே ஒரு பெண்கள் விடுதியில சேர்த்துடறேன். உனக்கு ஏதாச்சும் ஒரு ஆபீஸ்ல வேலை வாங்கித் தர்றேன். பார்க்கறியா...?"

தலையசைத்து மீண்டும், "தெய்வம்" என்றாள்.

அப்புறம் மெல்ல மெல்ல நெருக்கமாகப் பழகி, ரசனைகளைப் பேசி, பழைய கசப்புகளை– காயங்களைப் பகிர்ந்து... இரண்டு பேருக்கும் காதல் துளிர்த்தது.

அவளின் சத்தம் கேட்டு நிகழ்காலத்திற்கு வந்தான்.

"குட்மார்னிங் மித்ரா" என்றான், எழுந்து கைகளை உதறிக்கொண்டு.

"குட்மார்னிங். என்னை மன்னிச்சிடும்மா."

"எதுக்கு?"

"ராத்திரி உன்னைத் திட்டினேன்னு நினைக்கிறேன்."

"உரிமை இருக்கு மித்ரா."

"இருந்தாலும் நான் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு..."

"விடு! இப்ப மனசு தெளிவா இருக்கா?"



"ஓரளவு."

"ஓரளவுதானா?"

"உன்கிட்ட எதையும் மறைக்கறதில்லை சித்ரா. நான் தீர்மானிச்சி இருக்கேன்."

"என்ன?"

"மேனகாவை தனியா சந்திச்சுப் பேசறதுன்னு."

"என்ன பேசணும்?"

"அது, பேசிட்டு வந்து சொல்றேன். வேலு! ரெண்டு காப்பி கொண்டா!"

கட்டளை இட்டவாறே, குளியல் அறைக்குள் நுழைந்த மித்ராவைச் சலனம் இல்லாமல் பார்த்தாள்.

## 4

முதுகு குலுங்க கட்டிலில் படுத்து அழுதுகொண்டிருந்தாள் மேனகா. உதடுகளை உட்புறமாக மடக்கி விம்மல்களைக் கட்டுப்படுத்த முயன்றும், முடியாமல் போனது.

அறைக்குள் வந்தான் ஸ்ரீதரன்.

"மேனகா, என்ன இது! 'லைட்' போடாம இருட்டுக்குள்ள என்ன செய்றே?"

விளக்கு எரிந்ததும்– அவள் அழுவதைப் பார்த்தான். மெதுவாக அருகில் வந்து அமர்ந்து முதுகைத் தடவிக் கொடுத்தான்.

"ஏன்... என்னாச்சு?"

"டாக்டர்கிட்டே போயிருந்தேன்..."

அவளால் மேலே சொல்ல முடியவில்லை.

"தெரியும். நான் இப்ப டாக்டரைப் பார்த்துட்டுதான் வர்றேன். எதுக்கு இப்ப அழறே? கண்ணைத் துடை முதல்ல..."

"என்கிட்டதான் குறை இருக்குன்னு..."

"விடு. சொல்ல வேணாம். அதான் பார்த்துட்டுதானே வர்றோம். மருந்து எழுதிக் கொடுத்திருக்காராமே! ஒரு வருஷம் தொடர்ந்து

சாப்பிட்டு வந்தா பலன் இருக்கும்னு சொன்னார்."

"பொய்! அது சும்மா ஆறுதலுக்காகச் சொன்ன வார்த்தை! நிச்சயமா எல்லா மருந்தும் வைட்டமின்களாத்தான் இருக்கும்" என்றவள்–

"என்னை... என்னை மன்னிச்சிடுவீங்களா?"

"எதுக்கு மேனகா?"

"என்னால ஒரு குழந்தையைப் பெத்துத் தர முடியாதே?"

"வாழ்க்கையில அது மட்டும்தான் இருக்கா?"

"அதானேங்க முக்கியம்."

"அசடு மாதிரி பேசாதே! முதல்ல உனக்கு நம்பிக்கை வேணும். அந்த மருந்துகளை எடுத்துக்கோ. எல்லாம் சரியாப் போயிடும். நமக்கு நிச்சயம் குழந்தை பிறக்கும் மேனகா" என்று ஆறுதலாக அவன் சொன்னான்.

இருந்தாலும், அவனது முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது. கண்ணாடியைக் கழற்றித் துடைத்தான்.

துக்க வீட்டில் பாதிக்கப்பட்டவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லித் தேற்றிக்கொள்வதைப் போல, "ஏங்க, ரொம்ப கஷ்டமா இருக்கா?" என்றாள்.

"இருக்காதா மேனகா?"

"நாம யாருக்கு என்ன குறைங்க வச்சோம்?"

"ஒண்ணுமில்லை."

"எதுக்காக இந்தத் தண்டனை?"

"தெரியலையே! பணம், காசு இருந்து என்ன பிரயோஜனம் மேனகா...? கடைசில இப்படி ஆயிடுச்சே! பயந்துகிட்டே இருந்தேன். இதுக்குப் பேசாம நாம பரிசோதனை செய்துக்காமலேயே இருந்திருக்கலாம். நல்ல காலம் வரும்னு ஒருவித நம்பிக்கையோட இருந்திருப்போம்."

"என் மேல கோபமா?"

"உன் மேல கோபப்படறதில என்ன அர்த்தம் இருக்கு?"

"என்கிட்டதானே குறை இருக்கு."

"அதுக்கு நீ என்னம்மா பண்ணுவே?"

"ஊருக்குப் போயிருக்கிற உங்க அப்பா, அம்மா எல்லாம் ரெண்டு



நாள்ல வந்துடுவாங்க. அவங்ககிட்ட எப்படிங்க சொல்றது?"

"சொல்ல வேண்டாம்."

"நான் ஆஸ்பத்திரிக்குப் போனது அவங்களுக்குத் தெரியுமே!"

"இன்னும் முடிவு கிடைக்கலைன்னு சொல்லு."

"எத்தனை நாளைக்கு அதைச் சொல்ல முடியும்?"

"இந்தப் பரிசோதனையில சரியா தெரிஞ்சுக்க முடியலை. இன்னும் சில பரிசோதனை எல்லாம் எடுக்கணும்னு சொல்லு. அல்லது, வேறு எதையாவது சொல்லு. ஆனா, உண்மையைச் சொல்லிடாதே மேனகா. அவங்களால ஏத்துக்க முடியாது. அதிலயும் அம்மாவால நிச்சயமாகத் தாங்கவே முடியாது. ரொம்ப உடைஞ்சி போயிடுவாங்க."

நெற்றியைப் பிடித்துக் கொண்டான்.

"ஏற்கெனவே ஜாடைமாடையா அவங்க சொல்லிக் காட்டிக்கிட்டு இருக்காங்க. நான் தப்பாச் சொல்லலை. நானே மாமியாரா ஆனாலும்... அந்த மாதிரிதான் இருப்பேன். நான் ஒரு அசடு பாருங்க! எங்கே மாமியாராகப் போறேன்? எனக்கு வாழ்க்கையில அந்த வேஷமே கிடையாது."

விரக்தியாகச் சிரித்தாள் மேனகா.

"முதல்ல இந்தத் தாழ்வு மனப்பான்மையை விட்டாகணும் நீ. நமக்கு இப்ப என்ன வயசாயிடுச்சி? கல்யாணமாகி நாலு வருஷம்தான் ஆகுது. உனக்கு பிரச்சினை சரியாப் போயிடும், நமக்கு குழந்தை பிறக்கும்."

"கேக்க சந்தோஷமா இருக்கு."

"இதப் பாரு! உன் கட்டுரைகளில் எவ்வளவு பேருக்கு நம்பிக்கை வர்ற மாதிரி துணிச்சலா எழுதி இருக்கே! எவ்வளவு கடிதங்கள் வந்திருக்கு! நீயே இப்படி உடைஞ்சி பேசறது எவ்வளவு அபத்தம்?"

"எனக்குன்னு வர்றப்பதாங்க வேதனை புரியுது."

"விட்டா இதே மாதிரிதான் பேசிட்டிருப்பே! எந்திரி. போய் முகம் கழுவிட்டு, சேலை மாத்திக்கோ. வெளியில போயிட்டு வரலாம். கடற்கரைக்குப் போயிட்டு அப்படியே ஓட்டல்ல சாப்பிட்டுட்டு வரலாம்."

"நான் வரலைங்க. மனசு சரியில்லை."

கொண்டுதான் கூப்புடறேன்."

"அதை சரிப்படுத்தறதுக்காகத்தான் கூப்புடறேன்."

"வெளியில போயிட்டு வந்தா பிரச்சினை தீர்ந்துடுமா?"

"வீட்டுக்குள்ளேயே உக்காந்து அழுதிட்டிருந்தா தீர்ந்துடுமா? இப்ப உனக்கு மட்டும்தான் கவலையா? எனக்கில்லையா? வா மேனகா, சொன்னாக் கேளு"- சட்டையைக் கழற்றிவிட்டு 'டவல்' எடுத்தான்.

அவள் எழுந்து வந்து கணவனின் கைகளைப் பிடித்துக்கொண்டு, "என்னை வெறுத்திடுவீங்களா?" என்றாள்.

"என்ன இது அர்த்தமில்லாம?"

"என் மேல உங்களுக்கு அன்பு குறைஞ்சிடுமா?"

"இதே மாதிரி பேசிட்டிருக்காதே. எனக்குப் பிடிக்கலை."

"சொல்லுங்க பிளீஸ்... சொல்லுங்க. 'இதனால உன் மேல அன்பு கொறையாதுன்னு சொல்லுங்க..."

அவள் முகத்தை இரண்டு கைகளாலும் ஏந்தி, "ஏம்மா இப்படியெல்லாம் கேக்கறே! ஏமாற்றம்தான்... ஆனா, வெறுப்பு எங்கேர்ந்து வரும்? இனிமேலும் இப்படியெல்லாம் கேக்காதே. சீக்கிரம் தயாராகு, வெளியில போகலாம்."

கடற்கரையில் இரண்டு பேரும் இரண்டு திக்கில் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கையில் பலூன் பிடித்துச் சிரிக்கும் குழந்தையை ஆதங்கமாகப் பார்த்தாள். மணல் வீடு கட்டும் சிறுமியைப் பார்த்து ஏக்கப் பெருமூச்சுவிட்டாள்.

'எத்தனை முறை இங்கே வந்திருக்கிறேன். எத்தனை எத்தனை குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் வெறும் உற்சாகம் மட்டுமே கொப்பளிக்கும்.

ஆனால் இப்போது? 'குப்'பென்று நெஞ்சம் அடைத்துக்கொள்கிறதே!'

"ஒரு குழந்தையை நாம தத்து எடுத்துக்கலாமாங்க?"

மணலில் பாம்பு வரைந்து கொண்டிருந்த ஸ்ரீதரன் நிமிர்ந்து, "வேற பேசலாம் மேனகா. நீலாங்கரையில ஒரு பங்களா விலைக்கு வர்றதா சொன்னாங்க. தனி வீடு. தோட்டம், டென்னிஸ் விளையாட இடம் எல்லாம் இருக்கு. மூணு 'கிரவுண்ட்'. நாளைக்கு போய்ப் பார்க்கலாமா?" என்றான்.



"பார்த்து?"

"உனக்குப் பிடிச்சிருந்தா வாங்கலாம்."

"வாங்கி?"

"குடி போகலாம்."

"தோட்டத்தில எந்தக் குழந்தைங்க விளையாடும்?"

"நீ திருப்பித் திருப்பி அதான் பேசுவியா?"

"சொல்லுங்க, ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக்கலாமா?"

"வேணாம். கண்டிப்பா வேணாம்."

"ஏன்?"

"நமக்குக் குழந்தை பிறக்கும். எனக்கு நம்பிக்கை இருக்கு. எந்திரி, வீட்டுக்குப் போகலாம்."

வீட்டில் இரவில் உறங்கிக்கொண்டிருந்தவனை எழுப்பி, "தூங்கிட்டிங்களா?" என்றாள் மேனகா. கட்டிலில் அவனையே பார்த்து உட்கார்ந்திருந்தாள்.

"மணி ஒண்ணாகுது மேனகா? தூங்கலை நீ?"

"இல்லைங்க."

"படும்மா, தூங்கு."

"உங்களை ஒண்ணு கேக்கணும்."

"சரி, கேளு."

"நீங்க கோவிச்சுப்பீங்க."

"அப்ப கேக்காதே."

"எனக்குக் கேட்டாகணுமே! கேள்வி குடையுதே."

"என்ன வம்பு இது... நடுராத்திரில?"

"சரி, கேட்டுடறேன். நீங்க... இல்லை, நான் கேக்கலை."

"ஆரம்பிச்சிட்டு 'சஸ்பென்ஸ்' வைக்காதே. கேட்டுடு. நான்...?"

"குழந்தை வேணும்னு இன்னொரு கல்யாணம் பண்ணிக்குவீங்களா?"

படுத்திருந்தவன் சடாரென்று எழுந்து உட்கார்ந்துவிட்டான்.

"ஏன் உனக்கு புத்தி இப்படியெல்லாம் போகுது?"

"போகுதே. சொல்லுங்க 'பிளீஸ்...' "

"மனசை ரொம்ப குழப்பிக்காதே. இப்படி கேள்வி கேட்டு

என்னை நீ அவமானப்படுத்தறே. நான் உன் மேல வெச்சிருக்கிற அன்பை கொச்சைப்படுத்தறே. என்னை ரொம்ப கீழ்த் தரமா சந்தேகப்படறே. இனிமே இப்படி கேட்டா, சத்தியமா நான் உன்னை அறைஞ்சிடுவேன், ஆமாம்."

ஸ்ரீதரன் படுத்துக்கொண்டு அந்தப் பக்கம் திரும்பிக்கொள்ள, அருகில் படுத்து, அவனை அணைத்து தன் பக்கம் திருப்பி, கண்ணீருடன் அவன் கன்னத்தில் முத்தமிட்டு– "ஐ லவ் யூ" என்றாள் மேனகா.

## 5

**த**லைக்கு 'ஹேர் டிரையர்' போட்டுக்கொண்டிருந்தாள் மேனகா. இதமான வெப்பம், கூந்தலின் இழைகளுக்குள் ஊடுருவிச் செல்வதும்... பின்னங் கழுத்தில் மோதுவதும் சுகமாக இருந்தது.

அலங்கார மேசைக் கண்ணாடி முனையில் ஒட்டப்பட்டிருந்த குட்டிக் குழந்தையின் வண்ணப் படம் அவளைப் பார்த்து தன் பிஞ்சுக் கையை நீட்டி சிரித்தது.

தொலைபேசி ஒலித்தது.

'ஹேர் டிரையரை' அணைத்துவிட்டுச் சென்று எடுத்தாள்.

"மிஸஸ் மேனகா ஸ்ரீதரன் இருக்காங்களா?"

"மேனகாதான் பேசறேன். நீங்க யாரு?"

"என் குரல் அடையாளம் தெரியலைங்களா?"

"தெரியலையே!"

"மித்ரா பேசறேங்க."

உள்ளுக்குள் ஏற்பட்ட லேசான அதிர்ச்சியை உடனடியாக ஜீரணம் செய்தாள்.

"ஹலோ, நீங்களா? மன்னிக்கணும். எனக்கு குரல் அடையாளம் புரியலை" என்றாள் இயல்பாக.

"போன்ல பேசற சந்தர்ப்பமே நமக்கு அமைஞ்சதில்லைங்க. நேர்லதான் மணிக்கணக்கா பேசி இருக்கோம். போன்ல குரல் மாறும். அதனால அடையாளம் தெரியாமப் போறது சகஜம்தான். அப்புறம்...



எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன்."

"திடீர்னு உங்களை விமான நிலையத்துல பார்த்ததும் எனக்கு ஒரே அதிர்ச்சி."

"எனக்கும்தான் மித்ரா. நீங்க எப்படி இருக்கீங்க?"

"ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கேங்க. நான் உங்களைப் பார்க்கணுமே... பேசணுமே?"

மேனகா யோசித்தாள். மவுன இடைவெளி விட்டாள்.

"தப்பா நினைக்காதீங்க மேனகா. அன்னைக்கு என்னை உங்க கணவர்கிட்ட என் நண்பர்னு அறிமுகப்படுத்தினீங்க. உண்மையான நட்புக்கு உரிய கண்ணியத்தில் இம்மி அளவும் குறையாம நடந்துக்குவேன். நாம சந்திப்பதால் உங்க வாழ்க்கை பாதிக்கும்னா வேணாம்."

"இல்லை... இல்லை...! அது எப்படி வாழ்க்கையைப் பாதிக்கும் மித்ரா?"

"மிஸ்டர் ஸ்ரீதரன் உங்களை சந்தேகப்படலாம்."

"மாட்டார்."

"அதெப்படி?"

"அவர்கிட்ட எல்லாம் சொல்லி இருக்கேன்."

"உண்மையாவா?"

"விமான நிலையத்தில் சந்திச்சபோது உங்களை, 'நான் சொன்னனே மித்ரா... அது இவர்தான். இவரைத்தான் முதல்ல நேசிச்சேன்'ன்னு சொல்ல நினைச்சேன். அது உங்களை தர்ம சங்கடப்படுத்தலாம்னுதான் நண்பர்னு சொன்னேன்."

"அப்படியா? பரவாயில்லை! இந்தக் காலத்தில இவ்வளவு பரந்த மனசோட உள்ள கணவர்களைப் பார்க்கிறது அபூர்வம்தான்."

"ஸ்ரீதர் ஒரு பக்கா 'ஜென்டில்மேன்' "

"கேக்க சந்தோஷமா இருக்குங்க. ஆக, பேச வேண்டியதை எல்லாம் போன்லயே பேசிடலாம்னு சொல்றீங்களா?"

"இல்லை மித்ரா, நேர்ல சந்திக்கலாம்."

"ஏதாவது ஒரு பொது இடத்துல சந்திக்கலாமா?"

"வேணாமே. ஸ்ரீதருக்கு உள்ள பரந்த மனசு நம்ம சமூகத்தில்

எல்லார்கிட்டேயும் இல்லையே மித்ரா."

"அப்போ... வேற எங்க பார்க்கலாம்?"

"வீட்டுக்கு வர்றீங்களா? சாயங்காலம் அஞ்சரை மணிக்கெல்லாம் ஸ்ரீதர் வந்துடுவார். அப்போ நாம பேசலாம்."

"அந்த நேரத்துல உன்னோடு தனியா பேச சந்தர்ப்பம் கிடைக்காமப் போகலாம்."

"அப்படின்னா அஞ்சரை மணிக்கு முன்னாடி வா... பேசலாம்."

"நாலு மணிக்கு."

"சரி, நாலு மணிக்கு வா."

வீட்டின் பக்கவாட்டில் தோட்டப் புல்வெளியில் வர்ண நிழற்குடை நட்டு, வட்ட மேசைக்கு எதிரெதிரில் வசதியான நாற்காலிகளில் மித்ராவும், மேனகாவும் அமர்ந்திருக்க... மேனகா பிஸ்கெட் கடித்தாள். மித்ரா குளிர்பானத்தை உறிஞ்சிக்கொண்டே அவளைப் பார்த்தான்.

"ஏன் கல்யாணம் பண்ணிக்கலை மித்ரா?"

"இதுக்கான பதில் உனக்குத் தெரியுமே!"

"என்னை நினைச்ச இடத்தில வேற ஒருத்தியை நினைக்க முடியலைன்னு எல்லா சினிமா படத்திலேயும் வர்ற மாதிரி வசனம் பேசப் போறீங்கள?"

"இல்லை. நிச்சயமா இல்லை. அப்படி நினைச்சேன்னா, வேற எந்தப் பொண்ணையும் நிமிர்ந்துகூட பார்க்கக்கூடாது. ஆனா, நான் அப்படி விரத வாழ்க்கை எல்லாம் வாழலை. வாரத்துக்கு ரெண்டு தடவை தற்காலிக கல்யாணம் பண்ணிக்கிறேன்."

"உடம்பு என்னத்துக்கு ஆகும்? ஏன் ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணி வாழ்க்கையில் 'செட்டில்' ஆகலாமே?"

"கல்யாணங்கிறது 'செட்டில்' ஆகிறதாகுமான்னு ஒரு கேள்வி இருக்கு. பதில் கிடைச்சதும் பண்ணிக்கலாம்னு இருக்கேன். அதை விடுங்க. இப்ப நீங்க எப்படி இருக்கீங்க?"

"உலகத்துலேயே அதிர்ஷ்டக்காரி நான்தான்னு நினைக்கிறேன். ரொம்ப நல்ல புருஷன். நினைச்சது எல்லாம் நடந்துடுது. வேற என்ன வேணும் எனக்கு?"

"எத்தனை குழந்தைங்க உங்களுக்கு?"



"எதிலேயும் அதிகம் கூடாதில்லையா? ரொம்ப சந்தோஷமா இருந்தாலும் திகட்டிடுமே! வருத்தப்படறதுக்கு ஏதாச்சும் ஒரு விஷயம் வேணுங்கிறதுக்காக அந்தப் பாக்கியத்தை மட்டும் கடவுள் எனக்குக் கொடுக்கலை."

"மன்னிக்கனும் மேனகா. ஒரு குட்டிப் பொண்ணையோ, பையனையோ கூப்பிட்டு எனக்கு அறிமுகப்படுத்தப் போறேன்னு நினைச்சிட்டிருந்தேன். டாக்டரை சந்தித்து ஆலோசனை பண்ணிட்டீங்களா?"

"ஆமாம்... என்கிட்டதான் குறை இருக்காம். ஒப்புக்கு ஒரு மருந்து எழுதிக் கொடுத்திருக்கார். சீக்கிரத்துல ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கலாம்னு இருக்கோம். வெளிப்படையா ஒரு கேள்வி கேக்கலாமா உன்னை...?"

"தாராளமா கேட்கலாம்..."

தன் கழுத்துச் சங்கிலியை முறுக்கிக்கொண்டே மெதுவாகக் கேட்டாள் அவள்.

"நான் துரோகம் செஞ்சதா நினைக்கிறீங்களா?"

அவன் தன் மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டிக்கொண்டான்.

"இதுக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை...."

"அவ்வளவு தூரம் உங்களை நேசிச்சிட்டு கடைசியில வலுக்கட்டாயமா பிரிந்து ஸ்ரீதரை கல்யாணம் பண்ணிக்கிட்டதுல என் வரைக்கும் சில நியாயங்கள் இருந்தது. ஆனா, அதையும் மீறி ஒரு குற்ற உணர்ச்சி இந்த நிமிஷம் வரைக்கும் இருக்கு. கடைசியா எழுதிய நீண்ட கடிதத்துல என் மனசை முழுக்கக் கொட்டி இருந்தேன். அதைப் படிச்சிட்டு நான் செஞ்சது நியாயம்னு நீங்க உணர்ந்தீங்களா?"

"இல்லை. அப்போ உணரலை. கோபம் கோபமா வந்தது. நீ என்னை ஏமாத்திட்டதா நினைச்சேன். நேர்ல பார்த்து சரமாரியா கேள்விகள் கேட்டு, கை வலிக்கிற வரைக்கும் அறையணும்னு துடிச்சேன்."

"அப்புறம்?"

"அப்புறம் என்னையே சுய அலசல் செஞ்சி பார்த்துக்கிட்டேன். கடிதத்துல நீ குறிப்பிட்டிருந்த பல விஷயங்களை ஆழமா யோசிச்சிப் பார்க்க பார்க்க... எனக்கு என் மேலயே கோபம் வந்துடுச்சி."





"அன்னைக்கு உங்களைப் பார்த்ததுக்கும், இன்னைக்கு பார்க்கிறதுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கு. சொல்லப் போனா நீங்கதானான்னு ஆச்சரியமாவே இருக்கு. எப்படி மாறினீங்க?"

"நீங்கதான் என்னை மாத்திட்டீங்க."

"அப்படியா?"

"பின்னே இல்லையா? சிலருக்கு தோல்விங்கிறது இன்னும் பலவீனப்படுத்தும். ஆனா, என்னை அதுவே பலப்படுத்துச்சுன்னுதான் சொல்லணும். பாருங்களேன், என்னையே உயிரா நேசிச்சி இன்னொருத்தருக்கு மனைவியாயிட்ட உங்கக்கூட இப்ப ரொம்ப எதார்த்தமா பேசிக்கிட்டிருக்க முடியுதே!"

"இந்தப் பக்குவம் உங்களுக்கு அப்ப இல்லை."

"உண்மை."

"இருந்திருந்தா நான் விலகி இருக்கமாட்டேன்."

"இனிமே அதைப் பேசறதுல அர்த்தம் இல்லை."

"ஆனா, மனசுங்கிறது எதையும் மறக்கறதே இல்லையே?"

"ரொம்ப சரி. வெளிப்படையாவே சொல்றனே! மேனகா இன்னைக்கு திருமதி. இது என் புத்திக்குப் புரியுது. ஆனாலும், என்னோட பேசின– பழகின பழைய மேனகாவை நினைச்சிப் பார்க்கத்தானே செய்றேன். அது தப்புதான். பண்பாடு இல்லைதான். ஆனா, அந்தரங்கத்துக்கு சட்டதிட்டம், வேலி, வரம்பு எதுவும் இல்லைங்க. அதுபாட்டுக்கு தாவும், துள்ளும். அந்தப் பழைய நினைப்புகளை அசை போடறதில ஒரு தித்திப்பு இருக்கு. உள் மனசு, நாக்கை சப்புக் கொட்டிக்கத்தான் செய்யுது. வக்கிரம் பிடிச்சது உள் மனசுங்க!"

மேனகா அமைதியாக தலையை மட்டும் அசைத்தாள்.

"நான் போன்ல பேசினதில, நேர்ல வந்ததில உங்களுக்கு எந்த விதத்திலயாவது சங்கடமா இருக்கா?"

"நிச்சயமா இல்லை. நான் வயசில உங்களைவிட சின்னவ. அதைவிட பழைய உரிமை இருக்கு. ஆனாலும், நீங்க எனக்கு மரியாதை கொடுத்து வாங்க, போங்கன்னு பேசிட்டிருக்கிற கண்ணியம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு."

"நான் வந்து போனதை ஸ்ரீதர்கிட்ட சொல்வீங்களா?"

"நிச்சயமா."

"பேசினதை எல்லாம்?"

"ஒரு எழுத்து விடாம."

"ரொம்ப அதிர்ஷ்டசாலிதான் நீங்க."

எழுந்துகொண்டான் மித்ரா.

"நான் புறப்படறேன்."

"பொய் சொல்லாம பதில் சொல்லுங்க. நீங்க இன்னமும் என்னையே நினைச்சிக்கிட்டு இருக்கீங்களா?"

"இல்லை. விமான நிலையத்துல உங்களைப் பார்த்ததும் எனக்கு பழசெல்லாம் ஞாபகம் வந்திச்சி. ஸ்ரீதரன் 'விசிட்டிங் கார்டு' கொடுத்திருந்தாரா? அதனால கூப்பிட்டுப் பேசினேன். நீங்க சந்திக்க விரும்ப மாட்டீங்கன்னு நினைச்சேன்."

"நீங்க உடனடியா ஒரு கல்யாணம் பண்ணிக்கிங்க."

"நீங்களே ஒரு பொண்ணு பார்த்துச் சொல்லுங்க" - "சரி. சிரித்துவிட்டு மேசை மேல் வைத்திருந்த தன் கார் சாவியை எடுத்துக்கொண்டான்.

கார் புறப்பட்டுச் செல்லும் வரை வாசலில் நின்றுவிட்டு, வீட்டுக்குள் சென்றாள் மேனகா.

## 6

**க**ண்ணாடி தம்ளரில் மூன்றாவது 'பெக்' ஊற்றப் போன சித்ராவைத் தடுத்து, பாட்டிலோடு வாங்கி நான்கைந்து மடக்கு குடித்துவிட்டு-கையோடு ஒரு கை 'சிப்ஸ்' அள்ளி வாயில் போட்டுக்கொண்ட மித்ரா, 'ஆஷ் டிரே' பள்ளத்தில் படுக்க வைத்திருந்த புகையும் சிகரெட்டை எடுத்து இழுத்தான்.

"அப்புறம்?" என்றாள் சித்ரா.

கட்டிலுக்கு அருகில், தரையில் ஒருக்கழித்து அமர்ந்து தன் முழங்கால்களைக் கட்டிக்கொண்டிருந்த அவள், கை இல்லாத ஜாக்கெட் அணிந்து இருந்தாள். கண்ணுக்கு சற்று அதிகப்படியாக மை இட்டிருந்தாள்.

"அப்புறம் என்ன... நான் கல்யாணம் பண்ணிக்கணுமாம். புறப்படறதுக்குள்ளே நாலு தடவையாவது சொல்லிட்டா. நான் இன்னும் அவளையே நினைச்சிட்டு இருக்கேனான்னு கேட்டா. பொய் சொல்லாம பதில் சொல்லணுமாம்."



"போடி..... உன்னை யாருடி நினைச்சான்னுட்டேன்."

"பொய் சொல்லிட்டே."

"என்ன சித்ரா, நீ கூட என்னைப் புரிஞ்சுக்கலையா? இப்ப நான் அவளை காதலிக்கிறேனா என்ன? இல்லையே! எனக்கு அவளைப் பழி வாங்கணும். அந்த வெறி மட்டும்தான். என்னை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்திக்கிட்டு அப்படியொரு நடிப்பு நடிச்சேன் தெரியுமா? அவ புருஷனைவிட என்னைதான் இப்ப அவ ஒரு பெரிய 'ஜென்டில்மேனா' நினைச்சிட்டிருப்பா. அவ்வளவு மரியாதையோட, பவ்வியத்தோட பேசினேன். இப்ப ரொம்ப பக்குவப்பட்டுட்டீங்கன்னு நற்சான்றிதழ் வேற கொடுத்தா. அப்போ இதே மாதிரி நான் இருந்திருந்தா என்னை விட்டு விலகியிருக்க மாட்டாளாம்."

"ஏன் மித்ரா, இதுவரைக்கும் நான் கேட்டதில்லை. கேட்டா கஷ்டப்படுவேன்னு விட்டுட்டேன். அதை இப்ப கேக்கட்டுமா?" இழுத்தாள் அவள்.

"என்ன?"

"அவ்வளவு தூரம் உன்னை காதலிச்சவ, உன்னைவிட்டு விலகறதுக்கு காரணம் என்ன? நீ என்ன செஞ்சே?"

"நான் அவளைக் காதலிச்சேன்."

"என்ன பேத்தல் இது?"

"ஆமாம். நான் அவளைக் காதலிச்ச மாதிரி யாரும் காதலிச்சிருக்க மாட்டாங்க. அவ்வளவு காதலிச்சேன் சித்ரா. காதல் என்னைப் பைத்தியமாக்கிடிச்சி. ஒரு தடவை நான் போட்டிருந்த சட்டை நல்லா இல்லைன்னு அவ சொல்லிட்டா. சொன்ன இடம் ஒரு ஓட்டல். அதே இடத்துல அந்தச் சட்டையைக் கழட்டி தீ பத்த வச்சி எரிச்சுட்டு வெறும் 'பேண்ட்'டோட ஸ்கூட்டர் ஓட்டிக்கிட்டு வீட்டுக்குப் போனேன். என்னைத் திட்டினா. என் விரலை அறுத்துக்கிட்டு நூறு தடவை ரத்தத்தால 'மன்னிக்கவும்'னு எழுதி அனுப்பிச்சேன்.

ஒரு தடவை ஆட்டோ டிரைவர் ஒருத்தன், கண்ணாடி வழியா அவளையே பார்த்தான். அவனை நடுரோட்ல இழுத்துப் போட்டு அடிச்சேன். பதினைஞ்சி நாள் ஜெயிலுக்கும் போயிட்டு வந்தேன்.

இது மாதிரி நிறைய! இதெல்லாம் அவ மேல நான் வச்சிருந்த அளவுக்கு அதிகமான காதல்னாலதான்னு அவளுக்குப் புரியலை.

பயிற்சி வகுப்புக்காக நான் ஒரு மாசம் ஆக்ராவுக்கு பக்கத்தில உள்ள அலுமினிய தொழிற்சாலைக்குப் போய் இருந்தேன். அந்த நேரத்துல எனக்கு ஒரு கடிதம் எழுதி வெச்சிட்டு, வேற ஒருத்தனை கல்யாணம் செய்துகிட்டா. பயிற்சி முடிஞ்சி வந்துதான் நான் அந்தக் கடிதத்தைப் பார்த்தேன். நிஜமாகவே பைத்தியம் பிடிக்கிற மாதிரி ஆகிடுச்சி. அவ வாழ்க்கைப்பட்ட இடத்தைத் தெரிஞ்சுக்க முடியலை. அவளைத் தேடி கொலை வெறியோட அலைஞ்சேன். அந்த வெறி இன்னைக்கும் இருக்கு. இப்போ அவளை கொல்றது என் நோக்கம் இல்லை. நான் தவிச்ச தவிப்பைப் போல அவளும் அனுபவிக்கணும்னு துடிக்கிறேன். அந்தக் கடிதத்தைப் படிச்சி நீங்க சமாதானம் ஆனீங்களான்னு கேட்டா! பாரு... நீயே படிச்சிப் பாரு! லட்சம் தடவை படிச்சும் நான் சமாதானமாகலை. சமாதானமாக முடியுமான்னு பாரு!"

கட்டிலின் மெத்தையைத் தூக்கி, அங்கு பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தை எடுத்து சித்ராவின் மடியில் போட்டான். "படிச்சுப் பாரு! என் காதலோட மரண சாசனம்!"

அந்தக் கடிதத்தை வெகு பத்திரமாகப் பிரித்துப் படித்தாள் அவள்.

'நான் நேசிக்கும் இனிய மித்ராவுக்கு...

மேனகாவின் இறுதியான கடிதம். இந்தக் கடிதம்– படிக்கிற உங்களை மட்டுமல்ல, எழுதிய என்னையும் மிகவும் வேதனைப்படுத்தியது என்பது உண்மை. மனதை பாறை ஆக்கிக்கொண்டு இதை எழுதுகிறேன்.

நீங்கள் ரொம்ப நல்லவர். ஆனால், சராசரி மனிதர் இல்லை. அதை சரியாகப் புரிந்துகொள்ளாமல் நான் உங்களுடன் மிக நெருங்கிப் பழகிவிட்டேன். இப்போது புரிந்துகொண்டதால் மேலும் தொடர்வதைப் பற்றி நிறைய யோசிக்க வேண்டியது இருக்கிறது.

கரும்பைப் பிழிந்து சாறெடுக்கலாம். ஆனால், நீங்கள் மலரைப் பிழிந்து மணம் நுகர விரும்புபவர். எதிலும் அதீதம் என்பது கசப்பு. உங்கள் நேசிப்பு உண்மையானதுதான். ஆனால், அதில் நீங்கள் காட்டும் விசித்திரமான தீவிரம் கவலைக்குரியது. பயப்பட வைப்பது. முரட்டுத்தனமான அன்பு என்று சமாதானப்படுத்திக்கொண்டு உங்களை சரி செய்ய பலமுறை



முயன்று தோற்ற பின்னர் இக்கடிதத்தில் என் முடிவை எழுதுகிறேன்.

எல்லை கடந்து என்னை நேசிப்பது பெருமைதான். ஆனால், அது என் உணர்வுகளையும், சுதந்திரத்தையும் பாதிக்கக்கூடியது. நாளைக்கு திருமணத்திற்குப் பிறகு என்னோடு பேசுகிற பால்காரனும், தபால்காரனும், காய்கறி வண்டிக்காரனும் உங்களிடம் அடிபட்டு செத்துப் போவார்கள் என்று பயப்படுகிறேன்.

என்னை உங்கள் பிரத்தியேக வட்டத்திற்குள் நிறுத்தி அழகு பார்த்து கொஞ்சுவீர்கள். ஒரு ஜோசியக் கிளி ஆகிவிடுவேன் நான். என் இறக்கைகள் வெட்டப்படும். அதில் எனக்குச் சம்மதமில்லை.

தயவுசெய்து என்னைப் புரிந்து கொள்ளுங்கள். எனக்கு உங்கள் மீது கோபம் இல்லை. என் வாழ்க்கை பற்றிய பயமே காரணம். என்னை மன்னித்துவிடுங்கள். உங்களை என் வாழ்க்கைத் துணையாக ஏற்றால் நிறைய பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டி வரும் என்பதால்... நான் உங்களைவிட்டு விலக விரும்புகிறேன்.

இந்தக் கடிதத்தைப் படித்ததும் கிழித்து விடாதீர்கள். தயவு செய்து பத்திரப்படுத்தி வையுங்கள். என்றைக்காவது ஒரு நாள் நீங்கள் தெளிந்து பக்குவம் அடைவீர்கள். அப்போது இந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தால், என் மேல் கோபப்படவே மாட்டீர்கள்.

இப்படிக்கு,
இயலாது என்று புரிந்தும்
உங்களை மறக்க விரும்பும்,
**மேனகா.**

படித்துவிட்டு அமைதியாக நிமிர்ந்து பார்த்தாள்.

"படிச்சியா?"

"மேனகாவுக்குப் பொறுமை இல்லை, மித்ரா."

"எதுக்கு?"

"உன்னை முழுசா புரிஞ்சுக்க. உன்கிட்ட பெரிசா எந்த மாற்றமும் நான் பார்க்கலை. இதே மாதிரி அன்னைக்கு ஒரு நாள் தியேட்டர்ல என்னைத் தொட்ட ஒருத்தனை நீ போட்டு புரட்டினியே... அப்ப எனக்கு பயம் வரலை. பெருமிதமாத்தான் இருந்தது. 'அய்யோ! இவருக்கு எவ்வளவு அழுத்தமான ஆசை நம்ம மேல'ன்னு உருகிப் போனேன்."

"அதான் உனக்கும், அவளுக்கும் வித்தியாசம். பாரேன்– அவளைப்

பத்திப் பேசினா உனக்குப் பிடிக்காது. அது எனக்கும் தெரியும். ஆனா, உன் கூட பேசறப்ப பாதி நேரம் அவளைப் பத்திதான் நான் பேசறேன். நீ பொறுமையா இருக்கே. இந்த சகிப்புத்தன்மை இல்லை அவளுக்கு. அது இல்லாதவளுக்கு... நான் தண்டனை கொடுக்க வேணாமா?"

"வேணாமே... விட்டுடேன்."

"ஏன் விடணும்?"

"சந்தோஷமா இருக்கா அவ."

"அதான் எனக்குப் பிடிக்கலை. என்னை சங்கடப்படுத்திட்டு அவ சந்தோஷமா இருக்கிறதா? கூடாது... இதோ பாரு! நான் அவளை தண்டிச்சித்தான் ஆகணும். அதுல எந்த மாற்றமும் இல்லை. அதுக்கு நீதான் உதவப்போறே. என்ன செய்யணும், ஏது செய்யணும்னு எல்லாம் யோசிச்சிட்டேன். எனக்கு உதவுவியா... மாட்டியா?"

சித்ரா எழுந்து கட்டிலில் அவன் அருகில் அமர்ந்தாள்.

"இப்ப வாழ்ந்திட்டிருக்கிறது என்னோட ரெண்டாவது ஜென்மம். இதைக் கொடுத்ததே நீதான். நான் உன்னோட அடிமை மாதிரி. அறிவுரை சொன்னேன். பிடிக்காதுன்னு தெரிஞ்சுதான் சொன்னேன். உன் மனசுக்கு அமைதி தர்ற எதையும் தடுத்ததே இல்லை. சிகரெட் பிடிக்காதே- தண்ணி அடிக்காதே... இப்படி எப்பவாவது தடுத்திருக்கேனா? நான் தடுத்தாலும் நடக்காது. அது வேற விஷயம். ரணப்பட்டுக் கிடக்குது உன் மனசு. இதெல்லாம்தான் உனக்கு கொஞ்சம் நிம்மதியைத் தருது. அதனாலதான் நான் எதுவும் சொல்றதில்லை.

அதே மாதிரி நான் எவ்வளவு சொன்னாலும் உன் கொதிப்பு மாறப் போறதில்லை. நீ அடிபட்ட புலி. பழி வாங்கினாதான் நிதானத்துக்கு வருவே. நிதானத்துக்கு வரணும். அதுதான் எனக்கு வேணும். அதுக்காக நீ என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்வேன். உன்னை ஏமாத்தினவ வாழ்க்கை முக்கியமில்லை. நொந்து போன உன் வாழ்க்கைதான் முக்கியம். சொல்லு, நான் என்ன செய்யணும்?"

உணர்ச்சி வசப்பட்ட மித்ரா அவளை அப்படியே அணைத்துக்கொண்டு நெற்றியில் முத்தமிட்டான்.

"சொல்லு, அவளைக் கொலை செஞ்சிட்டு ஜெயிலுக்குப் போகட்டுமா?"

"மண்டு! ஜெயிலுக்கு எதுக்குப் போறே? அவளை ஒரே நாள்ல சாகடிக்கிறதுன்னா அது என்னால முடியாதா? எதுக்காக உன் உதவியைக் கேக்கப் போறேன்? அவளை தினம் தினம் சாகடிக்கப் போறேன்."

"எப்படி?"

"பேச்சுக்குப் பேச்சு தன் புருஷன் 'ஜென்டில்மேன், ஜென்டில்மேன்'னு சொன்னா இல்லையா, அங்கேதான் வேட்டு வைக்கப் போறேன். வெடி! கன்னி வெடி! சித்ராங்கிற கன்னி வெடி" என்றான் மித்ரா.

"நான் ஒண்ணும் கன்னி இல்லை" என்றாள், அவன் காதோரம் கிசுகிசுப்பாக!


**ராணி முத்து சந்தா விவரம்**

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |
| **வெளிநாடுகள்** | |
| ஒரு ஆண்டு | ரூ. 1,225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.


## 7

அன்றில் இருந்து ஏழாவது நாள்.

இரவு ஒன்பதரை மணிக்கு டெலிபோன் ஒலித்தபோது– ஸ்ரீதரன் குளியல் அறையில் பைஜாமா உடையில் பல் விளக்கிக் கொண்டிருக்க, கட்டிலின் மெத்தைக்கு சலவை விரிப்பை விரித்த மேனகா வந்து தொலைபேசியை எடுத்து "ஹலோ" என்றாள்.

அவள் சத்தம் கேட்டதும் எதிர்முனையில் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

"யாரு மேனகா?"– வாயைத் துடைத்துக்கொண்டே வந்தான்.

"தப்பா நம்ம நம்பரைக் கூப்பிட்டு இருப்பாங்கன்னு நினைக்கிறேன்.

"நான் பேசினதும் வச்சிட்டாங்க" என்றவள் மீண்டும் மெத்தை மேல் விரிப்பை விரிக்கத் தொடங்கினாள்.

மறுநாள் காலையில் ஸ்ரீதரன் குளித்துக்கொண்டு இருக்கும்போது, மேனகா சமையல் அறையில் பூரிக்கு மசால் செய்துகொண்டிருந்தாள். அப்போது தொலைபேசி ஒலித்தது.

மேனகா வந்து எடுத்து, "ஹலோ... மேனகா ஸ்ரீதரன்." எதிர்முனை பதில் ஏதும் சொல்லாமல் துண்டித்துக்கொண்டது.

அவளுக்குப் புரியவில்லை. 'என்ன இது? நேற்று இரவும் இதே போலத்தான் 'ஹலோ' என்றதும் வைத்தார்கள். இன்றைக்கும் அதே போல துண்டிக்கிறார்கள். யார்? ஏன்?'

ஸ்ரீதரன் 'டைனிங் டேபிளு'க்கு வந்ததும், தட்டில் பூரிகளை வைத்துக்கொண்டே தொலைபேசி வந்த விபரத்தைச் சொன்னாள்.

"அப்படியா? இதென்ன விளையாட்டு, அறிவு இல்லையா... அடுத்த தடவை இப்படி போன் வந்தா கன்னா பின்னான்னு திட்டிடு."

ஸ்ரீதரன் ஆபீசுக்குப் புறப்படும்போது மறுபடி தொலைபேசி ஒலிக்க, சற்று எரிச்சலுடன் அதை எடுத்த மேனகா– "ஹலோ" என்றாள்.

"ஸ்ரீதரன் இருக்காரா மேடம்? சுவாமிநாதன் பேசறேன்."

மேனகா சிரிப்பை அடக்கிக்கொண்டு, "உங்க நண்பர்" என்று ரிசீவரை அவனிடம் நீட்டினாள். ஸ்ரீதரன் பேசி முடித்துவிட்டு "நல்லவேளை திட்டாம இருந்தியே. நான் வர்றேன்" என்றான்.

அன்றைக்கு மாலை.

ஸ்ரீதரன் இன்னும் வீட்டிற்கு வரவில்லை.

மேனகா முகம் கழுவி, புடவை மாற்றிக்கொண்டிருந்தவள் தொலைபேசி ஒலிப்பதைக் கேட்டதும், உடனே யோசனை செய்தாள்.

'இந்த முறை எதுவும் பேசாமல் அமைதியாக இருக்க வேண்டும் எதிர்முனையில் இருந்து ஏதாவது பேசட்டும்.'

மேனகா 'ரிசீவரை' எடுத்து காதில் வைத்துக்கொண்டு பிடிவாதமாக மவுனமாக இருந்தாள்.



"ஹலோ, ஸ்ரீதர்தானே?" என்று எதிர்முனையில் பெண் குரல்!

மேனகா தொடர்ந்து மவுனமாக இருந்தாள்.

"ஹலோ, ஸ்ரீதர்? நீங்கதானே? விளையாடாதீங்க பிளீஸ்..."

மேனகாவுக்கு 'திக்' என்றது. 'ஒரு பெண் உரிமையோடு ஸ்ரீதர் என்று பெயர் சொல்லி அழைப்பதா?'

அவள் மேலும் மவுனமாக இருக்கவே... இப்போது எதிர்முனையிலும் அமைதி ஏற்பட்டு, ஒரு சில தயக்க விநாடிகளுக்குப் பிறகு 'ரிசீவர்' வைக்கப்பட்டது.

லேசான அதிர்ச்சியுடன் கட்டிலில் அமர்ந்தாள் மேனகா.

'யார் அந்த தொலைபேசிப் பெண்? அலுவலகம் தொடர்பாக பேசுவதென்றாலோ, இல்லை நட்பு ரீதியாகப் பேசுவதென்றாலோ இந்த ரகசியம் தேவையில்லையே!

இரண்டு நாட்களாக அழைத்து, தொலைபேசியை அவர் எடுக்காமல் நான் எடுத்துப் பேசியதால் துண்டித்துவிட்டாள். இப்போது நான் குரல் கொடுக்காததால் அவர் என்று நினைத்துப் பேசத் தொடங்கி, சந்தேகப்பட்டு வைத்துவிட்டாள்.

இதற்கெல்லாம் என்ன அர்த்தம்?'

அவளுக்கு வியர்த்தது. படபடப்பாக வந்தது.

"ஹாய் மேனகா" –கழுத்தில் கிடந்த 'டை'யை கழற்றிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்த ஸ்ரீதரனை மிரட்சியுடன் பார்த்தாள்.

'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?'

"என்னம்மா உம்முன்னு இருக்கே? ஏதாவது குழப்பமா?

அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்துவிட்டு, அருகில் அமர்ந்து 'ஷூ– ஸாக்ஸை' கழற்றிப் போட்டு, கட்டிலுக்கு அடியில் தள்ளினான்.

"ஒண்ணுமில்லைங்க. லேசா தலைவலி" என்றாள்.

'கேட்டுவிடலாமா? கேட்டுவிடலாமா?'– மனம் துடித்தது.

"அப்படீன்னா... நல்லா ஓய்வு எடுத்துக்கோ" என்றவன், தன் பேண்ட்டை உருவிப் போட்டு, நீளமான டவலை இடுப்பில் கட்டிக்கொண்டு, "குளிச்சிட்டு வந்துடறேன்" என்று குளியல் அறைக்குள் சென்றான்.

'நான் சந்தேகப்படுவது சரியா... இல்லை தப்பா?'– குழப்பம்

அவள் மனதை ஆட்கொண்டது.

ஆபீசுக்கு வழக்கமாக அவன் எடுத்துச் செல்லும், சிறிய பெட்டியைப் பார்த்தாள் மேனகா.

'அதைத் திறந்து பார்க்கலாமா?'

பார்க்க வேண்டும் என்று தோன்றியது.

அதை எடுத்துத் தன் மடி மீது வைத்துத் திறந்து பார்த்தாள்.

உள்ளே அலுவலக சம்பந்தப்பட்ட கோப்புகளும், சில வங்கி கணக்குப் புத்தகங்களும் மட்டுமே இருந்தன.

மூடினாள்.

'என்ன எதிர்பார்த்தேன்? ஏன் சோதனை போட்டேன்? கல்யாணமாகி இத்தனை நாட்களில் ஒரு தடவைகூட இந்தப் பெட்டியை நான் திறந்து பார்த்ததில்லை.

ச்சே! அனாவசியமாக சந்தேகப்படுகிறேனா?'

குளித்துவிட்டு இடுப்பில் ஈரமான துண்டுடன் வெளியே வந்த ஸ்ரீதரன், ஒரு பாடலை விசில் செய்தபடி தலை சீவிக்கொள்ளத் தொடங்க...

"இப்ப கொஞ்சம் முன்னாடி மர்ம போன் அழைப்பு வந்திச்சிங்க."

"என்னடா இது பேஜார்! மறுபடி நீ 'ஹலோ'ன்னதும் வச்சிட்டானா?"

"இல்லை. இந்தத் தடவை நான் எந்தக் குரலும் கொடுக்காம அமைதியா இருந்தேன்."

"அப்புறம்?"

" 'ஹலோ ஸ்ரீதர்தானே'ன்னு கேள்வி வந்திச்சி. நான் பதில் சொல்லலை. மறுபடி அதே கேள்வி. அப்பவும் நான் பதில் சொல்லலை வச்சிட்டாங்க."

"என் நண்பர் யாராச்சும் கூப்பிட்டிருக்கப் போறாங்க. பதில் இல்லைன்னதும் 'ராங் நம்பர்'ன்னு வச்சிருப்பாங்க."

"உங்களுக்கு பெண் நண்பர்கள் இருக்காங்களா?"

தலை சீவிக்கொண்டிருந்தவன் நிறுத்தி, திரும்பி நெற்றியைச் சுருக்கி அவளைப் பார்த்தான். "பேசினது பெண்ணா?"

"ஆமாம்! உங்க பேர் சொல்லிக் கேட்டாங்க."



"தெரியலையே... யாரு அப்படி? 'மிஸ்டர் ஸ்ரீதரன்'னு சொன்னாங்களா?"

"இல்லை. மிஸ்டர் இல்லை... ஸ்ரீதரன்னு கூட சொல்லலை. சுருக்கி ஸ்ரீதர்ன்னு உரிமையா சொன்னாங்க."

"இல்லை! இருக்கவே முடியாது. நீ என்கிட்டே விளையாட்டு பண்ணுறே."

"நிஜமா நான் கேட்டதைத்தான் சொல்றேன்."

"வாய்ப்பே இல்லை"– என்றவன் அவள் அருகில் வந்து, "யாரோ விளையாட்டு பண்ணுறாங்கன்னு நினைக்கிறேன். நான் வீட்ல இருக்கிறப்ப போன் வந்தா நீ எடுக்காதே! நானே எடுத்து பேசறேன். சரியா...?" என்றான்.

மறுநாள் முழுக்க தொலைபேசி அழைப்பு எதுவும் வரவில்லை.

அதற்கு அடுத்த நாள் மதியம் பன்னிரெண்டு மணிக்கு மேனகா, டி.வி.யில் ஆங்கிலப் படம் போட்டு பார்த்துக் கொண்டிருந்தபோது தொலைபேசி ஒலித்தது.

எடுத்து மவுனமாக இருந்தாள்.

"அலோ, அம்மாதானே பேசறது?" என்று கட்டையான ஆண் குரல் கேட்டது.

"மேனகா ஸ்ரீதரன் பேசறேன். உங்களுக்கு யார் வேணும்?"

"வணக்கம்மா. நான் நம்ம தொழிற்சாலையில் வேலை பார்க்கற நூத்தி அறுபது பேர்ல ஒருத்தன்ம்மா. என் பேரைச் சொல்ல விரும்பலை. ஏன்னா அது என் வேலைக்கே உலை வச்சிடும். ஆனா, ரொம்ப நாள் யோசிச்சி, தயங்கி... அப்புறமா முடிவுக்கு வந்து உங்களுக்கு இப்ப போன் பண்ணுறேன்."

"என்ன விஷயம், சொல்லுங்க?"

"எனக்கு நம்ம முதலாளியை ரொம்பப் பிடிக்கும்மா. சம்பளம் தர்ற எஜமான்கிற மரியாதை மட்டுமில்லை. அவரோட பேச்சு, நடவடிக்கை இதெல்லாம் எனக்கு பிடிக்கும். அவருக்கு மகாலட்சுமி மாதிரி நீங்க வந்து வாய்ச்சிங்க. உங்க ரெண்டு பேரையும் ஜோடியா பார்க்கிறப்ப எல்லாம் நான் வீட்ல பொண்டாட்டிகிட்ட 'இதுதாண்டி பொருத்தமான ஜோடி'ன்னு சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டுக்குவேன்ம்மா..."

"இப்படி வளவளன்னு பேசறது எனக்குப் பிடிக்காது. நேரடியா விஷயத்துக்கு வாங்க..."

"அம்மா, நம்ம முதலாளிக்குத் தெரியாம ரகசியமா வெளியில எ கைக்காசு போட்டு இந்த போன் பண்ணுறேம்மா. பேசிடணும்னு தைரியமா முடிவெடுத்தேன். ஆனா, உங்க குரலைக் கேட்டதும் எனக்கு வாயே வரலைம்மா... எப்படிச் சொல்றதுன்னே புரியலை..."

"பதற்றப்படாம சொல்லுங்க..."

"தேங்கா உடைச்ச மாதிரி சொல்லிடறேன்ம்மா... உங்க நன்மைக்காகத்தான் சொல்றேன். இப்ப கொஞ்ச நாளா நம்ம முதலாளியோட போக்கு சரியில்லைம்மா."

'திக்' என்றது, மேனகாவிற்கு.

மவுனமாக இருந்தாள்.

"அடிக்கடி ஒரு பொம்பளை போன் பண்ணுது. இவரும் சிரிச்சு சிரிச்சு பேசறார். எவ்வளவு நேரம்? அரை மணி நேரம், முக்கா மணி நேரம்னு பேசறார். சங்கடமா இருக்கும்மா. ஒரு தடவை நம்ம முதலாளியோட கார்ல ஒரு பொண்ணைப் பார்த்ததா என் கூட வேலை பார்க்கிறவன் சொன்னான். நான் நம்பலை. இன்னிக்கு ஒரு வேலையா முதலாளியோட அறைக்குப் போனப்ப அவர் போன்ல அதே பொண்ணு கூட பேசிட்டு இருந்தது காதுல விழுந்தது 'பகீர்'னு ஆகிடுச்சிம்மா."

"என்ன பேசினார்?" என்றாள், உணர்ச்சியே இல்லாமல்.

"நான் 'விசிட்டிங் கார்டு' கொடுத்து அனுப்பறேன். மாம்பலத்துல உள்ள அந்த ஜவுளிக்கடைக்கு போன் பண்ணியும் சொல்லிடறேன் உன் பிறந்த நாளுக்கு உனக்கு பிடிச்சதா ஒரு டஜன் சேலை வாங்கிக் சித்ரான்னு சொன்னாரும்மா."

"என்னது, என்னது... என்ன பேர் சொன்னாரு?"

"சித்ரான்னு சொன்னாரும்மா. கண் நிறைஞ்ச பொண்டாட்டி இருக்கிறப்ப எவளோ ஒருத்திக்கு இப்படி வாரி இறைக்கிறது நியாயமாம்மா? உங்களுக்குத் தெரிஞ்சே ஆகணும்னு நினைச்சேன் எடுத்துச் சொல்லுங்கம்மா. இந்த மாதிரி போன் வந்திச்சின்னு சொல்லாதீங்க. நீங்களா தெரிஞ்சிக்கிட்ட மாதிரி கேளுங்க இதையெல்லாம் ஆரம்பத்திலேயே கிள்ளிடணும்மா. வளர விட்டா பெரிய பிரச்சினையா வந்து நிக்கும். என் மனசுல பட்டதை



சொன்னேன். வச்சிரட்டுமாம்மா?"

அவள் "ம்" என்றது, அவளுக்குக்கூட கேட்கவில்லை. 'ரிசீவர்' கை நழுவி கீழே விழ இருந்தது. சமாளித்துப் பிடித்து வைத்தாள்.

'என் ஸ்ரீதரனா இப்படி?

ஏன்? என்னால் ஒரு குழந்தைக்கு தாயாக முடியாது என்று அறிந்த பிறகா?

இல்லை... நீங்கள் இப்படிப்பட்டவர் என்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

நிஜம்தானா? எவனோ ஒருவன் போன் செய்வதை வைத்து நான் நம்பிவிடுவதா? அன்றைக்கு போனில் பேசிவிட்டு அவசரமாக இணைப்பை துண்டித்தாளே! இப்போது இரண்டையும் இணைத்துப் பார்க்க வேண்டியது இருக்கிறதே!!

அவள்தான் சித்ராவா?'

மேனகாவிற்கு ஆத்திரம் பொங்கியது.

பிறந்தநாளுக்கு ஒரு டஜன் சேலைகளா?

மேனகா எழுந்தாள். தன் கைப்பையில் பணம் எடுத்து வைத்துக்கொண்டு, கார் சாவி எடுத்துப் புறப்பட்டாள்.

அரை மணி நேரத்தில் மாம்பலத்தில் உள்ள அந்தப் பிரபல ஜவுளிக்கடை முன் ஆஜரானாள்.

கால்பந்து மைதானம் அளவிற்கு இருந்த மூன்று மாடிக் கடையில் கூட்டம் நெரித்தது. மின்னணு இயந்திரங்கள் இனிய ஓசைகளுடன் "பில்" அடித்துத் துப்பின. எல்லோரும் பளபளப்பான ஜவுளிப் பைகளுடன் வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

தலைமைக் காசாளரை அணுகினாள்.

சந்தனப் பொட்டு, பட்டு ஜிப்பா, விரலெல்லாம் மோதிரமாய் இருந்த அவரிடம், "சார்" என்றாள்.

"என்னங்கம்மா?" என்றார்.

"நான் மிஸஸ் மேனகா ஸ்ரீதரன். அபிநயா இண்டஸ்ட்ரீஸ்ன்னு..."

"அய்யோ! நல்லா தெரியுமே மேடம்."

"காலையில் என் கணவர் உங்களுக்கு போன் செய்தாராமே...?"

"ஆமா, ஆமா. பண்ணினார். அவர் சொன்ன மாதிரி அவரோட

"இப்படி வளவளன்னு பேசறது எனக்குப் பிடிக்காது. நேரடியா விஷயத்துக்கு வாங்க..."

"அம்மா, நம்ம முதலாளிக்குத் தெரியாம ரகசியமா வெளியில என் கைக்காசு போட்டு இந்த போன் பண்ணுறேம்மா. பேசிடணும்னு தெரியமா முடிவெடுத்தேன். ஆனா, உங்க குரலைக் கேட்டதும் எனக்கு வாயே வரலைம்மா... எப்படிச் சொல்றதுன்னே புரியலை..."

"பதற்றப்படாம சொல்லுங்க..."

"தேங்கா உடைச்ச மாதிரி சொல்லிடறேன்ம்மா... உங்க நன்மைக்காத்தான் சொல்றேன். இப்ப கொஞ்ச நாளா நம்ம முதலாளியோட போக்கு சரியில்லைம்மா."

'திக்' என்றது, மேனகாவிற்கு.

மவுனமாக இருந்தாள்.

"அடிக்கடி ஒரு பொம்பளை போன் பண்ணுது. இவரும் சிரிச்சி சிரிச்சி பேசறார். எவ்வளவு நேரம்? அரை மணி நேரம், முக்கா மணி நேரம்னு பேசறார். சங்கடமா இருக்கும்மா. ஒரு தடவை நம்ம முதலாளியோட கார்ல ஒரு பொண்ணைப் பார்த்ததா என் கூட வேலை பார்க்கிறவன் சொன்னான். நான் நம்பலை. இன்னிக்கு ஒரு வேலையா முதலாளியோட அறைக்குப் போனப்ப அவர் போன்ல அதே பொண்ணு கூட பேசிட்டு இருந்தது காதுல விழுந்ததும் 'பகீர்'ன்னு ஆகிடுச்சிம்மா."

"என்ன பேசினார்?" என்றாள், உணர்ச்சியே இல்லாமல்.

"நான் 'விசிட்டிங் கார்டு' கொடுத்து அனுப்பறேன். மாம்பலத்துல உள்ள அந்த ஜவுளிக்கடைக்கு போன் பண்ணியும் சொல்லிடறேன். உன் பிறந்த நாளுக்கு உனக்கு பிடிச்சதா ஒரு டஜன் சேலை வாங்கிக்க சித்ரான்னு சொன்னாரும்மா."

"என்னது, என்னது... என்ன பேர் சொன்னாரு?"

"சித்ரான்னு சொன்னாரும்மா. கண் நிறைஞ்ச பொண்டாட்டி இருக்கிறப்ப எவளோ ஒருத்திக்கு இப்படி வாரி இறைக்கிறது நியாயமாம்மா? உங்களுக்குத் தெரிஞ்சே ஆகணும்னு நினைச்சேன் எடுத்துச் சொல்லுங்கம்மா. இந்த மாதிரி போன் வந்திச்சின்னு சொல்லாதீங்க. நீங்களா தெரிஞ்சிக்கிட்ட மாதிரி கேளுங்க இதையெல்லாம் ஆரம்பத்திலேயே கிள்ளிடணும்மா. வளர விட்டா பெரிய பிரச்சினையா வந்து நிக்கும். என் மனசுல பட்டதை சொன்னேன். வச்சிரட்டுமாம்மா?"

அவள் "ம்" என்றது, அவளுக்குக்கூட கேட்கவில்லை. 'ரிசீவர்' கை நழுவி கீழே விழ இருந்தது. சமாளித்துப் பிடித்து வைத்தாள்.

'என் ஸ்ரீதரனா இப்படி?

ஏன்? என்னால் ஒரு குழந்தைக்கு தாயாக முடியாது என்று அறிந்த பிறகா?

இல்லை... நீங்கள் இப்படிப்பட்டவர் என்று என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

நிஜம்தானா? எவனோ ஒருவன் போன் செய்வதை வைத்து நான் நம்பிவிடுவதா? அன்றைக்கு போனில் பேசிவிட்டு அவசரமாக இணைப்பை துண்டித்தாளே! இப்போது இரண்டையும் இணைத்துப் பார்க்க வேண்டியது இருக்கிறதே!!

அவள்தான் சித்ராவா?'

மேனகாவிற்கு ஆத்திரம் பொங்கியது.

பிறந்தநாளுக்கு ஒரு டஜன் சேலைகளா?

மேனகா எழுந்தாள். தன் கைப்பையில் பணம் எடுத்து வைத்துக்கொண்டு, கார் சாவி எடுத்துப் புறப்பட்டாள்.

அரை மணி நேரத்தில் மாம்பலத்தில் உள்ள அந்தப் பிரபல ஜவுளிக்கடை முன் ஆஜரானாள்.

கால்பந்து மைதானம் அளவிற்கு இருந்த மூன்று மாடிக் கடையில் கூட்டம் நெரித்தது. மின்னணு இயந்திரங்கள் இனிய ஓசைகளுடன் "பில்" அடித்துத் துப்பின. எல்லோரும் பளபளப்பான ஜவுளிப் பைகளுடன் வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

தலைமைக் காசாளரை அணுகினாள்.

சந்தனப் பொட்டு, பட்டு ஜிப்பா, விரலெல்லாம் மோதிரமாய் இருந்த அவரிடம், "சார்" என்றாள்.

"என்னங்கம்மா?" என்றார்.

"நான் மிஸஸ் மேனகா ஸ்ரீதரன். அபிநயா இண்டஸ்ட்ரீஸ்ன்னு..."

"அய்யோ! நல்லா தெரியுமே மேடம்."

"காலையில என் கணவர் உங்களுக்கு போன் செய்தாராமே...?"

"ஆமா, ஆமா. பண்ணினார். அவர் சொன்ன மாதிரி அவரோட

**சிறுகதை**

# ஒரு வாய்க் கஞ்சி

— ரத்னமாலா

ஒருவாய்க் கஞ்சிக்கு நான் தெனமும் படற பாடு இருக்கே... அது ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

விருதுநகர் பக்கம் ஒரு குக்கிராமம் எங்க ஊர். ஆத்தாவுக்கு, பக்கத்தில உள்ள அரிசி மில்லில் வேலை. அப்பா இல்லை.

ஆத்தாதான் என்னை கஞ்சி ஊத்தி வளத்தா.

பானையில தளதளன்னு தண்ணிய கொதிக்கவிட்டு, கால் படி கிச்சலி சம்பா சிறு நொய் அரிசியைப் போட்டு, கொழஞ்சி வரும்போது துளி நெய்விட்டு கிண்டி தோட்டத்து அகத்திக்கீரை





குழம்பை விட்டு மணக்க மணக்க பக்குவமா இறக்கி வச்சா...

ஐயோ... வாசம் தூக்கும். உட்கார்ந்ததும் மண் கலயத்தில் சுடச்சுட பரிமாறுவா. மேலே ஜாடியில் கைவிட்டு கிச்சலிகாய் ஊறுகாயும், ஓலை டப்பாவில் பொறித்துப் போட்ட அப்பளத்தையும் அள்ளி வைக்கறதுக்குள்ள பாதி கஞ்சி காலியாயிடும்.

'என் ராசாவுக்கு எம்புட்டு பசியோ! இன்னும் கொஞ்சம் சுருக்க வந்து செஞ்சி வச்சிருக்கலாம். எங்கே... வேலை மாளமாட்டேங்குதே?' என்று உருகிவிடுவாள்.

வயிறு முட்ட... 'போதும் போதும்' என்று குடித்ததும், 'அப்பாடா...' என்றிருக்கும். சாயந்தரம் சாப்பிட ஒரு வாழைப்பழமும், வெல்லம் கலந்த பொட்டுக் கடலையும் மறக்காம எனக்கு எடுத்து வைத்துவிட்டு மறுபடியும் எட்டு மணிக்குத்தான் வருவா. மண்ணெண்ணெய் விளக்கில் படித்துக்கொண்டிருப்பேன். பார்த்து பூரித்துவிடுவா.

'என் ராசா, நீயாவது பெரிய ஆளா ஆகுப்பா' என்று உச்சி முகர்ந்துவிட்டு– சுடச்சுட களி கிண்டி, அவரக்காய் குழம்புடன் பரிமாறுவா. நான் பசியோடு விழுங்குவதை ஆசையோடு பார்ப்பா.

ஆனா இப்ப... நான் ஒருவாய்க் கஞ்சிக்கு தவியாய் தவிக்கிறேன். ராணுவத்தில் சேர்ந்து ஆறு மாசம் ஆகுது. தினமும் ஆளை அடிக்கிற மாதிரி சப்பாத்தி. தொட்டுக்க 'காந்தா'. அவ யாருன்னு கேக்காதீங்க. நம்ம ஊரு வெங்காயம்தான்! எல்லாம் அடுக்கி வச்சி சாப்பிடுவாங்க. எனக்குத்தான் இறங்கவே இறங்காது.

ராணுவத்தை பொறுத்தவரை சாப்பாட்டுக்குப் பஞ்சமே இல்லை. தினமும் ஆடு, கோழி, மீன் என்று எல்லாமே கிடைக்கும். நான் சைவம் இல்ல. இருந்தாலும் ஏழ்மை காரணமா இதெல்லாம் சாப்பிட்டு பழக்கப்படாதவன்.

சாதாரணமாகவே அம்மா ஞாபகம் வரும். பசிவேளை வந்தா வாடி வதங்கிப் போயிடுவேன். அம்மாவிடமிருந்து கடிதம் வந்தது.

'பாண்டி கண்ணு, எனக்கு ஒரு நேரம் நல்லா இருக்கற ஒடம்பு... மற்றொரு வேளை நல்லா இருக்கிறதில்லை: மில்லு வேலையில் இருந்து நின்னுட்டேன். நீ அனுப்பற பணத்தை வச்சிக்கிட்டு சந்தோஷமாதான் இருக்கேன். உன் படிப்பு– உத்தியோகத்தைப் பாத்து பணக்காரங்க உனக்கு பொண்ணு

குடுக்க சம்மதிச்சி இருக்காக. உடனே வந்து கல்யாணத்தை முடிச்சிக்கிட்டு போ. இது என்னோட உத்தரவு.

இப்படிக்கு,
உன் அன்புள்ள ஆத்தா
செந்தூரபாண்டியம்மா.'

கல்யாணம் முடிஞ்ச கையோடு, ராணுவ குடியிருப்பில் வீடு கிடைச்சது. புதுப் பெண்ணை கூட்டிகிட்டு, ஊரு வந்து சேர்ந்தேன். தன் கடமை முடிஞ்சுதுன்னு... ஆத்தா கண்ணை மூடிட்டா.

முதலிரவு –

புவனா என்னை துருவித் துருவி கேட்டாள்.

'உங்களுக்கு என்ன புடிக்கும்...?'

எனக்கு... தொண்டை வரை வந்ததை அப்படியே விழுங்கிட்டேன்.

"நீ என்ன செஞ்சாலும் புடிக்கும்."

பெரிய இடத்துப் பெண். என்னைப் போல ஏழையல்ல. ஊருக்கே சோறு வடிச்சிப் போட்டவன் அவ அப்பன். 'சொன்னா என்ன நினைப்பாளோ?' என்ற பயம் எனக்குள் இருந்தது.

என் ஆசைகளை எல்லாம் ஆத்தாவோடு சேர்த்து புதைச்சிட்டு, புது வாழ்க்கைக்கு தயாரானேன்.

மறுநாள் மத்தியானம் வீடு திரும்பினேன்.

ஏதோ பழக்கப்பட்ட ஒரு மணம் என்னை சுண்டி இழுத்தது.

'தளதள'ன்னு தண்ணியை கொதிக்கவிட்டு, அதில் கிச்சடி சம்பா சிறு நொய் அரிசியைப் போட்டு கொழஞ்சி வந்ததும் கொஞ்சம் நெய் போட்டு, கிண்டி அகத்திக்கிரை கொழம்பை ஊற்றி–

திகைச்சிப் போனேன்!

"புவனா... நீ...?"

"உங்களுக்கு என்ன புடிக்கும்னு நீங்க சொல்லலை. உங்க 'டைரி'யைப் பார்த்துத் தெரிஞ்சிகிட்டேன். இனி இந்த ஒருவாய்க் கஞ்சிக்கு உங்களை தவிக்க விடமாட்டேன்.'

"புவனா..." ஓடிச்சென்று அவள் மடியில் தலை வைத்து விம்மினேன்.

"புவனா... எங்க ஆத்தா என்னை தனியா விட்டுட்டுப் போகலை. இனிமே... நீதான் எனக்கு எல்லாமே!" என்று தேம்பினேன்.

அடுப்பில் கஞ்சி கொதித்துக்கொண்டிருந்தது. என் மனம் பூவாய் குளிர்ந்திருந்தது.

★



'விசிட்டிங் கார்டு' கொண்டுவந்த பெண்ணுக்கு சேலைகளை கொடுத்து அனுப்பிச்சோம். ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே அதை அவங்க வாங்கிட்டுப் போயிட்டாங்களே?"

தன் படபடப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் மேனகா.

"தெரியும். எங்க உறவினர் பொண்ணுதான் அது. எங்கே அந்த "பில்"லைக் கொடுங்க. நான் பணம் தந்துடறேன்."

அவர் தன் மேசை மீது 'விசிட்டிங் கார்டு'டன் இணைக்கப்பட்டு இருந்த "பில்"லை எடுத்துக் கொடுத்தார்.

"என்ன மேடம் அவசரம்? ரெண்டு நாள் கழிச்சி "பில்"லை ஆபீசுக்கு அனுப்பி வைங்கன்னுதானே உங்க கணவர் சொன்னார்."

"இப்ப அவர்தான் எனக்கு போன் பண்ணி, அந்தப் பக்கமா போனா "பில்"லுக்கான பணத்தைக் கொடுத்துடச் சொன்னார். அவருக்கு கடன்ங்கிறதே பிடிக்காது. உடனுக்குடன் பணத்தை கொடுத்துடணும்."

எதார்த்தமாகப் பார்ப்பது போல அந்த "பில்"லைப் பார்த்தாள்.

பதினான்கு சேலைகள் எடுக்கப்பட்டிருந்தன. மொத்தம் எட்டாயிரத்தி நானூறு ரூபாய் "பில்" ஆகி இருந்தது. இணைக்கப்பட்டிருப்பது ஸ்ரீதரனின் 'விசிட்டிங் கார்டே'தான். போலி இல்லை.

மேனகாவிற்கு அடக்க முடியாத அளவுக்கு ஆத்திரம் பொங்கியது

பற்களைக் கடித்துக்கொண்டு பணத்தை எடுத்துக் கொடுத்தாள். "பில்"லை வாங்கி தன் கைப்பையில் வைத்துக்கொண்டு புறப்பட்டாள்.

## 8

"என்ன இது?" என்றான்– தன் முகத்திற்கு முன்பாக நீட்டப்பட்ட "பில்"லைப் பார்த்த ஸ்ரீதரன்.

"அதைத்தான் நானும் கேக்கறேன்!" என்றாள், அவன் முகத்தைப் பார்க்க விரும்பாத மேனகா.

ஸ்ரீதரன் "பில்"லை வாங்கிப் பார்த்து, "என்ன மேனகா. ஒரு

எல்லை இல்லையா? என்ன விசேஷம் இப்போ? எதுக்காக பதினாலு சேலைங்க?" என்றான், லேசான கோபத்துடன்.

"பிறந்தநாளுக்கு" என்றாள்.

"போன மாசம்தான் உன் பிறந்தநாள் முடிஞ்சிடுச்சே?"

"புரியாத மாதிரி நடிக்காதீங்க. பிறந்தநாள் எனக்கில்லை. சேலை வாங்கிக்கச் சொன்ன உங்க சித்ராவுக்கு."

"என்ன சொல்றே நீ?"

"எல்லாம் தெரிஞ்சு போச்சு. இன்னும் நடிக்காதீங்க. ஏன் உங்களுக்குப் புத்தி இப்படிப் போகுது?"

"நீ சொல்றது எதுவும் புரியலை எனக்கு."

"இந்த "பில்"லுக்கு அடியில் இருக்கிற 'விசிட்டிங் கார்டு' உங்களோடதுதானே...!"

ஸ்ரீதரன் அப்போதுதான் அதைக் கவனித்தான். "ஆமாம், அதுக்கென்ன?"

"மாம்பலத்துல உள்ள ஜவுளிக்கடைக்கு போன் பண்ணி சித்ராவுக்கு சேலை கொடுக்கச் சொன்னீங்களா... இல்லையா? இந்த 'விசிட்டிங் கார்டை' சித்ராவிடம் கொடுத்து அனுப்புனீங்களா, இல்லையா?"

"உனக்கு ஏதாவது பைத்தியம் பிடிச்சிருக்கா?"

"உங்களுக்குத்தான்... அந்த சித்ரா மேல பைத்தியம் பிடிச்சிருக்கு. இல்லைன்னா ஒரு 'டஜன்' சேலை வாங்கிக்கச் சொல்வீங்களா?"

"ஏய்... பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு. யார் அந்த சித்ரா?"

"அதைத்தான் நானும் கேட்கறேன். யார் அவ? எத்தனை நாளா பழக்கம்?"

"நிறுத்து!" கத்தினான். அவள் அருகில் வந்து தோள்களில் இரண்டு கைகளையும் அழுத்துமாக வைத்து, "இதே மாதிரி இன்னொரு வார்த்தை சொன்னே... அறைஞ்சிடுவேன்" என்றான்.

"கேக்கலை... நான் கேக்கலை... நீங்க எது வேணும்னாலும் செய்யுங்க. யார்கூட வேணாலும் சுத்துங்க. நான் கேக்கலை. கேக்கறதுக்கு எனக்கு என்ன தகுதி இருக்கு? நான்தான் குழந்தை பெத்துக் கொடுக்க முடியாதவளா ஆயிட்டேனே! அதனாலதான என்னைப் பிடிக்காம போயிடுச்சி!"

"மேனகா, இதில ஏதோ மோசடி நடந்திருக்கு. யாரோ உன்னை



திசை திருப்பி விடுறதுக்காக இப்படி பண்ணி இருக்காங்க. நான் யாருக்கும் போன் செய்யலை. 'விசிட்டிங் கார்டு'ம் கொடுத்து அனுப்பலை."

"நானே கடைக்கு நேரில போனேங்க. 'விசிட்டிங் கார்டு' மட்டும் அந்தரத்துல அங்க பறந்து வந்து சேலை வாங்கிட்டுப் போகலை. ஒரு பொண்ணுதான் வந்து வாங்கிட்டுப் போய் இருக்கா. நீங்க போன் செய்யாம எட்டாயிரத்தி சொச்சத்துக்கு கடனா தூக்கிக் கொடுக்க கடைக்காரன் என்ன முட்டாளா? உங்க மானம் கப்பல் ஏறிடக்கூடாதேன்னு நான் பணம் கொடுத்து 'பில்'லை வாங்கிட்டு வந்தேன்."

ஸ்ரீதரன் தலையை வேகமாக அசைத்து மறுப்பு தெரிவித்தான்.

"ஏதோ தில்லுமுல்லு நடந்திருக்கு. நீ எட்டாயிரம் கொடுத்து ஏமாந்திருக்கே. யாரோ ஒரு பொண்ணும். ஆம்பளையும் சேர்ந்து போன்ல பேசி, என் 'விசிட்டிங் கார்டை' பயன்படுத்தி நூதனமா ஏமாத்தி இருக்காங்க."

"பொய் சொல்ல சிரமப்படறீங்க நீங்க."

"மேனகா, அனாவசியமா வெறுப்பேத்தறே! எனக்கு சித்rான்னு எவளையும் தெரியாது. யாரோடவும் தப்பான தொடர்பும் கிடையாது. என் வார்த்தைகளை நீ நம்பத் தயாரில்லைன்னா... நிரூபி! அவளைக் கொண்டாந்து என் முன்னாடி நிறுத்தி சொல்லச் சொல்லு! அனாவசியமா நமக்குள்ளே பிரச்சினை வேணாம். நான் முதல்ல இந்தக் கடையில விசாரிச்சுட்டு வர்றேன்..."

அவன் புறப்பட்டுச் செல்ல, குழப்பமாக நின்றாள் மேனகா.

'இவர் சொல்வதை நம்புவதா, இல்லையா? பொய்யை நம்பும்படியாகச் சொல்கிறாரா? இல்லை, இவர் சொல்வது போல இது ஒரு வகை நூதனமான மோசடியா?

மோசடி என்றால் போனில் பேசிய பெண் குரலுக்கு அர்த்தம் என்ன?'

அவள் மிகவும் கலங்கிப் போனாள்.

★★★

அடுத்த இரண்டு நாட்கள் இருவருக்குள்ளும் அதிக பேச்சுவார்த்தைகள் இல்லாமல் ஒரு மவுனமான பனிப்போராக

கழிந்தது. மறுநாள் ஸ்ரீதரன் அலுவலகம் சென்றிருந்த நேரம் தொலைபேசி ஒலித்தது.

"ஹலோ, மேனகா ஸ்ரீதரன்."

"வணக்கம்மா."

முன்பு பேசிய அதே தொழிலாளியின் குரல்!

"என்ன, புதுசா ஏதாச்சும் துப்பு சொல்றதுக்காக போன் செஞ்சீங்களா?"

"அம்மா, உங்க ரெண்டு பேருக்குள்ளே சிண்டு முடியறதுக்காகத்தான் நான் போன் செஞ்சேன்னு நீங்க நினைக்கிறீங்க போலிருக்கு. நல்லதுக்கு என்னைக்குமே காலமில்லை. எனக்கு எதுக்கும்மா உங்க வாழ்க்கையைப் பத்தி அனாவசியமான அக்கறை? நான் வச்சிடறேன்."

"இல்லைங்க, பரவாயில்லை... பிகு பண்ணிக்காம நீங்க சொல்ல வந்ததை சொல்லிட்டே வையுங்க."

"அந்தப் பொண்ணு சித்ராகிட்டே முதலாளி போன்ல பேசினாரும்மா. இன்னைக்கு சாயங்காலம் சரியா ஆறரை மணிக்கு பெசன்ட் நகர் கடற்கரையில் 'போலீஸ் பூத்' பின்புறம் அந்தப் பெண்ணைக் காத்திருக்கச் சொல்லி இருக்கார். சில முக்கியமான முடிவுகளை எடுத்துடலாம்னு சொன்னாரும்மா. என் காதில விழுந்ததை நான் உங்க காதுல போட்டுட்டேன். உங்க புருஷனை காப்பாத்திக்கிறதும், கோட்டை விடுறதும் உங்க சாமர்த்தியம். நான் வச்சிடறேன்ம்மா."

மேனகாவுக்கு மார்புகள் விம்மின.

'நிரூபிக்கச் சொன்னீர்கள் இல்லையா? நிரூபிக்கிறேன்.'

***

**தொ**ழிற்சாலையை மேற்பார்வையிட்டுவிட்டு தனது அலுவலக அறைக்கு வந்து ஸ்ரீதரன் அமர்ந்ததும் போன் ஒலித்தது. எடுத்தான்.

"ஹலோ ஸ்ரீதரன்."

"சாருக்கு வணக்கம்" என்றது எகத்தாளமான ஆண் குரல். "நான் யாருன்னு கேக்காதீங்க. உங்க மேல அக்கறை உள்ள ஆசாமின்னு மட்டும் தெரிஞ்சுக்கங்க. உங்க மனைவி மேனகா



பத்தி உங்களுக்கு அதிர்ச்சி தர்ற சில உண்மையான விஷயங்களை சொல்ல விரும்புறேன்!"

"என்ன?"

"போன்ல பேசற விஷயமா இது? இன்னைக்கு சாயங்காலம் ஆறு மணிக்கு பெசன்ட் நகர் கடற்கரையில 'போலீஸ் பூத்'துக்கு பின்புறம் எனக்காக காத்திருங்க. எனக்கு உங்களைத் தெரியும். நானே வந்து பேசறேன். எல்லாம் சொல்றேன். ஆதாரங்களை எல்லாம் காமிக்கிறேன். உங்க கல்யாணத்துக்கு முன்பு மித்ரான்னு ஒருத்தனை மேனகா காதலிச்ச கதை. அது உங்களுக்குத் தெரியலைன்னாலும் பரவாயில்லை. இப்ப உள்ள புதிய காதலன் பிரகாஷைப் பத்தி... இரண்டு பேருக்குமான நெருக்கத்தைப் பத்தி எல்லாம் நீங்க தெரிஞ்சிக்கிறது நல்லதில்லையா? வந்தா சொல்றேன். ஆதாரத்தைக் காட்டறேன். அப்புறம் வர்றதும், வராததும் உங்க இஷ்டம்."

எதிர்முனை துண்டிக்கப்பட்டதும் கை நடுங்க 'ரிசீவரை' வைத்தான் ஸ்ரீதரன்.

'என் மேனகாவா? மித்ராவின் காதலைப் பற்றி சொல்லி இருக்கிறாள். இது யார் பிரகாஷ்? நிஜம்தானா? புதிய பழக்கமா? அதை மறைக்கத்தான் அனாவசியமாக என் மேல் பழியைப் போட்டு சீறுகிறாளா?

போய்ப் பார்த்தால் தெரிகிறது. என்னதான் சொல்கிறான் என்று தெரிந்துகொண்டால் போயிற்று.'

## 9

**மா**லை ஆறு மணி. பெசன்ட் நகர் கடற்கரை. 'போலீஸ் பூத்'தின் பின்புறம் மணலில் அமர்ந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டு- தூரத்தில் பாய்ந்து வரும் அலைகளை, அரை இருட்டில் சிறிய கறுப்பு உருவங்களாக கால்களை நனைத்தபடி நிற்கும் மனிதர்களைப் பார்த்தான் ஸ்ரீதரன்.

சாலையோரம் நின்ற காருக்குள் இருந்து- ஏற்றி விடப்பட்ட கண்ணாடி வழியாக அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள் சித்ரா.

சிறுகதை

# கருணையால் அல்ல...

- டலம்பியாபுரம் மீனாசன்



மாற்றுத் திறனாளிகள்- உதவி மையத்தின் இயக்குநர் பூரணி. அரசின் பல்வேறு திட்டங்கள்ளயும், அதன் வாயிலாக பயன் பெற்றவர்களின் அனுபவங்களையும் விளக்கும் அவரது பேட்டி ஒன்று டி.வி.யில் ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. அரவிந்தனுக்கு மகிழ்ச்சி.

செல்போனில் அவரை தொடர்பு கொண்டான்.

"பூரணியம்மாவா? வணக்கம்மா! விராலிமலையில் இருந்து அரவிந்தன் பேசுறேம்மா! இப்பதான் டி.வி.யிலே உங்கப் பேட்டியை பார்த்தேன். அற்புதமா பேசினீங்க... பாராட்டுகள்!"

"ரொம்ப நன்றி! நீங்க என்ன பண்ணிகிட்டிருக்கிங்க தம்பி!"

"வீட்டிலே சும்மாதான் இருக்கேன்ம்மா. எதுக்காக உயிரோட இருக்கேன்னுதான்புரியலே! மனுஷனா பொறந்தா... சமுதாயத்துக்குஏதாவது உதவியா இருக்கணும். இல்லை, தன் குடும்பத்துக்கு பயன்படுற மாதிரி இருக்கணும். குறைஞ்சபட்சம் தனக்காவது பிரயோசனமா இருக்கணும். ஆனா, எதுக்கும் லாயக்கில்லாதஒருநடைப்பிணமா வாழ்ந்துகிட்டு இருக்கேன்ம்மா!"

– விக்கி விக்கி அழுதான்.

"தம்பி, மொதல்லே அழுகையை நிறுத்துங்க! ஆண்டவன் படைப்பிலே எதுவுமே பிரயோசனம் இல்லாததுன்னு கிடையாது. உங்க முகவரியைக் கொடுங்க. நாளைக்கு சாயங்காலம் உங்களை சந்திக்கிறேன்."

சொன்னபடியே வந்தாள், பூரணி.

"வாங்கம்மா! உங்களைப் பற்றி அரவிந்தன் விபரமா சொன்னான். எங்களை மதிச்சு இவ்வளவு தூரம் தேடி வந்திங்களே!" என்றாள், அரவிந்தனின் அம்மா.

"பரவாயில்லேம்மா! அரவிந்தனுக்கு என்ன ஆச்சு? பிறவியில் இருந்தே இப்படியா?"

"இல்லேம்மா... எப்பவும் ஓடியாடிகிட்டிருந்த புள்ளே! திடீர்னு காய்ச்சல் வந்து படுத்துட்டான். பத்து நாளா கண்ணே முழிக்கலே. காய்ச்சல் குணமாச்சு. ஆனா, கால் ரெண்டும் சுத்தமா செயல் இழந்து போச்சு."

## இளமையில் சாதனை

★ அலெக்சாண்டர் போப் என்னும் கவிஞர், முதல் கவிதைப் புத்தகத்தை வெளியிட்டபோது வயது 12.

★ ராபர்ட் பர்ன்ஸ் எனும் கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பு வெளியானபோது வயது 14.

–முக்கிமலை நஞ்சன்

மேற்கொண்டு பேச இயலாமல் அழத்தொடங்கினாள் அமிர்தம்.

"அழாதீங்கம்மா! உங்க வீட்டுக்காரர் என்ன செஞ்சுக்கிட்டிருக்கார்?"

"தையல் கடையிலே வேலை பார்த்துகிட்டு இருந்தார். ஒரு வருஷமா உடம்புக்கு ரொம்ப முடியாம போயிடுச்சு. ரத்த அழுத்தம், தலை சுற்றல். படுத்த படுக்கையா ஆகிட்டாரு. ஒரு ஓட்டல், நாலு வீடுங்கள்லே வேலை செஞ்சு எப்படியோ சமாளிச்சுக்கிட்டிருக்கேன்."

"இந்த நிலைமையை நினைச்சு வேதனைப்படுறதைவிட, மேற்கொண்டு என்ன செய்யலாம்னு யோசிப்போம். உங்க வீட்டுக்காரருக்கு ஏதாவது கெடைக்குமான்னு முயற்சி பண்ணி பார்க்றேம்மா! ஒரு மனு எழுதித் தர்றேன். அவர்கிட்டே கையெழுத்து வாங்கிக் கொடுங்க.

அப்புறம், மாற்றுத் திறனாளிகளுக்கு அரசாங்கத்துலே பல உதவிகள் செய்யறாங்கம்மா! அரவிந்தனுக்கு மாசாமாசம் நிதி உதவி கெடைக்கும். ஒரு மூன்று சக்கர வாகனமும் கிடைக்க முயற்சி பண்ணுறேன். அவனாலே செய்யக்கூடிய தொழில் எதிலாவது பயிற்சி கொடுத்து, சுயமா சம்பாதிக்க வழி பண்ணிடலாம்.

இதுக்கெல்லாம் முதல் படியா, அரசாங்க டாக்டர் ஒருத்தர் இவனை பரிசோதிச்சு சான்றிதழ் கொடுக்கணும். அரவிந்தனோட பள்ளிச் சான்றிதழ், உங்க ரேஷன் கார்டு எல்லாத்துக்கும் நகல் எடுத்து வச்சுக்கோங்க. ஒண்ணும் கவலைப்படாதீங்க. எல்லாம் நல்லபடியா நடக்கும். அப்ப நான் புறப்படுறேம்மா!"

"சரிம்மா! உங்க கருணைக்கும், உதவிக்கும் எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலேம்மா!"

இரு கரம் கூப்பி, கண்களில் நீர் மல்க, அமர்ந்தபடியே விழுந்து வணங்கினான் அரவிந்தன்.

பதறினார் பூரணி. "தம்பி! இது ஒண்ணும் கருணையோ, உதவியோ இல்லை. அரசாங்கத்துக்கிட்டே இருந்து இதையெல்லாம் எதிர்பார்க்கறது உங்க உரிமை, செய்ய வேண்டியது எங்க கடமை. இதுலே கருணை ஏதும் கிடையாது தம்பி. அப்ப நான் வரட்டுமா?"

பூரணி கிளம்பினாள். அரவிந்தனுக்கு புதிய நம்பிக்கை வந்தது.

★



அவள் அருகில் சிகரெட் பிடித்தபடி அமர்ந்திருந்த மித்ரா, சாலையில் கண்களைப் பதித்திருந்தான். திடீரென்று அவள் தோளைத் தொட்டான்.

"அதோ மேனகாவோட கார்! அவதான் ஓட்டிக்கிட்டு வர்றா. நீ போய் நாடகத்தை ஆரம்பிக்கலாம்" என்றான்.

சித்ரா இறங்கினாள். வேகமாக ஸ்ரீதரனை நோக்கி நடந்தாள். இவன் இருபதடி தூரத்தில் இருக்கும்போது பதற்றம் சேர்த்துக்கொண்டு கிட்டத்தட்ட ஓடி, மூச்சிறைத்துக்கொண்டு அவன் அருகில் அமர்ந்து, 'எக்ஸ்கியூஸ் மி" என்றாள்.

ஒரு அழகான பெண் திடீரென்று வந்து தன் அருகில் நெருக்கமாக அமர்ந்திருப்பதில் அதிர்ந்து போன ஸ்ரீதரனை எதுவும் பேசவிடாமல் அவளே தொடர்ந்தாள்.

"என்னை மூணு ரவுடிப் பசங்க துரத்திக்கிட்டு வர்றாங்க. தயவுசெய்து... காப்பாத்துங்க. நீங்க எதுவும் செய்ய வேண்டாம். என் காதலர் மாதிரி நான் கொஞ்ச நேரம் இங்கே உக்காந்து இருந்துட்டுப் போயிடறேன், பிளீஸ்..."

திடீரென அவள் ஸ்ரீதரனின் கையை எடுத்துத் தன் மடி மேல் வைத்துக்கொண்டு சிரித்துப் பேச ஆரம்பிக்க– என்ன செய்வது என்று தீர்மானிக்க இயலாமல் குழம்பினான் அவன்.

அந்தக் காட்சியை அவர்களுக்குத் தெரியாமல் மறைவாக நின்று பார்த்துக்கொண்டிருந்தாள் மேனகா.

ஸ்ரீதரன் இரவு எட்டு மணிக்கு வீட்டுக்குத் திரும்பியபோது, மேனகா அழுகையுடன் கட்டில் மேல் விரித்து வைத்த சூட்கேசுக்குள் தனது துணிகளை எடுத்து அடுக்கிக்கொண்டிருந்தாள்.

"என்ன மேனகா... என்ன இது?"

திரும்பிப் பதில் பேசாமல் முறைத்தபடியே, தன் காரியத்தைத் தொடர்ந்தாள்.

"நான் கேக்கறேனில்லே?"

"எனக்கு இங்கே இனிமே என்ன வேலை இருக்கு? நான் போறேன். எதுக்காக நாலு பேர் பார்க்கற பொது இடத்தில் கூடிக் குலாவி பேரைக் கெடுத்துக்கணும்? அவளைத் தாராளமா வீட்டுக்கே அழைச்சுட்டு வந்து ஆட்டம் போடுங்க. நான் இடைஞ்சலா இல்லை."

"என்ன சொல்ற நீ...?"

"இன்னும் எத்தனை தடவைதான் பொய் சொல்லுவீங்க! இன்னைக்கு கடற்கரைக்கு வந்தேன். பார்த்தேன்... என் சக்களத்தியை."

"ஓ– அதுவா!" அவன் நெற்றியைத் தடவிக்கொண்டே,"நான் சொல்றதை கொஞ்சம் பொறுமையா கேக்கறீயா? ரவுடிப் பசங்க தூக்கறாங்கன்னு சொல்லி என்கிட்ட வந்து உக்கார்ந்து இருந்துட்டுப் போன பொண்ணை நான் முன்னே பின்னே பார்த்ததில்லை. அவ ஏதோ ஒரு பெரிய சதி பண்ணி நம்ம ரெண்டு பேருக்கும் நடுவுல விளையாடிக்கிட்டு இருக்கா, நீ..."

"போதும். நீங்க எந்த விளக்கமும் சொல்ல வேணாம்."

அவள் பெட்டியை எடுத்துக்கொண்டு விறுவிறுவென நடக்க...

"மேனகா, நான் சொல்றதைக் கேளு! என்னை மோசமானவனா காட்டுறதுக்காக அந்தப் பொண்ணு சதி பண்ணி..."

"ஏன், அவளுக்கு அப்படி வேண்டுதலா? தப்பு செய்ய தைரியம் இருக்கு. குட்டு வெளிப்பட்டதும் அதை ஒத்துக்கிறதுக்கு தைரியம் இல்லையே... ச்சே! உங்களைப் பார்த்தாலே எனக்கு அருவருப்பா இருக்கு..."

அதற்கு மேலும் அவன் தடுக்கத் தடுக்க வெளியேறி ஆட்டோ பிடித்துக்கொண்டு "நந்தனம்" என்றாள்.

***

**நா**ன்கு தினங்கள் கழித்து...

"ஹலோ **ஸ்ரீ**தரன்" என்றான், ஒலித்த போனை எடுத்து.

"வணக்கம் சார். என் பேரு சித்ரா. பெசன்ட் நகர் கடற்கரையில நாம சந்திச்சிருக்கோம். சவுக்கியமா சார்?"

"யாருடி நீ? ஏன், ஏன் என் வாழ்க்கையில் அனாவசியமா விளையாடறே?"

"மிஸ்டர் **ஸ்ரீ**தர், எனக்கும் கடுமையான வார்த்தைகளை உபயோகிக்கத் தெரியும். வேணாம். நான் எதுக்காக இப்படி உங்கக்கூட கண்ணாமூச்சி விளையாடறேன்னு தெரியுமா?"

"சொல்லு."

"அதுக்கு ஒரு பெரிய கதையே இருக்கு. நேர்ல வர முடியுமா? ஏன்



நான் இப்படி நாடகமாடி– உங்க மனைவியை உங்ககிட்ட இருந்து பிரிச்சேன்னு சொல்றேன்."

"எங்கே வரணும்?"

"பொது இடத்துக்கு வேணாம். என் வீட்டுக்கே வாங்க. முகவரி சொல்றேன். குறிச்சுக்குங்க..."

அவள் சொல்லச் சொல்ல– குறித்துக்கொண்டான்.

"எத்தனை மணிக்கு வர்றீங்க?"

"சாயங்காலம் ஆறு மணிக்கு..."

"நல்லது! கோபமில்லாம வாங்க. பொறுமையா பேசலாம்."

ஸ்ரீதரன் யோசனையோடு போனை வைத்தான்.

***

"**மே**னகா உனக்கு போன்" என்று 'ரிசீவரை' வைத்துவிட்டு, சமையலறைக்குச் சென்றாள் அண்ணி.

படித்துக்கொண்டிருந்த புத்தகத்தைக் கவிழ்த்து வைத்துவிட்டு வந்து எடுத்து, "ஹலோ மேனகா" என்றாள்.

"வழக்கமா மேனகா ஸ்ரீதரன்னு சொல்லுவீங்களே?" என்றது பெண் குரல்.

"யார் நீங்க? என்ன வேணும் உங்களுக்கு?"

"நான்தான் சித்ரா. இதுவரைக்கும் விஷயம் உங்களுக்குத் தெரியாம இருந்துச்சி. இப்ப தெரிஞ்சிடுச்சி. ஸ்ரீதரனோட சண்டை போட்டுட்டு உங்க அண்ணன் வீட்டுல வந்து தங்கிட்டீங்க. இவ்வளவு தூரம் ஆனப்புறம்தான் உங்கக்கூட பேசிடலாம்னு எனக்குத் தோணிச்சி."

மேனகா மவுனமாக இருந்தாள்.

"எப்படி நடந்திச்சின்னு ஆராய்ச்சி செய்றதைவிட, இனிமே என்ன செய்யலாம்னு யோசிக்கிறதுதான் ரெண்டு பேருக்குமே நல்லது இல்லையா?"

"இப்ப என்ன செய்யணும்னு சொல்றே?"

"ஆத்திரப்படாதீங்க. இனிமே என்ன செய்யலாம்னு நாம ரெண்டு பேரும் சந்திச்சி மனசுவிட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வரலாம். நான் உங்க வீட்டுக்கு வர்றது சரியாப்படலை. நீங்க என் வீட்டுக்கு வந்தா,"

மனசுவிட்டுப் பேசலாம். என்னை எதிரியா நினைக்காம, ஒரு தோழியா நினைச்சி வாங்க. அட்ரஸ் சொல்லட்டுமா, குறிச்சிக்கிறீங்களா?".

"ம்" என்றான், யோசனையுடன். ஆனால், அருகில் இருந்த பென்சிலை எடுத்து காகிதத்தில் அனிச்சையாக எழுதிக்கொண்டது அவனது கை.

"மாலை ஆறரை மணிக்கு வர்றீங்களா? நீங்க படிச்சவங்க. பத்திரிகைகள்ல எழுதறவங்க. பக்குவப்பட்டவங்க. பொறுமை தவறாம நிதானமான மனசோட வாங்க. யாருக்கும் பாதிப்பு இல்லாம பேசி முடிவுக்கு வரலாம். வச்சிடட்டுமா?"

மேனகா போனை வைத்துவிட்டு, புடவை முனையில் முடிச்சிட்டுக்கொண்டே சிந்தனை வயப்பட்டாள்.

## 10

**மா**லை மணி 6.10.

ஒரு தட்டில் இரண்டு தம்ளர் ஆரஞ்சு பழச்சாறுடன் வந்த சித்ரா, கறுப்பு நிறத்தில் மஞ்சள் பூக்கள் சிதறிய மெல்லிய சேலை கட்டி இருந்தாள்.

சோபாவில் அமர்ந்திருந்த ஸ்ரீதரன், " எனக்கு அதெல்லாம் வேணாம். விளக்கம்தான் வேணும்" என்றான்.

"சொல்றனே. சொல்லத்தானே உங்களை வரச் சொன்னேன். வீட்டுக்கு வந்தவங்களை உபசரிக்காம பேசறது எனக்கு அவமானம் இல்லையா? சும்மா எடுத்துக்குங்க..."

ஒரு தம்ளரை அவன் கையில் வற்புறுத்தித் திணித்து, மற்றொன்றை எடுத்து, எதிரில் கால் மேல் கால் போட்டு அமர்ந்து பருகத் தொடங்கினாள் அவள்.

கறுப்பு சேலையும், கைகள் இல்லாத ஜாக்கெட்டும், கால் மேல் கால் போட்டதில் இடது காலின் பளீரென்று கொலுசுடன் தெரிந்த கணுக்காலும் அவன் பார்வையைத் தணிய வைத்தன.

அவளாகப் பேசட்டும் என்று மவுனமாக இருந்தான்.

"மிஸ்டர் ஸ்ரீதர், உங்களுக்கு என் மேல எக்கச்சக்கமான கோபம்



இல்லையா?"

"நிச்சயமா."

"திட்டம் போட்டு மனைவியை உங்க மேல சந்தேகப்பட வச்சி, அவங்க அண்ணன் வீட்டுக்கு அனுப்பிட்டேன். அது மட்டுமில்லாம... எட்டாயிரம் ரூபா தண்டம் வேற. இதெல்லாம் எதுக்காக நான் செஞ்சேன்னு உங்களுக்குப் புதிரா இருக்கு. இல்லையா?"

"ஆமாம்" என்றபோது லேசாகத் தலை வலித்தது.

"சொல்றேன். அதாவது..."

ஸ்ரீதரனுக்கு இப்போது சித்ராவின் உருவம் மங்கலாகத் தெரிந்தது. கண்கள் செருகின. தலையை உலுக்கிக்கொண்டான். மெதுவாக ஒரு மயக்கம் அவனை ஆக்கிரமிக்க... அப்படியே சோபாவில் சரிந்தான்.

அவன் சரிந்ததும் சித்ரா அந்த வீட்டின் மாடிக்குச் சென்று ஒரு அறையின் கதவைத் தட்ட... கதவைத் திறந்து வெளியே வந்த மித்ரா, "அவன் ஜூஸ் குடிக்க மாட்டான்னு நினைச்சேன்" என்றான்.

"ரொம்ப எதார்த்தமா பேசி குடிக்க வைச்சிட்டேன்."

"கில்லாடி நீ" என்று அவள் கன்னத்தில் தட்டி, "வா! அவ வந்துடப் போறா" என்று கீழே இறங்கி வந்தான் மித்ரா.

இருவரும் ஸ்ரீதரனைத் தூக்கி அருகில் இருந்த படுக்கை அறைக்கு கொண்டுவந்து கட்டிலில் போட்டார்கள். ஸ்ரீதரனின் சட்டை, பேண்ட்டைக் கழற்றி அருகில் இருந்த கொடியில் போட்டு-போர்வையை இடுப்பு வரை இழுத்துவிட்டான் மித்ரா. பின் ஒரு கேமிராவை எடுத்துக்கொண்டான்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு...

"டிங்-டாங்" என்று அழைப்பு மணி ஒலிக்க, "சித்ரா, அவ வந்திருப்பா. நாடகத்தோட அடுத்த காட்சிக்குப் போ" என்று படுக்கையறையின் கதவைச் சாத்திவிட்டு, மாடியில் இருந்த அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டான்.

கதவைத் திறக்க, அங்கு மேனகா நின்றுகொண்டிருந்தாள்.

வாசலில் நின்ற தன் கணவரின் காரைப் பார்த்ததால் கேள்விக்குறியுடன் சித்ராவை ஏறிட்டாள்.

"ஸ்ரீதரனோட கார்தான். என்னோட சொந்த பயன்பாட்டுக்காக





எடுத்துட்டு வந்தேன். உள்ளே வாங்க."

இருவரும் வரவேற்பறையில் அமர்ந்தனர்.

"எதுக்காக என்னை வரச் சொன்னே?"

"ஒரு பொருளை ரெண்டு பேர் சொந்தம் கொண்டாடறது அபத்தம். யாராச்சும் விட்டுக் கொடுத்தாகணும். என்ன முடிவு செஞ்சீங்க மேனகா?"

"என் புருஷன் கடைசி வரைக்கும் தான் தப்பு செய்றதை ஒப்புக்கவே மாட்டேங்கறார். அதுவே எரிச்சலை அதிகமாக்குது. எந்தப் பொண்டாட்டிதான் தன் புருஷன் இன்னொரு பொண்ணோட தொடர்பு வச்சிருக்கிறதை சகிச்சுக்குவா? தப்பு செய்றது சகஜம். காரண காரியம் பத்தி நான் யோசிக்கிறதில் அர்த்தமில்லை. ஆனா, அவர் மனசு திருந்திட்டதா சொன்னா மன்னிக்கத் தயாரா இருக்கேன். தயவு செஞ்சி நீ அவரைவிட்டு விலகிடு."

சித்ரா வாய்விட்டுச் சிரித்தாள்.

"எதுக்காக இப்ப சிரிக்கிறே?"

"பின்னே சிரிக்காம என்ன செய்றது? ஸ்ரீதர் என் மேல எவ்வளவு உயிரா இருக்காருன்னு உங்களுக்குத் தெரியாது. என்னை விட்டுக் கொடுக்கச் சொல்லி கேக்கறீங்க நீங்க. ஆனா, நான் வரச் சொன்னது... உங்களை விட்டுக் கொடுக்கச் சொல்லி கேக்கறதுக்குதான்."

"என்ன சொல்றே?"

"அவரால என்னைப் பிரிய முடியாது. அதை அவரே பல தடவை சொல்லிட்டார். உங்களைப் பிரிய தயாரா இருக்கார். என்னை முறைப்படி கல்யாணம் செய்துக்க ஆசைப்படறார். நீங்க அதுக்கு சம்மதம் தெரிவிச்சா, ஒரே வீட்ல நாம ரெண்டு பேரும் ஒற்றுமையா குடித்தனம் நடத்தலாம். என்ன சொல்றீங்க அக்கா?"

"முட்டாள்... பொய் சொல்றே! என் புருஷன் அப்படியெல்லாம் சொல்லி- இருக்கமாட்டார். ஏதோ தவறிட்டார். அதுக்காக கல்யாணமே செய்துக்கிற அளவுக்கு..."

மீண்டும் சிரித்த அவள், "உங்களைப் பார்த்தா பரிதாபமா இருக்குங்க. உங்க மனசு கஷ்டப்படுமேன்னு பொய் சொன்னேன். வாசல்ல நிக்கிற காரை நான் எடுத்துட்டு வரலை. ஸ்ரீதரன்தான் வந்திருக்கார். இங்கேதான்இருக்கார். மது அருந்திவிட்டு தூங்கறார். என்னோடு வந்து பாருங்க" என்றாள்.

மேனகாவின் கையைப் பிடித்து படுக்கையறைக்கு அழைத்து வந்து, கட்டிலில் மயக்கமாய் கிடந்த ஸ்ரீதரனைக் காட்டினாள்.

வாழ்வின் மிகப் பெரிய அதிர்ச்சியை அடைந்தாள் அவள்.

மறுபடி அவளை வெளியே அழைத்து வந்த சித்ரா, "உங்க கண்ணாலேயே பார்த்தீங்கதானே? எனக்கு அவர் தாலி கட்டலையே தவிர, நாங்க புருஷன்- பொண்டாட்டியாத்தான் வாழ்ந்துக்கிட்டு இருக்கோம். யார் விட்டுக் கொடுக்கறதுன்னு நீங்களே முடிவு பண்ணுங்க. நீங்க அவரோட ரெண்டாம் கல்யாணத்துக்கு சம்மதம் தெரிவிக்கிற மாதிரி கடிதம் எழுதி ஸ்ரீதர் கொடுத்து அனுப்புவாரு. அதுல கையெழுத்து போட்டு அனுப்புங்க. அதுதான் உத்தமம்" என்றாள்.

ஆவேசத்தின் உச்சத்தில் இருந்த மேனகா, "கையெழுத்து போடறேன். நீ சொல்ற கடிதத்துல இல்ல, விவாகரத்து பத்திரத்துல" என்றவள்- வேகமாக வெளியே நடந்தாள்.

***

ஸ்ரீதரன் மயக்கம் தெளிந்து எழுந்தபோது, வரவேற்பறையின் சோபாவில் பேண்ட்- சட்டை அணிந்து படுத்திருந்தான். எழுந்துகொண்டான்.

எதிரே கவலையுடன் அமர்ந்திருந்த சித்ரா, "இப்ப எப்படி சார் இருக்கு? பேசிட்டே இருந்தீங்க. திடீர்னு மயக்கம் போட்டு சரிஞ்சிட்டீங்க. டாக்டரை வரவழைச்சேன். ஊசி போட்டுட்டு- பயப்பட ஒண்ணுமில்லைன்னு சொல்லிட்டு போனார். என்ன ஆச்சு உங்களுக்கு?" என்றாள்.

"தெரியலை. திடீர்னு மயக்கம் வந்திடுச்சி. சரி, அதிருக்கட்டும்... நீ சொல்ல வந்ததைச் சொல்லு" என்றான் ஸ்ரீதரன்.

"நம்ம கல்யாணம் எப்பங்க?" என்றாள் வெட்கம் கலந்து.

"என்ன உளர்ற நீ?"

"எத்தனை நாளைக்குத்தான் உங்க பொண்டாட்டிக்கு பயந்து, ஊருக்கு பயந்து நாம வாழ்க்கை நடத்தறது?"

"உனக்கு மண்டை ஏதாவது குழம்பிப் போச்சா? என் வாழ்க்கையில விளையாடுறதுக்கான காரணத்தைச் சொல்றேன்னு சொல்லி வரவழைச்சிட்டு என்னென்னமோ பேசறியே?"



"நீங்கதான் மாத்திப் பேசறீங்க, இன்னைக்கு வீட்டுக்கு வர்றப்ப- நம்ம கல்யாணம் பத்தி முடிவு எடுத்துடலாம்னு நீங்கதானே சொன்னீங்க?"

ஏதோ மற்றொரு சதி வலையை இந்தப் பெண் பண்ணுகிறாள் என்பதை உணர்ந்த ஸ்ரீதரன் எழுந்துகொண்டான்.

'இவள் அபாயமானவள். பெரிய சதிக் கும்பலைச் சேர்ந்தவள். உள்நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறாள். இங்கே தனியாக வந்ததே தப்பு!'

"அம்மா தாயே! இதெல்லாம் வேற எவன்கிட்டேயாவது வச்சிக்க. என் பிரச்சினையை எப்படி தீர்த்துக்கறதுன்னு எனக்குத் தெரியும்."

வேகமாக வெளியேறி, காரை எடுத்துக்கொண்டு அவன் சென்ற பிறகு, மாடியில் இருந்து சிகரெட் புகைத்தபடி இறங்கி வந்தான் மித்ரா.

நடந்ததை அவனிடம் விளக்கினாள்.

"விவாகரத்து நோட்டீஸ் அனுப்பறேன்னு சொன்னாளா? சபாஷ்! அதுதான் வேணும் எனக்கு! என்னை அம்போன்னு விட்டுட்டு அவ பண்ணிக்கிட்ட கல்யாணம் நிலைக்கக் கூடாது சித்ரா" என்றான், வெறியுடன்... தன் பற்களைக் கடித்தபடி.

"இந்த ஒரு நாள் கூத்துக்காக வீட்டை வாடகைக்குப் பிடிச்சியா மித்ரா?"

"எதைச் செஞ்சாலும் திருந்தச் செய்யணும். இது ஒரு நாள் கூத்து இல்லை. அவங்க முறையா விவாகரத்து ஆகி நிரந்தரமா பிரியற வரைக்கும் இங்கேதான் தங்கப் போறே. நம்ம கதை வசனப்படி நீ அதுவரைக்கும் ஸ்ரீதரனோட சின்ன வீடுதான்."

"என்ன மித்ரா இது, நடிச்சது போதாதா? அதான் விவாகரத்து நோட்டீஸ் அனுப்பப் போறேன்னு சொல்ற அளவுக்கு வந்தாச்சே! இனிமே ஸ்ரீதர் என்ன சமாதானம் சொன்னாலும் எடுபடாது. அவன் என் கட்டில்லே படுத்துக் கிடந்ததை அவன் மனைவி தன் கண்ணால பார்த்துட்டா. அதனால விவாகரத்து நிச்சயம். அது நடந்து முடியற வரைக்கும் நான் தொடர்ந்து நடிக்கணுமா?" என்று சிணுங்கினாள்.

"ஒரு மாசமானாலும், ஒரு வருஷமானாலும் நீ நடிச்சுதான்

ஆகணும். கத்தியால ஒரே குத்துல கொலை செய்ற பழக்கம் எனக்குப் பிடிக்காது. கொஞ்சம் கொஞ்சமா விஷம் கொடுத்துக் கொல்லணும். அதான் சரியான தண்டனை. பாரு, இப்ப மேனகாவுக்கு எவ்வளவு மனவேதனை, சித்திரவதை, மன அழுத்தம்! இது தொடரணும்."

"சரி, எனக்குப் பிரச்சினை இல்லை. விடுதியில தங்கறதுக்குப் பதிலா இங்கே தங்கிட்டுப் போறேன். ஸ்ரீதர் என் மேல கோபமா எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டானா?"

"மாட்டான். உன்னையும், அவனையும் சேர்த்து இப்ப எடுத்த படங்கள்தான் அதைத் தடுப்பதற்கான கேடயம்! அதுதான் ஆயுதம்! அவன் புழுங்கி புழுங்கி சாவானே தவிர, வேற எதுவும் செய்ய முடியாது. போலீஸ்கிட்டே போகமாட்டான். போனா, அவன் பேர்தான் நாறிப் போகும். கடைசி வரைக்கும் அவனுக்கும் என்னோட தொடர்பு இருக்குன்னு சாதிச்சா, உன் கட்சிதான் நிக்கும். இந்த விஷயத்தில ஒரு பொம்பளை சொல்றதைத்தான் யாரும் நம்புவாங்க."

"எனக்கென்னவோ உன் விளையாட்டு கொஞ்சம் ஆபத்தானதா தெரியுது. நிறுத்திக்கலாமே! எனக்கு பயமா இருக்கு. நீ சொல்ற எதையுமே நான் மீறலை. ஆனா, எனக்கு உன்னோடு நிம்மதியா வாழணும்னு ஆசையா இருக்கு. இந்த விவகாரத்தால அந்த ஆசைக்கு பங்கம் வந்துடுமோன்னு கவலைப்படறேன்."

அவளை ஆறுதலாக அணைத்துக்கொண்டு, "சித்ரா, ரொம்ப நாளா நீ ஒரு கேள்வி கேட்டுட்டிருக்கே. நான் அதுக்கு பதில் சொல்லாம தள்ளிப் போட்டுக்கிட்டு இருக்கேன். இன்னிக்கு பதில் சொல்லட்டுமா?"

"என்ன மித்ரா?"

"நான் உன்னைக் கல்யாணம் செய்துக்கிறதுன்னு முடிவு செஞ்சுட்டேன். என்னைக்கு தெரியுமா? மேனகாவுக்கு கோர்ட்டு என்னைக்கு விவாகரத்து கொடுக்குதோ அதே தினம்! அந்த வெற்றியை நான் தாலி கட்டி கொண்டாடப் போறேன்" என்றவன், அவள் எலும்புகள் முறியும் அளவிற்கு இறுக்கிக்கொண்டான்.

"அய்யோ மெதுவா! வலிக்குது."

"சரி இங்கே வந்து போறது மேனகாவுக்கோ– ஸ்ரீதரனுக்கோ தெரிஞ்சா, இவ்வளவு திட்டத்துக்கும் நீதான் சூத்திரதாரின்னு தெரிஞ்சுடாதா மித்ரா?"



"உன் கேள்வி நியாயம்தான். அப்புறம் இத்தனை நாள் பொறுமையா போட்ட திட்டம் எல்லாமே தவிடு பொடியாகிடும். அதனால... நான் ராத்திரி பதினொரு மணிக்கு மேலதான் இங்கே வருவேன். அதுக்கு முன்னால வரமாட்டேன். சரியா?" என்றான்.

## 11

பிரமைப் பிடித்தவன் போல அலுவலகத்தில் அமர்ந்திருந்தான் ஸ்ரீதரன். கையில் சற்றுமுன் பிரித்துப் பார்த்த கடிதம் இருந்தது.

"ஏதாவது அசம்பாவிதமா சார்?" – மரியாதையாகக் கேட்டார் எதிரே நின்ற மானேஜர்.

"என் மனைவி விவாகரத்து கேட்டு வக்கீல் மூலமா நோட்டீசு அனுப்பி வச்சிருக்கா" என்றான், விரக்தியாய்.

தனது கேள்விக்காக வருத்தம் தெரிவித்த மானேஜர், அந்த அறையை விட்டு வெளியேறியதும் தொலைபேசியை எடுத்துச் சுழற்றினான்.

"மேனகா, என்ன நினைப்புல இப்படியொரு அபத்தமான வேலை செஞ்சிருக்கே?"

"இனிமே நான் உங்க கூட பேசத் தயாரில்லை. மனசுக்குப் பிடிக்கலைன்னு ரெண்டு பேரும் எழுதிக் கொடுத்தா சிக்கல் இல்லாம விவாகரத்து கிடைச்சுடும்னு வக்கீல் சொன்னார்."

"ஏய், உன் கோபம் நியாயம். ஆனா, நடந்தது எல்லாம் சதி. எப்படி உனக்குப் புரிய வைக்கிறதுன்னு தெரியலை. இது போலீசுக்குப் போய் தீர்த்துக்க முடியாத சிக்கல்! மானப் பிரச்சினை. என்னைப் புரிஞ்சுக்க மாட்டியா?"

"புரிஞ்சுக்கிட்டதாலதான் நோட்டீசு அனுப்பி இருக்கேன்.. உங்களுக்கு சம்மதம் இல்லைன்னா, வழக்கு நடத்தறதைத் தவிர வேற வழியில்லை."

"மேனகா, நாம நேர்ல பார்த்துப் பேசலாம். உனக்கு விளக்கமா புரிய வைக்கிறேன்."

"எனக்குப் புதுசா எதுவும் புரிய வேண்டாம். புரிஞ்ச அளவுக்கே

பைத்தியம் பிடிச்ச மாதிரி இருக்கேன். இனிமே எனக்கு நீங்க போன் செய்யாதீங்க. உங்கக்கூட பேசப் பிடிக்கலை."

எதிர்முனையில் 'படக்'கென்று 'ரிசீவர்' வைக்கப்பட்ட விதம்– இவன் முகத்தில் காறித் துப்பியதைப் போல இருந்தது.

அன்றைக்கு மாலையில் வீடு திரும்பும் வழியில் காரை நிறுத்தி 'அந்தக் கடை'க்குள் நுழைந்தான் ஸ்ரீதரன்.

★★★

இரண்டு தினங்கள் கழித்து இரவு ஏழு மணிக்கு மித்ரா இரண்டு 'பெக்' மது குடித்த பிறகு வீடியோவில் நீலப்படம் பார்த்தான். பின் அவன் உடல் சித்ராவைத் தேடத் தொடங்கியது.

உடனே காரை எடுத்துப் புறப்பட்டான். அவள் வீடு இருக்கும் தெருவுக்கு இரண்டு தெரு முன்பாகவே காரை நிறுத்திவிட்டு, நடந்தே சென்று வீட்டை அடைந்தான்.

வாசலில் ஒரு மோட்டார் சைக்கிள் நின்றிருப்பதைப் பார்த்து புருவங்களைச் சுருக்கினான்.

யார் வந்திருப்பது?

இந்த வண்டியை நான் எப்போதோ பார்த்திருக்கிறேனே!

அவனுக்கு நினைவு வந்துவிட்டது... அது... அது...சுதிரின் மோட்டார் சைக்கிள். பெண்களை வைத்து தொழில் செய்கிற மாமா. அவனுடைய பாதுகாப்பில் இருந்துதான் பணம் கொடுத்து சித்ராவை மீட்டேன்.

அந்தக் கேடு கெட்ட சுதிர் எதற்காக வந்தான்?

அவனுக்கு இங்கே என்ன வேலை?

மாடியில் உள்ள படுக்கை அறையில் மட்டும் சன்னமான வெளிச்சம் இருப்பது, திறந்திருந்த பக்கவாட்டு ஒற்றை ஜன்னல் கதவின் வழியாகத் தெரிந்தது.

அவன் நடந்து அந்த ஜன்னலுக்கு நேர் கீழாக நின்றபோது– மாடியில் இருந்து சித்ராவின் சிரிப்பு சத்தமும், சுதிரின் சன்னமான பேச்சுக் குரலும் மெதுவாகக் கேட்க...

அவனின் காதோரங்கள் சூடாகத் தொடங்கின.

பின்னர், சுவரில் பதிக்கப்பட்டு இருந்த குழாயைப் பிடித்து சரசரவென்று ஏறினான். ஜன்னலுக்கு அருகில் வந்து மெதுவாக



எட்டிப் பார்த்து உறைந்து போனான்.

சித்ராவும், சுதிரும் கட்டிலில் அரைகுறை ஆடைகளுடன் ஒருவரை ஒருவர் அணைத்தபடி கிடக்க... அவர்களின் பேச்சு இப்போது மிகத் தெளிவாகக் கேட்டது.

"சித்ரா டார்லிங்... இன்னும் எத்தனை நாளைக்குத்தான் நடிப்பே?"

"சுதிர், ஆடற மாட்டை ஆடிக் கறக்கணும். பாடற மாட்டை பாடிக் கறக்கணும். நமக்கு அமைஞ்சதோ கிறுக்குப் பிடிச்ச சண்டி மாடு. ஆந்திராவில மாட்டினானே... அவன் பேரென்ன? என்னவோ ராவ்ன்னு வருமே...?"

"சுதாகர் ராவ்!"

"அவன்தான் சரி. பத்தே நாள்ல என் வலையில விழுந்தான். காதல், காதல்னு என் முந்தானையைப் பிடிச்சி அலைய வச்சி ஒரே மாசத்தில கல்யாணம். சாமர்த்தியமா கொலை செஞ்சு மாரடைப்புன்னு நம்ப வச்சு அழுது, விதவை வேஷம் போட்டு, சொத்து முழுசும் கைக்கு வந்ததும் முகாமை மாத்தியாச்சு."

"என்ன பெரிய சொத்து! நாலரை லட்சம்தான் தேறிச்சி. ஆனா, மித்ராவுக்கு கிட்டத்தட்ட நாப்பது லட்சம் தேறும்."

"இல்லை. இன்னும் மேலயே தேறும். அதனாலதான் பொறுமையா இருக்க வேண்டியது இருக்கு. இரக்கத்தில காதல் பிறக்க வைக்கலாம்னு நான் சொன்ன 'ஐடியா'படி அவனோட முதல் அறிமுகத்தை விபசார விடுதியிலேயே வெச்சி, போதை ஊசி அது இதுன்னு கதைவிட்டு... அப்படியே நம்பிட்டான்.

இந்த நிமிஷம் என்னை ஒரு தேவதை மாதிரி நினைச்சி பூஜிக்கிறான். இவனை கல்யாணத்துக்கு சம்மதிக்க வைக்கிறதே பெரும்பாடா போயிடுச்சி. இவனோட பழைய காதலி வாழ்க்கையைக் கெடுத்தாதான் கல்யாணம்ங்கறான். சரின்னு அவன் சொன்ன மாதிரி எல்லாம் நடிச்சேன். நடிக்கிறது எனக்குப் புதுசா என்ன?"

"கடைசியா என்ன சொல்றான்?"

"மேனகா சட்டப்படி விவாகரத்து ஆகிற அதே தினம் எனக்கு தாலி கட்டுறானாம்."

"பல மாசமாகலாம் சித்ரா."

"ஆகட்டும் சுதிர். நாப்பது லட்சம் நோகாம வராது. பாதி கிணறு

தாண்டியாச்சு. மீதி இனைறு தாண்டறதுக்குள்ளே அவசரப்படாதே. அப்புறம்... நீ இந்த மாதிரி இங்கே வர்றது இதுவே முதலும், கடைசியுமா இருக்கட்டும்."

மித்ராவுக்கு நெஞ்சு வலித்தது. கைகள் பிடிப்பை இழந்து விழுந்துவிடுவோம் என்கிற உணர்வு வர... வந்த சுவடு தெரியாமல் கீழே இறங்கினான். நடைபிணமாக தன் காருக்கு நடந்தான்.

அசுர வேகத்தில் அதை ஓட்டத் தொடங்கினான்.

'உன்னை எவ்வள்வு உயர்வாக நினைத்திருந்தேன் சித்ரா? கடைசியில் நீயும் ஒரு சாக்கடையா? துரோகியா? இத்தனை கேடு கெட்டவளா?

நான், பிரமாதமான திட்டம் தீட்டி மேனகாவை முட்டாளாக மாற்ற நினைத்தால்... நீயும், சுதிரும் அதைவிட பெரிய திட்டம் போட்டு என்னை முட்டாளாக்கத் துடித்துக்கொண்டு இருக்கிறீர்களா?

யார்? யார்... நானா முட்டாள்?'

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மனம் போன போக்கில் காரைச் செலுத்தின மித்ரா, மூடிக்கொண்டிருந்த அந்த பிளாட்பார கடை அருகே காரை நிறுத்தினான். 'ஹாரன்' அடித்தான்.

"கத்தி கொடுப்பா, நல்ல பெரிய கத்தியா கொடு."

கடைக்காரன் ஒரு பெரிய கத்தி எடுத்து, "நூற்றி பத்து ரூபா" என்றான். நோட்டை வீசிவிட்டு, "இதனால ஒரு ஆளைக் குத்தினா உசிரு போயிடுமில்லை?" என்று கேட்க,

கடைக்காரன் அதிர்ச்சியுடன் பார்க்க... காரை வேகமாகக் கிளப்பினான் மித்ரா.

## 12

நேராக சித்ராவின் வீட்டு வாசலிலேயே காரை நிறுத்தி ஆவேசமாக இறங்கியபோது, அங்கே சுதிரின் மோட்டார் சைக்கிள் இல்லை.

கதவில் கை வைக்க, அது மறுப்பில்லாமல் திறந்துகொண்டது. உள்ளே நுழைந்தான். நேராக மாடி படுக்கையறைக்கு வந்து



கதவைத் திறந்தான்.

கட்டிலில் கத்திக் குத்து பட்டு ரத்த வெள்ளத்தில் சித்ரா இறந்து கிடக்க... கத்தி முனையில் இருந்து சொட்டும் ரத்தத்துடன் முகம் வியர்த்தபடி நின்றிருந்தான் ஸ்ரீதரன். மித்ராவைப் பார்த்து அதிர்ந்து போய்விட்டான். அவனிடம் இருந்து லேசாக மது வாடை வீசியது.

"மித்ரால்ல நீங்க? இந்தச் சண்டாளி என்னோட வாழ்க்கையோட அநியாயமா விளையாடிட்டா. என் மனைவியை என்கிட்டே இருந்து பிரிச்சிட்டா. எனக்கு ஆத்திரம் தாங்கலை. வேற வழி தோணலை. குத்திட்டேன். எனக்கு கவலை இல்லை. ஜெயிலுக்குப் போகத் தயார். தப்பிக்கணும்னு எந்த முன்னேற்பாடும் நான் செய்துக்கலை..." என்றான் ஸ்ரீதரன்.

சில விநாடிகளுக்கு சித்ராவையும், அவனையும் மாறி மாறி பார்த்த மித்ரா– அவனை நெருங்கினான். அவனது கையில் இருந்து கத்தியை வலுக்கட்டாயமாக வாங்கிக்கொண்டான்.

"இந்தக் கொலையை நீங்க செய்யலை. நான்தான் செஞ்சேன்' என்றான் அழுத்தம் திருத்தமாக.

புரியாமல் பார்த்தான் ஸ்ரீதரன்.

" இவளை உங்க வாழ்க்கையில விளையாட வச்சது நான்தான். மேனகா முதல்ல என்னைக் காதலிச்சது உங்களுக்குத் தெரியும். அவ என்னைவிட்டு விலகி உங்களை கட்டிக்கிட்ட துரோகத்தை என்னால தாங்க முடியலை. அவ கல்யாணத்தை உடைச்சி, அவளை தனி மரமாக்கணும்னு எனக்குள்ளே வெறி. அதனால இவளைப் பயன்படுத்தி உங்களுக்கும், அவளுக்கும் தொடர்பு இருக்கற மாதிரி படிப்படியா நம்ப வைக்க எல்லா திட்டத்தையும் போட்டுக் கொடுத்ததே நான்தான்.

ஆனா, இவ என் உயிருக்கே உலை வைக்கிற நோக்கத்தோட இத்தனை நாளும் என்னோட நெருங்கிப் பழகி இருக்காள்னு இப்பதான் தெரிஞ்சது. இவளைத் தீர்த்துடணும்னு வந்தேன். நீங்க முந்திட்டீங்க.

வேணாம்... நீங்க ஜெயிலுக்குப் போக வேணாம்... நான் போறேன். இந்தப் பழியை ஏத்துக்கறேன். கடைசியா ஒரு நல்ல காரியம் செய்துடறேன். எல்லாத்துக்கும் நான்தான் காரணம்ங்கிறதை உங்கிட்ட சொன்ன மாதிரி, மேனகாகிட்டேயும் சொல்லிட்டு அப்புறம்

நானே போலீஸ்ல 'சரண்டர்' ஆகிடறேன். நீங்க தயவு செஞ்சு இதை மறந்துடுங்க. புறப்படுங்க முதல்ல... இந்த இடத்தைவிட்டுப் புறப்படுங்க."

வற்புறுத்தி அவனை வீட்டைவிட்டு வெளியேற்றிய மித்ரா போன் செய்து, "அவசர போலீசா? அட்ரஸ் சொல்றேன். உடனே வாங்க. இங்கே சித்ராங்கற பொண்ணை நான் கொலை செஞ்சுட்டேன். என் பேர் மித்ரா. நானே உங்கிட்ட 'சரண்டர்' ஆகிடுவேன்" என்றான்.

★★★

தூக்கக் கலக்கத்துடன் கதவைத் திறந்த மேனகா, அந்த நேரத்தில் புன்னகையுடன் நின்ற மித்ராவைப் பார்த்து குழம்பினாள்.

"மேனகா, நான் ஒரு பெரிய கதை சொல்லப்போறேன்" என்றான்.

சித்ராவை துருப்புச் சீட்டாக்கி, கணவன்-மனைவியைப் பிரிக்க தான் போட்ட அத்தனை நாடகத்தையும் முழுமையாக விளக்கினான்.

மேனகாவின் மனதில் தெளிவு பிறந்தபின், காவல் நிலையம் நோக்கி நடந்தான் மித்ரா.

(முற்றும்)

# அறிவுப் போட்டி – 641

## 5 பேருக்கு தலா ரூ.200 பரிசு

'ராணிமுத்து' அறிவுப்போட்டி 641 – ல் 5 பேர் சரியான விடை எழுதி இருந்தார்கள். பரிசுத் தொகை ரூ. 1000, ஆளுக்கு ரூ.200 வீதம் வழங்கப்படுகிறது.

சரியான விடை: **(1)பூமி (2)விநாயகர் (3)இலகுரகம் (4)திலகர் (5)பரிசு (6)வெள்ளை (7)சீனா (8)தாய்மை (9)மரம் (10)சூரியகாந்தி (11)வேம்பு (12)சுத்தம்.**

பரிசு பெற்றவர்கள்:

(1)எஸ்.ஹேமா, திருநெல்வேலி (2)வே.அமல்ராஜ், மதுராந்தகம் (3)ர.விஜயலெட்சுமி, மன்னார்குடி (4)எஸ்.தங்கராஜ், மதுரை (5)பிரமிளா, குரும்பபாளையம்.

# அறிவுப் போட்டி – 642

## 18 பேருக்கு தலா ரூ.55 பரிசு

'ராணிமுத்து' அறிவுப்போட்டி 642 – ல் 18 பேர் சரியான விடை எழுதி இருந்தார்கள். பரிசுத் தொகை ரூ. 1000, ஆளுக்கு ரூ.55 வீதம் வழங்கப்படுகிறது.

சரியான விடை: **(1)சர்க்கரை (2)கல்லீரல் (3)வெப்பம் (4)வெள்ளை (5)காளான் (6)நூலாடை (7)உச்ச நீதிமன்றம் (8)திருக்கார்த்திகை (9) அருவி (10)ஹெலிகாப்டர் (11)கல் (12) குடியாட்சி.**

பரிசு பெற்றவர்கள்:

(1)ஏ.ரமணி, மதுரை (2)கே.எம்.ராஜ்முகம்மது, அத்திக்கடை (3)சிவசுப்பிரமணியன், அண்ணாமலைநகர் (4)த.விமலா, விருதுநகர் (5)கே.விஸ்வநாத், பெங்களூர் (6)ஏ.சிவராம், திருச்சி (7) வி.பி.லோகநாதன், அந்தியூர் (8) பி.கண்ணன், கடலூர் (9)ப.ராமகிருஷ்ணன், காயக்காடு (10)கே.விஜயலட்சுமி, வேளாந்தாங்கல் (11)எஸ். நவீனா தாமு, பொன்னேரி (12)எச். அரிகுமார், குரும்பபாளையம் (13)கே.தர்மராஜ், சோமூர் (14) க.மிருணாலினி, கொரட்டி (15)சூர்யா, கோவை (16)எஸ்.தீபா ஆனந்தி, சென்னை (17)ஆர்.சுதர்சன், பூனாம்பாளையம் (18)மு.ஜெயதேவி, புதுச்சேரி.

# அறிவுப் போட்டி – 643

## 8 பேருக்கு தலா ரூ.125 பரிசு

'ராணிமுத்து' அறிவுப்போட்டி 643 – ல் 8 பேர் சரியான விடை எழுதி இருந்தார்கள். பரிசுத் தொகை ரூ. 1000, ஆளுக்கு ரூ.125 வீதம் வழங்கப்படுகிறது.

சரியான விடை: **(1)ஜனாதிபதி (2)தெலுங்கு (3)சரணம்**

# சாரதையின் தந்திரம்





**கல்கி**

**1**

“அடி அக்கா, எனக்கு உன்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? என் கவலைகளை யாரிடம் சொல்லி ஆறுவேன்? இத்தனை நாளாக எட்டிப் பாராமல் இருந்துவிட்டாயே!” என்று சொல்லி, சாரதையின் மடியில் முகத்தை



வைத்துக்கொண்டு கண்ணீர் வடித்தாள் லட்சுமி.

“அசடே... நீ என்ன இன்னமும் பச்சைக் குழந்தையா? பதினெட்டு வயதாகிறது. ஒரு குழந்தை பெற்றெடுத்துவிட்டாய். வெட்கமில்லாமல் அழுகிறாயே! சங்கதி என்ன? சொல்” என சாரதை அருமையுடன் லட்சுமியின் கண்ணீரைத் துடைத்தாள்.

இப்பெண்மணிகள் சென்னை மயிலாப்பூரில் மாடவீதி ஒன்றில் இருந்து பிரிந்து செல்லும் ஒரு தெருவில் ஓர் அழகிய புது வீட்டின் மாடி மீதிருந்த ஹாலில் அமர்ந்திருந்தனர். அவர்களில் சாரதை பத்தரைமாற்று பொன்னொத்த மேனியினாள்– விசாலமான நெற்றியும், அறிவு ஊறித் ததும்பும் கண்களும் படைத்தவள்.

அவள் கண்களினுள்ளே இருந்த கருவிழிகளோ, அங்குமிங்கும் குறுகுறுவென்று அலைந்துகொண்டிருந்தன. தன் கடைக்கண் வீச்சாகிய ஒரே ஆயுதத்தின் துணைகொண்டு ஆடவரையும், பெண்டிரையும் அடக்கி ஆளும் திறனுடையவள் என்பது அவ்விழிகளை ஒரு முறை பார்த்த அளவினாலே விளங்கும். அப்போது மலர்ந்த ரோஜா மலரின் இதழையொத்த தன் அதரங்களில் புன்னகை இருக்க, வேறு பொன் கல் நகைகள் எதற்கு என்று கருதியே போலும், அவள் அதிக ஆபரணங்கள் அணிந்துகொள்ளவில்லை. தலைப்பில் சரிகைக் கரைபோட்ட நீல நிற கதர்ப் புடவை அவள் மேனி அழகைப் பதின் மடங்கு மிகுதிப்படுத்திக் காட்டிற்று.

இப்பொன்னொத்த வண்ணமுடையாளினின்னும் பல வகையிலும் மாறுபட்டிருந்தாள் லட்சுமி. அவள் மாநிற மேனியினாள். திருத்தமாக அமைந்திருந்த அவள் திருமுக மண்டலம், இதுகாலை சோகத்தினால் வாட்டமுற்றிருந்ததாயினும் அழகும், அமைதியுமே அதன் இயற்கை அணிகள் என்பது நன்கு விளங்கிற்று. அவள் கண்ணில் அளவிடப்படாத தூய உண்மைக் காதல் பொங்கித் ததும்பிக்கொண்டிருந்தது. எல்லோரையும் மகிழ்விக்கும் இனிய குணமும், அளவற்ற அன்பும் அவள் தோற்றத்திலே நிகழ்ந்தன. சோகத்திலும் மலர்ந்திருந்தன அவளது செவ்விதழ்கள். அவள் தரித்திருந்தது, விலை உயர்ந்த சிவப்பு வர்ணப் பட்டுப் புடவை. பொன்– வைர நகைகளும் அணிந்திருந்தாள்.

லட்சுமி, முத்து முத்தாகத் துளித்துப் பெருகிய கண்ணீரைத் தன் சேலைத் தலைப்பினால் துடைத்து, சாரதையின் இரு கரங்களையும் தன் கரங்களால் பிடித்துக்கொண்டு சொல்வாள்.

“அக்கா! எனக்கு வயதாகிவிட்டது உண்மையே. ஆனால்,

உன்னைக் கண்டல் நான் குழந்தையாகிவிடுகிறேன். என்னைவிட நீ ஒரு வயதுதான் மூத்தவள். ஆயினும் எனக்கு வினாத் தெரிந்தது முதல் தாய்போல் இருந்து வரவில்லையா? பெற்ற தாய் இறந்த துயரத்தை நான் உணராமல் செய்தது யார்? என் சித்தி கோபித்துக்கொண்டால் உடனே உன்னிடம் ஓடி வந்து ஆறுதல் பெறுவேன்..."

"இந்தக் கதையெல்லாம் இப்போது எதற்கு... இனிமேல் அம்மாதிரி நாம் குழந்தைகளாகப் போகிறோமா?" என்று சாரதை இடைமறித்துக் கூறினாள்.

"இல்லை அக்கா, கொஞ்சம் பொறு. நமது இளம் பிராய நட்பின் நினைவுகள் எனக்கு எத்தனை மகிழ்ச்சி அளிக்கின்றன? அத்தான், பள்ளிக்கூட விடுமுறைக்கு ஊர் வரும்போதெல்லாம், நாம் அளவு கடந்த மகிழ்ச்சியடைவோம். அவரும் நம்மிடம் பிரியமாயிருந்தார். நமக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பார். கதைகள் சொல்லிக் காலம் கழிப்பார். நம்முடன் சேர்ந்து விளையாடுவார்.

ஊரில் எல்லாரும் அத்தானுக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டார்கள். நீ மட்டும் 'இல்லவே இல்லை... அத்தானுக்கு லட்சுமிதான் வாழ்க்கைப்படப் போகிறாள். அத்தானும் சாது. லட்சுமியும் சாது. அவர்கள் இருவருக்கும்தான் பொருத்தம். நான் நல்ல போக்கிரி ஒருவனுக்கு வாழ்க்கைப்படப் போகிறேன். பின்னர், அவனை அடக்கிச் சாதுவாக்கிவிடுவேன்' என்று வேடிக்கையாகச் சொல்லிக்கொண்டு வருவாய். அப்போதெல்லாம் உன்னிடம் எவ்வளவு நன்றி பாராட்டினேன்? அவ்வளவுக்கு இப்போது உன்னைச் சபிக்கிறேன்" என்று கூறுகையில் லட்சுமி விம்மி விம்மி அழலானாள்.

சாரதைக்குச் சற்று விளங்க ஆரம்பித்தது. "அடியே... என்ன சொல்லுகிறாய்? அத்தான் உன்னைத் துன்புறுத்துகிறானா என்ன... சொல்லு?" என்றாள். அவள் கண்களின் ஓரங்கள் சிறிது சிவந்து, கோபக்குறி காட்டலாயின.

"ஐயோ, துன்பப்படுத்தினால் பாதகமில்லையே? உன்னிடம் சொல்லியிருக்கவே மாட்டேன். ஆம், அக்காலத்தில் எல்லாம் நீ சொன்னபடியே ஆயிற்று. தெய்வம் நமக்குச் சகாயமாயிருந்தது. கடைசியாக அத்தானுக்கு என்னையே கல்யாணம் செய்து கொடுத்தார்கள். உனக்கு 'அகத்துக்காரர்' பட்டணத்தில் இருந்து வந்தார். நீ சொல்லியபடியே கிராப்பும், உடுப்பும், பூட்ஸும், மூக்குக்கண்ணாடியுமாக அவர் இருந்தார். நாங்கள் 'போக்கிரி



மாப்பிள்ளை' என்று சொல்லிக் காட்டினோம். 'பேசாமலிரு, இரண்டு வருஷத்தில் எல்லாம் அடக்கிப் போடுகிறேன்' என்று நீ சொல்லிக்கொண்டு வந்தாய். அந்த மாதிரியே செய்து முடித்தாய். காலரும், கழுத்துச் சுருக்கும் மாட்டிக்கொண்டு வந்தவர்– இப்பொழுது நாலு முழக் கதர்த்துணியுடன் நின்று வருகிறார். ஆனால், என்னுடைய சாது அத்தானோ...!"

"அதைச் சொல்! என்ன செய்தான்?"

"நீ அவர் மீது கோபிப்பதில் பயனில்லை. அக்கா! எனக்குச் சாமர்த்தியமில்லை, அழகில்லை, அதிர்ஷ்டமும் இல்லை... அவ்வளவுதான். இருந்தாலும் உன்னிடம் என் குறையைச் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன்? மேலும், எல்லாம் உன்னாலேயே வந்தது. நீ ஏன் திருவல்லிக்கேணிக்குப் போனாய்? போனதுதான் போனாய்; எங்களை ஏன் உடன் அழைத்துக்கொள்ளவில்லை? நீ போன பிறகே எனக்கு இத்துயர் வந்தது."

"ஆ... கள்ளி, இந்த ஒரு வருஷமாகவா நீ இப்படிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாய்? ஏன் இத்தனை நாளாக எனக்குச் சொல்லவில்லை?"

## 2

"இல்லை, அக்கா! இதுவரை எனக்குத் திடமாக விவரம் தெரியவில்லை. ஒரு மாதத்திற்கு முன்புதான் தெரிந்தது. அதற்குப் பின் நீ இங்கு வரவேயில்லை. நீ இவ்வூரை விட்டுப் போவதற்கு முன்பு எங்கள் வாழ்க்கையைப் பற்றி உனக்குத் தெரியுமே! அத்தகைய இன்ப வாழ்க்கை இனி இந்த ஜென்மத்தில் உண்டா என்று நான் ஏங்குகிறேன், ஆபீசில் இருந்து அவர் நேரே வீட்டுக்கு வருவார். சில தினங்கள் நாங்கள் எல்லாரும் சேர்ந்து கடற்கரைக்குப் போவோம். என்றாவது ஒரு நாள் சினிமா அல்லது கதை, பாட்டுக் கச்சேரிக்குச் செல்வோம். என்னை அழைத்துக்கொள்ளாமல் அவர் எங்கும் போனதில்லை. வெளியே போகாத நாட்களில் புத்தகம் ஏதேனும் வாசித்துக் காட்டுவார். இல்லாவிடில், பாடச் சொல்வார். 'ஆபீசுக்குப் போக வேண்டியிருக்கிறதே' என்று கஷ்டத்துடன் சொல்வார். வேறெங்கும் ஒரு நிமிஷமும் தங்கமாட்டார்.

ஆனால், நீ இவ்வூரை விட்டுப் போன இரண்டொரு மாதங்களில், அதாவது இவ்வருஷ ஆரம்பத்தில், இந்த நிலைமை மாறிவிட்டது. சில தினங்களில், வெகு நேரங்கழித்து வீட்டுக்கு வருவார். சனி- ஞாயிறுகளில் கடற்கரை முதலிய இடங்களுக்கு என்னை அழைத்துக்கொண்டு போவதை நிறுத்திவிட்டார். என்னுடன் பேசுவதிலேயே அவருக்கு முன்போல் இன்பமில்லை என்பதைக் கண்டேன். ஜனவரி, பிப்ரவரி- இவ்விரண்டு மாதமும் இவ்வாறே நிகழ்ந்து வந்தது. பிறகு அவ்வளவு மோசமில்லையாயினும் முன்னிருந்த அன்பும், ஆதரவும் பார்க்க முடியவில்லை. முன்னெல்லாம் சீட்டாட்டம் என்றால் எரிந்து விழுந்துகொண்டிருந்தவர், இப்போது சீட்டாட்டத்தில் அளவிறந்த பித்துக்கொண்டார்.

சில தினங்களில் அவருடைய நண்பர்களைக் கூட்டிக் கொண்டு வந்து சீட்டுக்கடை போட்டுவிட்டார். எல்லாருக்கும் காப்பி வைத்துக் கொடுக்கச் சொல்வார். அப்பா... எத்தகைய நண்பர்கள்! அவர்களைக் கண்டாலே எனக்கு எரிச்சலாயிருந்தது. ஆயினும், நான் வாய் திறந்து ஏதும் சொல்லவில்லை. உன்னுடைய பிடிவாதத்தில் உன் அகத்துக்காரர் சுருட்டுக் குடிப்பதை விட்டுவிட்டார் என்று சொன்னாயே அக்கா! இந்த அவமானத்தை எவ்வாறு சொல்வேன்? இதுவரையும் சுருட்டுக் குடிப்பவர்களைக் கண்டாலே அருவருத்து வந்தார். இப்போது தாமே சுருட்டுக் குடிக்க ஆரம்பித்துவிட்டார். இவையெல்லாம் அற்ப விஷயங்களென்று நான் உன்னிடம்கூடச் சொல்லவில்லை. ஆனால், இந்த டிசம்பர் மாதம் பிறந்த பிறகே எனக்கு உண்மை தெரியவந்தது. ஒரு நாள் அவரும், அவருடைய நண்பர்களும் பேசிக்கொண்டிருந்தபோது, 'கிண்டிக்கு ரெயிலில் போகலாமா... மோட்டாரில் போகலாமா?' என்று கேட்டுக்கொண்டிருந்தது என் காதில் விழுந்தது..."

"ஐயோ, துரதிர்ஷ்டசாலியான பெண்ணே!" என்று சாரதை லட்சுமியைக் கட்டித் தழுவிக்கொண்டாள்.

"முழுவதும் சொல்லிவிடுகிறேன் அக்கா! உடனே என் தலையில் இடி விழுந்தது போலிருந்தது. கிண்டி குதிரைப் பந்தயத்தால் அடியோடு அழிந்த குடும்பங்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டு இருக்கிறோமல்லவா! அன்று நான் ஒரு தப்புக் காரியம் செய்தேன். அத்தான் வெளியே போயிருந்தபோது, அவர் பெட்டியைத் திறந்து, பாங்கிக் கணக்குப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். இந்த நான்கு வருஷமாக, மாதச் சம்பளத்தில் வீட்டுக்குச் செலவானது போக, குறைந்தது ஐம்பது ரூபாய் நாங்கள் மீந்து வருகிறோம்.



முதலும், வட்டியும் சேர்ந்து குறைந்தது மூவாயிரம் ரூபாயாவது இருக்க வேண்டுமென்பது என் எண்ணம். ஆனால், பாங்கிக் கணக்கின் கடைசியில் 58 ரூபாய் சொச்சமே பாக்கி இருப்பதாகக் குறிப்பிட்டிருந்ததைக் கண்டதும், என் அடி வயிற்றில் நெருப்பைக் கட்டியது போலாயிற்று.

இவ்வருஷ ஆரம்பத்தில் ஜனவரி, பிப்ரவரி- இரண்டு மாதங்களில் சுமார் இருநூறு ரூபாய், பாங்கியில் இருந்து வாங்கப்பட்டதாக எழுதியிருந்தது. அதிலிருந்து, என்னுடைய சந்தேகங்கள் நிவர்த்தியாயின. ஆனால், என் துக்கம் பதின் மடங்கு அதிகமாயிற்று. அதற்கடுத்த சனிக்கிழமை அன்று அக்கா- வெளியில் சொன்னால் வெட்கம். போன வருஷம் இருநூறு ரூபாய்க்கு எடுத்த வைர மூக்குத்தியை, வாங்கிக்கொண்டு போனார். அதற்காக என்னிடம் பொய்யும் சொன்னார். யாரோ நண்பர் ஒருவர் வீட்டில் கல்யாணம் என்றும், இரவல் கேட்கிறார்கள் எனவும் கூறினார்..."

"அயோக்கியன், கோழை, திருடன்..." என்று சகஸ்ரநாம பாராயணம் செய்யத் தொடங்கினாள் சாரதை.

"சசை. என்னெதிரில் இப்படியெல்லாம் சொல்லாதே. நகையும், பணமும் நாசமாய்ப் போகட்டும். எங்கள் வாழ்வு குலைந்துவிடும் போலிருக்கிறதே... என்ன செய்வேன்? அவருக்குப் பத்திரிகை படிப்பதிலிருந்த உற்சாகம் உனக்குத் தெரியுமே! பத்திரிகை வந்ததும் எவ்வளவு ஆவலுடன் வாங்கிப் படிப்பார்? எவ்வளவு உற்சாகத்துடன் பத்திரிகையிலுள்ள விஷயங்களை எடுத்துச் சொல்வார்! இப்பொழுது அந்த உற்சாகமெல்லாம் எங்கேயோ போய்விட்டது. இது மட்டுமா? நான் கதர் சேலைதான் கட்டிக்கொள்ள வேண்டுமென்று முன்னெல்லாம் எவ்வளவு பிடிவாதமாகச் சொல்வார்? பத்து நாளைக்கு முன் வாசலில் பட்டுச்சேலை வந்தது. 'வாங்கட்டுமா?' என்று கேட்டேன். 'எதை வேண்டுமானாலும் வாங்கிக்கொள்' என்றார்.

அந்தப் பாழான குதிரைப் பந்தயத்தைத் தவிர, வேறொன்றிலும் அவருக்கு இப்போது சிரத்தையில்லை. ஒரு மாதமாக இராட்டினம் சுற்றுவதையும் நிறுத்திவிட்டார். என்னிடம் இச்செய்தியை ஒளித்து வைத்திருப்பதால், என்னோடு பேசுவதற்கே அவருக்கு வெட்கமாக இருக்கிறது. அக்கா! என்ன செய்யலாம்... சொல்லேன். அவரிடம் எல்லாம் எனக்குத் தெரியுமென்று சொல்லிவிடட்டுமா! இவையெல்லாம் போனாலும், இன்னும் ஒரு பெரும் பய

ஏற்பட்டிருக்கிறது.

அவர் நண்பர்கள் எல்லாரும் குடிகாரர்கள் எனத் தெரிகிறது. ஒரு நாள் அவர், 'அதற்கு மட்டும் என்னைக் கூப்பிடாதீர்கள்' என்று சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். 'இன்னும் எத்தனை நாளைக்கு?' என்று அந்த அழகான நண்பர்களில் ஒருவர் சொன்னதும் காதில் விழுந்தது. அன்றில் இருந்து, 'இன்னும் எத்தனை நாளைக்கு?' என்றுதான் நானும் என் மனதில் கேட்டுக்கொண்டு வருகிறேன். குழந்தைப் பருவத்தில் இருந்து எனக்குக் கஷ்டம் வந்தபோதெல்லாம் உன்னிடமே தஞ்சம் புகுந்தேன். இப்போதும் உன்னிடமே வந்தேன். நீயே என் வாழ்க்கையைக் காப்பாற்றித் தர வேண்டும்" என்று லட்சுமி சொல்லி முடித்தாள்.

## 3

**சா**ரதை எழுந்து சென்று ஜன்னலின் பக்கத்தில் தெருவைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்றாள். சற்று ஆழ்ந்த சிந்தனையில் இருந்து திரும்பி வந்தாள்.

"லட்சுமி! இதோ பார். நளாயினி, தமயந்தி, சீதை– இவர்களைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்று கேட்டாள்.

லட்சுமி ஒன்றும் புரியாமல், "ஆம்" என்றாள்.

"அவர்களுடைய வரலாறுகள் தெரியுமா?"

"தெரியும்."

"அப்படியானால் இந்த விவரங்களையெல்லாம் என்னிடம் ஏன் சொன்னாய்?"

லட்சுமி விம்மி அழ ஆரம்பித்தாள். சாரதை அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு, "அடி அசடே, அழாதே. உன்னுடைய சக்தியை நீ தெரிந்துகொள்ளவில்லை. உன் உள்ளத்தில் காதல் இருக்கிறது. உன் முகத்தில் மோகம் இருக்கிறது. உன் கண்களிலே இன்பம் இருக்கிறது. (அச்சமயத்தில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை, கண் விழித்து எழுந்தது) இதோ இந்தச் செல்வன் இருக்கிறான். இவ்வளவு ஆயுதங்களையும் கொண்டு உன் கணவனுடன் போராடி வெற்றி பெறாவிட்டால், நீ எதற்குப் பிரயோஜனம்? உன் கணவனுக்கு



குதிரைப் பந்தயத்திலும், சீட்டாட்டத்திலும் உள்ள சிரத்தை உன்னிடம் ஏற்படாவிட்டால் அது யாருடைய தவறு?"

லட்சுமி ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றாள்.

"ஒன்று சொல்கிறேன் கேள். உன் கணவன் தன் குற்றத்தை மறைக்க விரும்பும் வரையில், அதைத் தெரிந்துகொண்டதாக நீ காட்டிக்கொள்ளாதே. அதற்காக உன்னிடம் அவன் ஒருக்காலும் சந்தோஷப்படமாட்டான். ஒன்றும் நேரிடாதது போல் முன்னைவிட அதிகமான அன்பு காட்டு. அவன் கவனத்தைக் கவர முடியாவிட்டால், உன் காதல் ஒரு பைசா பெறாது."

அடுத்த சனிக்கிழமை– தான் மறுபடியும் வருவதாக உறுதி கூறிவிட்டு சாரதை புறப்பட்டுச் சென்றாள். வீடு சென்றதும், அவள் தன் கணவன் மேசையைத் திறந்து கடிதமும், பேனாவும் எடுத்து ஏதோ எழுதினாள். எழுதி முடிந்ததும், 'சாது அத்தான் இப்படியா செய்கிறான்? இருக்கட்டும், அவனை லேசில் விடுகிறேனா பார்க்கலாம்' என்று தனக்குதானே மொழிந்துகொண்டாள். தான் எழுதியதை இன்னொரு முறை பார்த்துவிட்டுக் கைகொட்டிச் சிரித்தாள்.

## 4

**அ**டுத்த சனிக்கிழமை காலை, ஸ்ரீமான் நாராயணன் பி.ஏ. (ஆனர்ஸ்) தன் வீட்டின் முன்புறத்திலிருந்த ஹாலில் சாய்வான நாற்காலியொன்றில் சாய்ந்துகொண்டிருந்தான். நமது கதாநாயகன், பட்டம் பெற்று அரசாங்க உத்தியோகத்தில் ரூ.150 சம்பாதிப்பவனாயினும், கதை ஆசிரியனுக்குள்ள உரிமையால் அவனை ஏக வசனத்திலேயே அழைக்கின்றோம். கையில் இருந்த ஆங்கில சஞ்சிகையொன்றில் அவன் கருத்துச் சென்றிருந்தது. பந்தயக் குதிரையோட்டி ஒருவன் எப்படி கோடீசுவரன் புதல்வியால் காதலிக்கப்பட்டு பல இடையூறுகளுக்குள்ளாகி, கடைசியில் அவளை மணம் புரிந்தான் என்று கூறும் சிறுகதையை அவன் படித்துக்கொண்டிருந்தான். நாற்காலிச் சட்டத்தின் மீது ஆங்கில தினசரிப் பத்திரிக்கையும், ஒரு சிறு புத்தகமும் கிடந்தன.

பத்திரிகையில் பந்தயங்களையும் மற்றும் விளையாட்டுகளையும் பற்றிய விவரங்கள் உள்ள பக்கம் மேலே காணப்பட்டது. புத்தகம்,

ஏற்பட்டிருக்கிறது.

அவர் நண்பர்கள் எல்லாரும் குடிகாரர்கள் எனத் தெரிகிறது. ஒரு நாள் அவர், 'அதற்கு மட்டும் என்னைக் கூப்பிட்டாதீர்கள்' என்று சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். 'இன்னும் எத்தனை நாளைக்கு?' என்று அந்த அழகான நண்பர்களில் ஒருவர் சொன்னதும் காதில் விழுந்தது. அன்றில் இருந்து, 'இன்னும் எத்தனை நாளைக்கு?' என்றுதான் நானும் என் மனதில் கேட்டுக்கொண்டு வருகிறேன். குழந்தைப் பருவத்தில் இருந்து எனக்குக் கஷ்டம் வந்தபோதெல்லாம் உன்னிடமே தஞ்சம் புகுந்தேன். இப்போதும் உன்னிடமே வந்தேன். நீயே என் வாழ்க்கையைக் காப்பாற்றித் தர வேண்டும்" என்று லட்சுமி சொல்லி முடித்தாள்.

## 3

சாரதை எழுந்து சென்று ஜன்னலின் பக்கத்தில் தெருவைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நின்றாள். சற்று ஆழ்ந்த சிந்தனையில் இருந்து திரும்பி வந்தாள்.

"லட்சுமி! இதோ பார். நளாயினி, தமயந்தி, சீதை– இவர்களைப் பற்றி நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?" என்று கேட்டாள்.

லட்சுமி ஒன்றும் புரியாமல், "ஆம்" என்றாள்.

"அவர்களுடைய வரலாறுகள் தெரியுமா?"

"தெரியும்."

"அப்படியானால் இந்த விவரங்களையெல்லாம் என்னிடம் ஏன் சொன்னாய்?"

லட்சுமி விம்மி அழ ஆரம்பித்தாள். சாரதை அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு, "அடி அசடே, அழாதே. உன்னுடைய சக்தியை நீ தெரிந்துகொள்ளவில்லை. உன் உள்ளத்தில் காதல் இருக்கிறது. உன் முகத்தில் மோகம் இருக்கிறது. உன் கண்களிலே இன்பம் இருக்கிறது. (அச்சமயத்தில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை, கண் விழித்து எழுந்தது) இதோ இந்தச் செல்வன் இருக்கிறான். இவ்வளவு ஆயுதங்களையும் கொண்டு உன் கணவனுடன் போராடி வெற்றி பெறாவிட்டால், நீ எதற்குப் பிரயோஜனம்? உன் கணவனுக்கு



குதிரைப் பந்தயத்திலும், சீட்டாட்டத்திலும் உள்ள சிரத்தை உன்னிடம் ஏற்படாவிட்டால் அது யாருடைய தவறு?"

லட்சுமி ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றாள்.

"ஒன்று சொல்கிறேன் கேள். உன் கணவன் தன் குற்றத்தை மறைக்க விரும்பும் வரையில், அதைத் தெரிந்துகொண்டதாக நீ காட்டிக்கொள்ளாதே. அதற்காக உன்னிடம் அவன் ஒருக்காலும் சந்தோஷப்படமாட்டான். ஒன்றும் நேரிடாதது போல் முன்னைவிட அதிகமான அன்பு காட்டு. அவன் கவனத்தைக் கவர முடியாவிட்டால், உன் காதல் ஒரு பைசா பெறாது."

அடுத்த சனிக்கிழமை– தான் மறுபடியும் வருவதாக உறுதி கூறிவிட்டு சாரதை புறப்பட்டுச் சென்றாள். வீடு சென்றதும், அவள் தன் கணவன் மேசையைத் திறந்து கடிதமும், பேனாவும் எடுத்து ஏதோ எழுதினாள். எழுதி முடிந்ததும், 'சாது அத்தான் இப்படியா செய்கிறான்? இருக்கட்டும், அவனை லேசில் விடுகிறேனா பார்க்கலாம்' என்று தனக்குதானே மொழிந்துகொண்டாள். தான் எழுதியதை இன்னொரு முறை பார்த்துவிட்டுக் கைகொட்டிச் சிரித்தாள்.

## 4

அடுத்த சனிக்கிழமை காலை, ஸ்ரீமான் நாராயணன் பி.ஏ. (ஆனர்ஸ்) தன் வீட்டின் முன்புறத்திலிருந்த ஹாலில் சாய்வான நாற்காலியொன்றில் சாய்ந்துகொண்டிருந்தான். நமது கதாநாயகன், பட்டம் பெற்று அரசாங்க உத்தியோகத்தில் ரூ.150 சம்பாதிப்பவனாயினும், கதை ஆசிரியனுக்குள்ள உரிமையால் அவனை ஏக வசனத்திலேயே அழைக்கின்றோம். கையில் இருந்த ஆங்கில சஞ்சிகையொன்றில் அவன் கருத்துச் சென்றிருந்தது. பந்தயக் குதிரையோட்டி ஒருவன் எப்படி கோடீசுவரன் புதல்வியால் காதலிக்கப்பட்டு பல இடையூறுகளுக்குள்ளாகி, கடைசியில் அவளை மணம் புரிந்தான் என்று கூறும் சிறுகதையை அவன் படித்துக்கொண்டிருந்தான். நாற்காலிச் சட்டத்தின் மீது ஆங்கில தினசரிப் பத்திரிக்கையும், ஒரு சிறு புத்தகமும் கிடந்தன.

பத்திரிகையில் பந்தயங்களையும் மற்றும் விளையாட்டுகளையும் பற்றிய விவரங்கள் உள்ள பக்கம் மேலே காணப்பட்டது. புத்தகம்,

கிண்டி குதிரை பந்தயத்தில் போட்டியிடப்போகும் பற்பல குதிரைகளையும் பற்றிய விவரங்கள் அடங்கியது. நாராயணனது முழுக் கவனத்தையும் அக்கதை கவர்ந்ததாகத் தெரியவில்லை. அடிக்கடி சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தை ஏறிட்டு பார்த்துக்கொண்டிருந்தான். மணி பத்தரை ஆனதும், சஞ்சிகையை மூடி வைத்துவிட்டு, "லட்சுமி, சமையல் ஆகவில்லையா இன்னும்?" என்று உரத்த குரலில் கேட்டான்.

"ஆகிவிட்டது, வாருங்கள்."

இச்சமயத்தில், "சார், தபால்!" என்று கூறிக்கொண்டு தபால்காரன் வந்தான். நாராயணன் எழுந்து சென்று கடிதத்தை வாங்கி, உறையை உடைத்து உள்ளே இருந்த கடிதத்தைப் படித்தான். அவன் கண்களிலே அப்போது தோன்றிய அசட்டுப் பார்வை, கடிதத்தின் பொருள் அவனுக்கு விளங்கவில்லையென்று காட்டிற்று. கைக்குட்டையை எடுத்துக் கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு மற்றொரு முறை படித்தான். அக்கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது :

பிரியமுள்ள ஐயா,

ஆலகால விஷத்தையும் நம்பலாம்
ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினால்
'தெருவில் நின்று தயங்கித் தவிப்பரே'
என்ற பாட்டைத் தங்கள் சிந்தையிற் பதித்தல் நலம்

தங்கள் நன்மையை விரும்பும்
நண்பன்.

"ஏன் சாப்பிட வரவில்லை?" என்று குயிலோசையினும் இனிய குரலில் கேட்டுக்கொண்டு வந்தாள் லட்சுமி.

"ஏதோ கடிதம் வந்திருக்கிறது போலிருக்கிறதே. எங்கிருந்து வந்தது? விசேஷம் ஏதேனும் உண்டோ?"

"விசேஷம் ஒன்றையுங் காணோம்" என்று சொல்லி நாராயணன், கடிதத்தைச் சட்டைப்பையில் போட்டுக்கொண்டு சாப்பிட எழுந்து சென்றான்.

அன்று நாராயணன் சாப்பிடும்போது, அதிசயமான ஒரு காரியம் செய்தான். லட்சுமி உணவு பரிமாறுகையில், அவள் தன்னைப் பாராத சமயம் பார்த்து, திரும்பத் திரும்பச் சுமார் இருபது முறை அவளை உற்று உற்றுப் பார்த்தான். இன்னவென்று தெளிவாக விளங்காத





பலவகை ஐயங்கள் அவன் உள்ளத்தைக் குழப்பிக்கொண்டிருந்தன. சட்டென்று அவனுக்கு ஒன்று நினைவு வந்தது. லட்சுமியின் நடத்தையில் சென்ற ஒரு வாரமாக ஒருவகை மாறுதல் இருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. வழக்கத்தைவிடச் சற்று அதிகமாகவே இந்தச் சில தினங்களாய் அவள் தன்னிடம் அன்பு காட்டி வருவதாக நினைத்தான். இம்மாறுதலுக்குக் காரணம் என்ன?– இதற்கு விடை கூறிக்கொள்ள அவனுக்கே அச்சமாயிருந்தது.

சாப்பிட்ட பின்னர், நாராயணன் மீண்டும் வந்து நாற்காலியில் சாய்ந்துகொண்டு கடிகாரத்தைப் பார்த்தான். கிண்டிக்குப் போகும் முதல் 'ஸ்பெஷல்' பஸ்சைப் பிடிக்க வேண்டுமானால், உடனே கிளம்ப வேண்டும். அடுத்த 'ஸ்பெஷலு'க்குத்தான் போவோமே என்று எண்ணிக்கொண்டு அந்தக் கடிதத்தை இன்னொரு முறை எடுத்துப் பார்த்தான். அதை யார் எழுதியிருக்கக்கூடும்? அந்த எழுத்து?– எங்கேயோ பார்த்தது போல தோன்றிற்று. தலையை இரு கரங்களாலும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு யோசித்தான். பயனில்லை.

இதற்குள் மணி 12.30 ஆகிவிட்டது. 'இன்று ஒரு நாள் போகாவிட்டால் என்ன? ...ச்சை! இந்தப் பைத்தியக்காரக் கடிதத்துக்காகவா போகாமலிருந்துவிடுவது? நண்பர்கள் என்ன நினைப்பார்கள்?'– உடனே எழுந்து உடுப்புகளைத் தரித்துக்கொண்டு விரைந்து சென்றான்.

கடைசி 'ஸ்பெஷல்'தான் கிடைத்தது. வழக்கம்போல் நண்பர்கள் முதல் 'ஸ்பெஷலில்' போயிருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் அவர்களைக் கண்டுபிடிப்பதெப்படி? அன்று அவர்களைக் கண்டுபிடிக்க அவன் அவ்வளவு ஆவல் கொள்ளவில்லை.

அதிசயங்களிலெல்லாம் அதிசயம், அன்று நாராயணன் ஒரு பைசாகூடப் பந்தயம் வைக்கவில்லை! உண்மையில் அவன் மனம் பந்தயத்தில் செல்லவேயில்லை. லட்சுமியின் அதிகப்படியான –அன்பு – அக்கடிதம் – அதிலுள்ள எழுத்து – இவைகளிலேயே அவன் சிந்தை உழன்றுகொண்டிருந்தது.

பந்தயம் முடிந்து எல்லோரும் திரும்பியபோது, நாராயணனும் புறப்பட்டான். வண்டியில் நண்பர்களை சந்தித்தான். "ஓ! மிஸ்டர் நாராயணன்! உம்மைத் தேடித் தேடிப் பார்த்தோமே! எந்த 'ஸ்பெஷலில்' வந்தீர்?" என்று ஒருவர் கேட்டார்.

"கடிகாரத்தின் தவறு. முதல் 'ஸ்பெஷல்' புறப்பட்டு, இரண்டு



நிமிஷம் கழித்து வந்தேன்."

"ஓ! ஏதோ நேரிட்டுவிட்டதென்று பயந்தோம். ஆனால், முகம் ஏன் வாட்டமுற்றிருக்கிறது? ஏதேனும் பணம் தொலைந்து போயிற்றா?"

அப்பொழுதுதான் நாராயணனுக்குத் தன் சட்டைப் பையில் இருந்த சில்லரையைத் தவிர வேறு பணம் கொண்டு வரவில்லையென்று நினைவு வந்தது. ஆயினும் நமது கதாநாயகன் – எழுத வெட்கமாயிருக்கிறது– மீண்டும் ஒரு பெரும் பொய் சொன்னான். "ஆம், சார், இருநூறு ரூபாய்."

"கவலைப்படாதேயும்... அடுத்த வாரம் அதிர்ஷ்டம் அடிக்கலாம்" என்றார், அந்த 'அழகான' நண்பர்களில் ஒருவர்.

## 5

மறுநாள் முதல், தன் கணவனுடைய நடத்தையில் ஒரு வகை மாறுதலைக் கண்டு லட்சுமி அதிசயித்தாள். ஆபீஸ் விட்டதும் நாராயணன் நேரே வீட்டுக்கு வரத் தொடங்கினான். அவனுடைய நண்பர் குழுவை அழைத்துக்கொண்டு வருவதில்லை. என்றுமில்லாத வழக்கமாக ஒரு நாள் ஆபீஸ் வேலை நேரத்திலேயே வீட்டுக்கு வந்தான். இதற்குக் காரணமான தலைவலி, வீட்டுக்கு வந்து பத்து நிமிஷத்தில் மருந்து மாயமில்லாமல் பறந்துவிட்டது. லட்சுமிக்குச் சிறிது ஆச்சரியமளித்தது. அவ்வாரத்தில் லட்சுமி பல முறையும் சாரதாவை நன்றியறிதலுடன் நினைத்துக்கொண்டாள். தான் அவள் சொற்படி அதிக அன்புடனும், ஆதரவுடனும் நடந்துகொள்வதே தன் கணவன் நடத்தையில் மாறுதல் ஏற்படக் காரணமென அவள் நம்பினாள்.

அடுத்த சனிக்கிழமை காலை பத்து மணிக்கு வழக்கம் போல் நாராயணன், சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு கடிகாரத்தைப் பார்த்த வண்ணமாயிருந்தான். 'தபால்' என்ற சத்தம் கேட்டதும், அவன் நெஞ்சம் திடுக்கிட்டது. கடிதத்தின் உறை மீது விலாசத்தைப் பார்த்ததும், இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ளலாயிற்று. அக்கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:

பலவகை ஐயங்கள் அவன் உள்ளத்தைக் குழப்பிக்கொண்டிருந்தன. சட்டென்று அவனுக்கு ஒன்று நினைவு வந்தது. லட்சுமியின் நடத்தையில் சென்ற ஒரு வாரமாக ஒருவகை மாறுதல் இருப்பதாக அவனுக்குத் தோன்றிற்று. வழக்கத்தைவிடச் சற்று அதிகமாகவே இந்தச் சில தினங்களாய் அவள் தன்னிடம் அன்பு காட்டி வருவதாக நினைத்தான். இம்மாறுதலுக்குக் காரணம் என்ன?– இதற்கு விடை கூறிக்கொள்ள அவனுக்கே அச்சமாயிருந்தது.

சாப்பிட்ட பின்னர், நாராயணன் மீண்டும் வந்து நாற்காலியில் சாய்ந்துகொண்டு கடிகாரத்தைப் பார்த்தான். கிண்டிக்குப் போகும் முதல் 'ஸ்பெஷல்' பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமானால், உடனே கிளம்ப வேண்டும். அடுத்த 'ஸ்பெஷலு'க்குத்தான் போவோமே என்று எண்ணிக்கொண்டு அந்தக் கடிதத்தை இன்னொரு முறை எடுத்துப் பார்த்தான். அதை யார் எழுதியிருக்கக்கூடும்? அந்த எழுத்து?– எங்கேயோ பார்த்தது போல தோன்றிற்று. தலையை இரு கரங்களாலும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு யோசித்தான். பயனில்லை.

இதற்குள் மணி 12.30 ஆகிவிட்டது. 'இன்று ஒரு நாள் போகாவிட்டால் என்ன? ...ச்சை! இந்தப் பைத்தியக்காரக் கடிதத்துக்காகவா போகாமலிருந்துவிடுவது? நண்பர்கள் என்ன நினைப்பார்கள்?'– உடனே எழுந்து உடுப்புகளைத் தரித்துக்கொண்டு விரைந்து சென்றான்.

கடைசி 'ஸ்பெஷல்'தான் கிடைத்தது. வழக்கம்போல் நண்பர்கள் முதல் 'ஸ்பெஷலில்' போயிருக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் அவர்களைக் கண்டுபிடிப்பதெப்படி? அன்று அவர்களைக் கண்டுபிடிக்க அவன் அவ்வளவு ஆவல் கொள்ளவில்லை.

அதிசயங்களிலெல்லாம் அதிசயம், அன்று நாராயணன் ஒரு பைசாகூடப் பந்தயம் வைக்கவில்லை! உண்மையில் அவன் மனம் பந்தயத்தில் செல்லவேயில்லை. லட்சுமியின் அதிகப்படியான –அன்பு – அக்கடிதம் – அதிலுள்ள எழுத்து – இவைகளிலேயே அவன் சிந்தை ஊன்றிக்கொண்டிருந்தது.

பந்தயம் முடிந்து எல்லோரும் திரும்பியபோது, நாராயணனும் புறப்பட்டான். வண்டியில் நண்பர்களை சந்தித்தான். "ஓ! மிஸ்டர் நாராயணன்! உம்மைத் தேடித் தேடிப் பார்த்தோமே! எந்த 'ஸ்பெஷலில்' வந்தீர்?" என்று ஒருவர் கேட்டார்.

"கடிகாரத்தின் தவறு. முதல் 'ஸ்பெஷல்' புறப்பட்டு, இரண்டு



நிமிஷம் கழித்து வந்தேன்."

"ஓ! ஏதோ நேரிட்டுவிட்டதென்று பயந்தோம். ஆனால், முகம் ஏன் வாட்டமுற்றிருக்கிறது? ஏதேனும் பணம் தொலைந்து போயிற்றா?"

அப்பொழுதுதான் நாராயணனுக்குத் தன் சட்டைப் பையில் இருந்த சில்லரையைத் தவிர வேறு பணம் கொண்டு வரவில்லையென்று நினைவு வந்தது. ஆயினும் நமது கதாநாயகன் – எழுத வெட்கமாயிருக்கிறது– மீண்டும் ஒரு பெரும் பொய் சொன்னான். "ஆம், சார், இருநூறு ரூபாய்."

"கவலைப்படாதேயும்... அடுத்த வாரம் அதிர்ஷ்டம் அடிக்கலாம்" என்றார், அந்த 'அழகான' நண்பர்களில் ஒருவர்.

## 5

மறுநாள் முதல், தன் கணவனுடைய நடத்தையில் ஒரு வகை மாறுதலைக் கண்டு லட்சுமி அதிசயித்தாள். ஆபீஸ் விட்டதும் நாராயணன் நேரே வீட்டுக்கு வரத் தொடங்கினான். அவனுடைய நண்பர் குழுவை அழைத்துக்கொண்டு வருவதில்லை. என்றுமில்லாத வழக்கமாக ஒரு நாள் ஆபீஸ் வேலை நேரத்திலேயே வீட்டுக்கு வந்தான். இதற்குக் காரணமான தலைவலி, வீட்டுக்கு வந்து பத்து நிமிஷத்தில் மருந்து மாயமில்லாமல் பறந்துவிட்டது. லட்சுமிக்குச் சிறிது ஆச்சரியமளித்தது. அவ்வாரத்தில் லட்சுமி பல முறையும் சாரதாவை நன்றியறிதலுடன் நினைத்துக்கொண்டாள். தான் அவள் சொற்படி அதிக அன்புடனும், ஆதரவுடனும் நடந்துகொள்வதே தன் கணவன் நடத்தையில் மாறுதல் ஏற்படக் காரணமென அவள் நம்பினாள்.

அடுத்த சனிக்கிழமை காலை பத்து மணிக்கு வழக்கம் போல் நாராயணன், சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு கடிகாரத்தைப் பார்த்த வண்ணமாயிருந்தான். 'தபால்' என்ற சத்தம் கேட்டதும் அவன் நெஞ்சம் திடுக்கிட்டது. கடிதத்தின் உறை மீது விலாசத்தைப் பார்த்ததும், இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ளலாயிற்று. அக்கடிதத்தில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:

பிரியமுள்ள ஐயா,

எச்சரிக்கை! இந்தச் சனிக்கிழமை மாலை விழிப்புடனிருந்தால், நீர் அறிய விரும்பும் விஷயத்தை அறிந்துகொள்ளலாம்.

தங்கள் நன்மை விரும்பும்
நண்பன்.

நாராயணனுக்குச் சட்டென்று ஒரு யோசனை வந்தது. எதிர் வீட்டில் பி.எல். பரிட்சைக்குப் படிக்கும் மாணாக்கர் ஒருவர் இருந்தார். அவர், நாராயணனின் நண்பரல்லர். ஆயினும், கொஞ்சம் பழக்கமுண்டு. அவசரமாக எழுந்து சென்று எதிர் வீட்டு வாயிற்படியில் நின்றுகொண்டே, "சார்! சார்!" என்று கூப்பிட்டான். பி.எல். மாணாக்கர் வெளியே வந்தார். நாராயணன் அவரை ஏற இறங்கப் பார்த்தான். அவர் முகத்தில் எவ்வித மாறுபாடும் காணப்படவில்லை. "ஒன்றுமில்லை, என் கடிகாரம் நின்று போய்விட்டது. தயவு செய்து மணி பார்த்துச் சொல்லுங்கள்" என்றான். மாணாக்கர் உள்ளே போய் அங்கிருந்து ஏதோ சொன்னார். அது சரியாகக் காதில் விழாதபோதிலும், "சரி, வந்தனம்" என்று நாராயணன் கூறிவிட்டுத் திரும்பினான்.

அன்று உணவு அருந்தியதும் நாராயணன் ஆடம்பரமாக உடுப்பு அணிந்துகொண்டான். பின்னர் சமையல் அறைக்குச் சென்றான். லட்சுமி சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. சென்ற ஒரு வாரமாகத் தன் கணவர் நடந்துகொண்ட மாதிரியிலிருந்து, ஒரு கால் இன்று போகாமல் இருந்துவிட மாட்டாராவென்று அவள் ஆசைப்பட்டாள். ஆனால், நாராயணன் உடுப்பணிய ஆரம்பித்ததைப் பார்த்ததும், இந்நம்பிக்கையைக் கைவிட்டாள். அவளை அறியாமலே துக்கம் பொங்கிற்று.

"லட்சுமி, நான் போய் வருகிறேன்" என்றான் நாராயணன்.

லட்சுமிக்கு ஆச்சரியமாயிருந்தது. 'ஒருநாளாவது சொல்லிக்கொண்டு போனதில்லை. கொஞ்சம் மனம் இளகியிருக்கிறது. இதுதான் தருணம்' என்று அவள் எண்ணினாள்.

"எங்கே போகப் போகிறீர்கள்? இன்று போக வேண்டாமே! சாயங்காலம் என்னையும் எங்கேனும் அழைத்துக்கொண்டு போங்களேன்" என்றாள்.

'ஆ... பாசாங்குக்காரி! உலகில் பெண்களை ஆண்டவன் எதற்காகப் படைத்தான்?' என்று நாராயணன் எண்ணிக்கொண்டான்.



அவனுக்கு வந்த கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, "இல்லை! இன்று அவசியம் போக வேண்டும். இன்னொரு நாளைக்குப் பார்த்துக்கொள்வோம்" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றான்.

அன்று பிற்பகலில் மயிலாப்பூர் மாட வீதிகளிலுள்ள வீட்டுமாடி ஒன்றிலிருந்து யாரேனும் பார்த்திருப்பின், ஸ்ரீமான் நாராயணன், பி.ஏ. (ஆனர்ஸ்)' அவ்வீதிகளைச் சுற்றி வலம் வந்துகொண்டிருப்பதைக் கவனித்து ஆச்சரியமுற்றிருப்பார்கள்.

மணி சுமார் மூன்றரை இருக்கும். நாராயணன் தனது வீடிருக்கும் தெருமுனைக்குப் பன்னிரண்டாவது முறையாக வந்துபோது தன் வீட்டுக்கு எதிரில் ஒரு குதிரை வண்டி நின்றுகொண்டிருப்பதை பார்த்து திடுக்கிட்டான். ஒரு கண நேரம் அவன் மூச்சு நின்றுவிடும் போலிருந்தது. அவ்வண்டிக்குள் இளைஞன் ஒருவன் இருந்தான். ஆனால், அவன் எதிர்ப்புறமாய்க் குதிரையை நோக்கி திரும்பி உட்கார்ந்திருந்தபடியால், முகம் தெரியவில்லை. 'வண்டி இப்போதுதான் வந்து நிற்கிறதா? வண்டியில் இருப்பவன் இறங்கப் போகிறானா?' என்று எண்ணி, நாராயணன் திக்பிரமை கொண்டவன் போல் தெரு முனையிலேயே நின்றான்.

என்ன துரதிர்ஷ்டம்! வண்டிக்காரன், குதிரையைச் சவுக்கால் அடித்தான். நாராயணன் அதே கணத்தில் தன் வீட்டு மாடியை நோக்கினான். ஒரு ஜன்னல் திறந்திருந்தது. அதன் வழியே பெண் கரமொன்றும், சேலைத் தலைப்பும் தெரிந்தன. இரண்டு நிமிஷங்களில் வண்டி தெருக்கோடிச் சென்று மறைந்தது. நாராயணன் அந்த இரண்டு நிமிஷமும் நரக வேதனை அனுபவித்தான். மறுபடியும் அண்ணாந்து தன் வீட்டு மாடியின் ஜன்னலை நோக்கியிருப்பானாயின், அங்கே சாரதை நின்று கண்களில் விஷமக் குறி தோன்றத் தன்னைப் பார்த்துப் புன்னகை செய்துகொண்டிருந்ததைக் கண்டிருப்பான். ஆனால், அப்போது அவன் உள்ளம் இருந்த நிலையில், கண்கள் திறந்திருந்தும் எதிரிலுள்ள பொருளைக்கூட பார்க்கவில்லை.

முதலில், விரைந்து வீட்டுக்குச் செல்லலாமாவென்று நினைத்தான். ஆனால், அமைதியுடன் யோசனை செய்தல் இப்போது அவசியமென உணர்ந்தான். எனவே, கடற்கரையை நோக்கிச் சென்றான். மாலைக் கடற்காற்று அவனுக்கு கொஞ்சம் சாந்தம் அளித்தது. யோசனை செய்யலானான். முதலில், தான் தெரு முனையில் நில்லாமல் வீதிகளைச் சுற்றி வந்துகொண்டிருந்தது தவறு என்று முடிவு செய்தான். பின்னர்

நிச்சயமான– அத்தாட்சியில்லாமல் அவசரப்பட்டு எதுவும் செய்யக் கூடாதென்று தீர்மானித்தான்.

பிறகு குதிரை வண்டியைப் பற்றி யாரையும் விசாரித்தால் அவமானத்துக்கும், ஆபத்துக்கும் இடமாகுமென்னும் முடிவுக்கு வந்தான். கடைசியாக உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், தன் மனைவியிடம் சந்தேகங் கொண்டதாகக் காட்டிக்கொள்ளக் கூடாதென்றும், அவளிடம் அன்பு கொண்டிருப்பதாக நடிக்க வேண்டுமென்றும் தீர்மானித்தான். நாராயணன் புத்திசாலி! இல்லாவிட்டால் பி.ஏ. (ஆனர்ஸ்) பரீட்சையில் தேறியிருக்க முடியுமா?

## 6

ஒரு வாரம் சென்றது. அடுத்த சனிக்கிழமையும் வந்தது. நாராயணன் தன் ஐயங்களை அநேகமாக மறந்துவிட்டான். 'என்ன பைத்தியக்காரத்தனம், நமது லட்சுமியைச் சந்தேகிக்கப் போனோமே! குழந்தையைப் போல் கள்ளங் கபடமற்ற இவளா அத்தகைய பெருந்துரோகம் எண்ணுவாள்?' என்று கருதலானான். அத்துடன் வீட்டில் இன்ப விளக்கையொத்த இவளை வைத்துவிட்டுத் தான் வெளியே எங்கேயோ இன்பந்தேடி அலைந்தது எவ்வாறு என்ற வியப்பும் அவன் உள்ளத்தில் சற்றே தோன்றலாயிற்று. எனினும், இன்றைய தினம் கிண்டிக்குப் போய் வருவது என்று தீர்மானித்தான். மனைவியின் பேரில் தவறான ஐயங்கொண்டு, அதற்காகக் கிண்டிக்குப் போகாமலிருப்பதா? என்ன அவமானம், யாருக்காவது தெரிந்தால் நகையார்களா? இன்னும் இரண்டு வாரம்தான் பந்தயம் நடைபெறும். இழந்த மூவாயிரம் ரூபாயில் ஏதேனும் ஒரு பகுதியையேனும் மீட்க வேண்டாமா?

ஆனால், அந்தக் கடிதங்கள்? அவற்றின் நினைவு இடையிடையே தோன்றி, நாராயணன் மனத்தைக் குழப்பிக்கொண்டிருந்தது. அந்த எழுத்தை எங்கேயோ பார்த்த நினைவாயிருந்தது. ஆயினும் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் எங்கே என்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்றைய தினம் கடிதம் ஒன்றும் வராவிடின், பழைய கடிதங்களைத் தீயிலிட்டுப் பொசுக்கிவிட்டு,



எல்லாவற்றையும் மறந்துவிடுவதென்று தீர்மானித்தான். எனவே, தபால்காரன் வரவை மிகுந்த ஆவலுடன் எதிர் நோக்கியிருந்தான். எதிர் நோக்கியது வீண் போகவில்லை. கடிதம் வந்தது. நாராயணனின் அப்போதைய மனோ நிலையை வருணித்தல், நமது ஆற்றலுக்கு அப்பாற்பட்டது. உறையை உடைத்து– காகிதத்தைப் படித்தான்.

பிரியமுள்ள ஐயா,

இன்று மாலை, உமது மனைவி எங்கேனும் புறப்பட்டுப் போக விரும்பினால், தடுக்க வேண்டாம். அவளுக்குத் தெரியாமல் பின் தொடர்ந்து செல்லும்.

**தங்கள் நன்மையை நாடும்,**

**நண்பன்.**

பற்பல ஐயங்கள், மனக்குழப்பம் எல்லாம் மீண்டும் முன்னைவிட அதிகமாகவே ஸ்ரீமான் நாராயணனைப் பற்றிக்கொண்டன. பொறாமையும், கோபமும் உள்ளத்தில் கொழுந்து விட்டெரியலாயின. அவன் உடல் நடுங்கிற்று. கண்களில் நீர் ததும்பிற்று. கள்ளங்கபடமற்றவள், தன்னைத் தவிர வேறு கதியில்லாதவள் என்று எண்ணி, தான் அளவற்ற நம்பிக்கையும்... அன்பு வைத்திருக்கும் ஒரு பெண் தன்னைப் பயங்கரமாக ஏமாற்றி மகத்தான துரோகம் செய்வது மட்டுமன்று; இந்த அவக்கேடான விஷயம் மூன்றாவது ஆசாமி ஒருவனுக்குத் தெரிந்தும் இருக்கிறது.

அவமானம்... அவமானம்! இத்தகைய சந்தர்ப்பங்களில் மனைவியைக் கொன்றுவிட்டுத் தற்கொலை செய்து கொண்டவர்களைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்த பல விவரங்கள் நாராயணன் நினைவுக்கு வந்தன. கைத்துப்பாக்கியின் மீதும், விஷ மருந்தின் மீதும் அவன் எண்ணம் சென்றது.

லட்சுமி உள்ளிருந்து வந்தாள். அன்றலர்ந்த தாமரை போன்ற அவள் வதனத்தில் செவ்விதழ்கள் புன்னகை பூத்துத் திகழ்ந்தன. கள்ளமற்ற உள்ளத்தினின்று எழுந்த காதற் சிரிப்போ அது. 'சாப்பிட வாருங்கள்' என்ற அவள் மொழிகள், நாராயணன் செவிகளில் இன்பத் தேனெனப் பாய்ந்தன.

'ஒன்று இவள் இவ்வுலகிலுள்ள நூறு கோடிப் பெண்மக்களில் பொறுக்கி எடுத்த இணையற்ற வஞ்சக நெஞ்சப் பாதகியாக இருத்தல் வேண்டும்; அல்லது நமக்குப் பகைவன் யார், நம்மை இவ்வாறு வருத்துவதில் யாருக்கு என்ன லாபம்? எப்படியும் இன்று உண்மையைக்

கண்டுவிடலாம்' என்று நாராயணன் எண்ணினான்.

சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் லட்சுமி, "நான் இன்று திருவல்லிக்கேணிக்குப் போய் வரட்டுமா?" என்று கேட்டாள். இக்கேள்வியினால் நாராயணன் உள்ளக் கடலில் எழுந்த கொந்தளிப்பை, லட்சுமி மனக்கண் கொண்டு பார்த்திருப்பாளாயின், அந்தோ அவள் பயந்தே போயிருப்பாள்.

"எதற்காக?" என்று நாராயணன் கேட்ட போது, அவன் குரலிலிருந்த நடுக்கத்தை லட்சுமி கவனித்தாளில்லை.

"சாரதை அக்கா, அடிக்கடி வரச் சொல்லிக்கொண்டிருக்கிறாள். நீண்டகாலமாய் வரவில்லையென்று கோபித்துக்கொண்டாள். இன்று கட்டாயம் வரச் சொன்னாள்."

"சரி!" என்று ஒரே வார்த்தையில் நாராயணன் பதில் கூறினான்.

"நீங்களும் வாருங்களேன். வேறு அவசியமான வேலை இருக்கிறதா?" என்று லட்சுமி பயத்துடன் கேட்டாள்.

"என்ன மோசம்! என்ன வேஷம்! அப்பா!" என்று முணுமுணுத்தான்.

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, நான் வேறிடத்துக்குப் போக வேண்டும். நீ போய் வா."

சாப்பாடு ஆனதும் நாராயணன், "வண்டி வேண்டுமா? பார்த்துக்கொண்டு வரட்டுமா?" என்று கேட்டான்.

"காலையில் தெருவில் வண்டி போயிற்று. வண்டிக்காரனிடம் சொல்லியிருக்கிறேன்."

'ஏற்பாடு ஒன்றும் பாக்கியில்லை' என்று நாராயணன் எண்ணிக்கொண்டு, "சரி... நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே போனான். ஒரு குதிரை வண்டிக்காக மயிலாப்பூர் எங்கும் அலைந்தான்., என்ன துரதிர்ஷ்டம்...? அன்றைக்கென்று ஒரு வண்டிகூடக் காணோம்.

"இந்தப் பாழும் மோட்டார் பஸ்கள் வந்து, குதிரை வண்டியே இல்லாமற் செய்துவிட்டன. நாசமாய்ப் போக!" என்று சபித்தான். எங்கும் சுற்றிவிட்டுத் திரும்புகையில், எதிரில் லட்சுமி ஒரு வண்டியில் வருவதைக் கண்டான். அவன் தன்னைப் பாராவண்ணம் குளத்தின் படியில் இறங்கி மறைந்து நின்றான்.





அவன் உள்ளம் தீவிரமாக வேலை செய்தது. வண்டியைப் தொடர்ந்து நடந்து செல்வது இயலாத காரியம். ரிக்ஷாவும் அவ்வளவு வேகமாகச் செல்லாது. குதிரை வண்டியோ கிடைக்கவில்லை. மோட்டார் பஸ்ஸில் ஏறிக் குதிரை வண்டிக்கு முன்னால் திருவல்லிக்கேணிக்குப் போய்விடுவதென்றும், மணிக் கணக்குப் பார்த்து சாரதையின் வீட்டுக்கு நேரே போய் சேர்கிறாளாவென்று கண்டுபிடித்துவிடலாம் என்றும் தீர்மானித்தான். அவ்வாறே அவசரமாகச் சென்று, புறப்படவிருந்த மோட்டார் ஒன்றில் ஏறினான்.

ஆனால், இவ்வுலகில் இடையூறுகள் தனித்து வருவதில்லையே? ராயப்பேட்டை போனதும், மோட்டார் 'பட்... பட்' என்று அடித்துக் கொண்டு நின்றுவிட்டது. வண்டியோட்டி தன்னால் ஆன மட்டும் வண்டியை முடுக்கிப் பார்த்தும் பயனியில்லை. பெட்ரோல் இல்லையென்னும் விவரம் அப்போதுதான் அவனுக்கு நினைவு வந்தது. உதவி வேலைக்காரனை 'டிராம்' வண்டியில் ஏறிப்போய் மவுண்ட் ரோட்டில் இருந்து பெட்ரோல் வாங்கி வர ஏவினான். வண்டியில் இருந்தவர்கள் சபிக்கலானார்கள். இன்னும் பணங்கொடாதவர், வண்டியைவிட்டு இறங்கினர். நாராயணன் எல்லாரையும்விட அதிகமாகச் சபித்தான். மோட்டார் இயந்திரத்தைக் கண்டுபிடித்தவனுடைய ஏழு தலைமுறையும் நாசமாய்ப் போக வேண்டுமென்று அவன் எண்ணினான். பணங்கொடுத்திருந்தானாயினும், போனால் போகட்டும் என்று இறங்கிவிட்டான்.

பின்னால் வந்த மோட்டார் பஸ்கள் எல்லாவற்றிலும் ஜனங்கள் நிரம்பியிருந்தபடியால், அவனுக்கு இடம் கிடைக்கவில்லை. கொஞ்சநேரம் கழித்து வந்த 'டிராம்' வண்டியொன்றில் ஏறிக்கொண்டான். வழி நெடுக ஜனங்கள் காத்துக்கொண்டிருந்தபடியால், அந்த வண்டி அடிக்கடி நின்று சென்றது.

உலகமெல்லாம் தனக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்திருப்பதாய் அவனுக்குத் தோன்றிற்று. மவுண்ட் ரோட்டிலும் சற்று நேரம் காத்திருக்க நேர்ந்தது. திருவல்லிக்கேணி போகும் வண்டிகள் எல்லாம் நிறைந்திருந்தன. கடைசியாக நாராயணன், திருவல்லிக்கேணி சேர்ந்து சாரதை வீடு இருந்த வீதிக்குச் சென்றபோது, மாலை நான்கு மணியாகிவிட்டது.

வீட்டு வாயிலில் லட்சுமி ஏறிவந்த வண்டி நின்றுகொண்டிருந்தது.



அவ்வண்டி நேராக மயிலாப்பூரில் இருந்து சாரதை வீட்டுக்கே வந்ததாவென்று கண்டுபிடிப்பது எப்படி? வண்டிக்காரனையோ வீட்டிலுள்ளவர்களையோ விசாரிப்பது அறிவீனம் அவமானத்துக்கிடம். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் சாரதையின் வீட்டுக்குள்ளிருந்து சாரதையும், லட்சுமியும், சாரதையின் கணவனும் வெளிவந்து வண்டியில் ஏறிக்கொண்டார்கள். எங்கேயோ வேடிக்கை பார்க்கப் புறப்பட்டுச் சென்றார்கள் போலும்.

நாராயணனின் வயிற்றெரிச்சல் அதிகமாயிற்று. சாரதையும் அவள் கணவனும் எத்தகைய இன்ப வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று நினைத்துப், பெருமூச்சுவிட்டான். கடற்கரைக்குப் போய் வெகுநேரம் உட்கார்ந்துவிட்டு, இரவு வீடு போய்ச் சேர்ந்தான்.

லட்சுமியை அவள் போயிருந்த விஷயமாக ஒரு வார்த்தைக்கூட கேட்கவில்லை!

## 7

அன்பார்ந்த ஐயா!

ஜாக்கிரதைக் குறைவினால் இரண்டு முறை உமது முயற்சியில் தவறிவிட்டீர். நாளை சனிக்கிழமை மத்தியானம் வெளியே சென்றுவிட்டு சரியாக நான்கு மணிக்கு வீட்டுக்குத் திரும்பிச் செல்லும்.. உண்மையறிவீர்.

தங்கள் நன்மை விரும்பும்
நண்பன்

இக்கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்தான் நாராயணன். சென்ற ஒரு மாத காலமாக தான் அனுபவித்து வரும் துன்பங்கள் அத்தனையும் ஒரு பெருங்கனவோ என்று எண்ணினான். கனவன்று, நிஜமே என்பதைக் கையில் இருந்த கடிதம் வலிறுத்திக் காட்டிற்று. எப்படியும் இன்று உண்மை வெளியாகிவிடுமென்று நினைத்துப் பெருமூச்சு விட்டான். ஆனால் அவ்வுண்மை எவ்வளவு பயங்கரமானது? முதல் நாள் தான் ஒரு நண்பரிடம் மிகவும் சிரமப்பட்டு இரவல் வாங்கி வந்திருந்த கைத்துப்பாக்கியை மேஜைக்குள்ளிருந்து எடுத்து மீண்டுமொரு முறை பார்த்தான். அதை எவ்வாறு உபயோகிப்பதென்பதை

இருபத்தைந்தாம் முறையாக மனத்தில் உருப் போட்டுக்கொண்டான். பகல் ஒரு மணிக்கு அவன் கண்களில் கொலைக் குறி தோன்றிற்று. அப்போது அவன் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டான். அப்போது அவன் உள்ளக் கடலில் எழுந்த பேரலைகளின் இயல்பை யார் வருணிக்க வல்லவர்?

சரியாக மாலை நான்கு மணிக்கு நாராயணன் வீடு திரும்பினான். வாயிற்கதவு சாத்தித் தாளிடப்பட்டிருந்தது. மாடி அறையில் ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. அவனுக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. ஆயினும், நிதானந் தவறிவிடக்கூடாதென்று எண்ணிப் பற்களை கடித்துக்கொண்டான். கதவை ஓங்கி இடித்தான். இரண்டு நிமிஷங் கழித்து, காலடிச் சத்தம் கேட்டது. "யார் அங்கே?"– அது லட்சுமியின் குரல். "நான்தான்; கதவைத் திற."

கதவு திறக்கப்பட்டது. லட்சுமி முகத்தில் வியப்புக்குறி தோன்றிற்று. சந்தேக எண்ணத் திரை வழியே பார்த்த நாராயணனுக்கு அவள் பயத்தினால் திடுக்கிட்டு நடுநடுங்குவதாகத் தோன்றிற்று.

வாயிற்படி தாண்டி உள்ளே நுழைந்ததும், உயர்தர கம்பெனி ஜோடுகள் நாராயணன் கண்ணில்பட்டன. அவனுக்கு எல்லாச் சந்தேகமும் நிவர்த்தியாயிற்று. தன் கைத்துப்பாக்கிக்கு அன்று இரையாகப் போகிறவன் மாடி மீதிருப்பதாக உணர்ந்தான். விரைந்து சென்று மாடிப் படிகளில் ஏறலானான். ஆனால், லட்சுமி முன்னால் ஓடி– பாதிப் படிகள் ஏறிய நாராயணனை வழி மறித்துக்கொண்டு, "உயரப் போகாதேயுங்கள்" என்ற கொஞ்சும் குரலில் கூவினாள். நாராயணனின் கோப வெறி அளவு கடந்தாயிற்று. லட்சுமியை ஒரு கையினால் பிடித்துப் பலங்கொண்ட மட்டும் இடித்துக் கீழே தள்ளினான். பாவம்! லட்சுமி பத்துப் பன்னிரண்டு படிகளிலும் உருண்டு சென்று கீழே தரையில் விழுந்தாள்.

அவளைத் திரும்பியும் பாராமல், நாராயணன் மேலே ஓடினான். மாடி அறையில் கதவை ஓங்கி ஓர் உதை உதைத்தான். கதவு தாளிடப்படாமையால் 'தடால்' என்ற சத்தத்துடன் திறந்துகொண்டது. அப்போது அவ்வறையினுள்ளே கண்ட காட்சி அவனைத் திகைக்கச் செய்துவிட்டது. எத்தனையோ விதப் பயங்கர காட்சிகளை மனத்திலே கற்பனை செய்து பார்த்துத் தெரியப்படுத்திக்கொண்டிருந்தான். ஆனால், இப்போது அவன் முன் தோன்றிய காட்சியை எதிர்பார்க்கவே இல்லை. தலையில் இடியே விழுந்துவிட்டது போல் திடுக்கிட்டு நின்றுவிட்டான்.

அக்காட்சி வேறொன்றுமில்லை. நாராயணன் நீண்ட நாளாய்



மூலையில் போட்டிருந்த ராட்டினத்தை எடுத்துச் செப்பனிட்டுச் சாரதையின் கணவன் ஸ்ரீனிவாசன் நூல் நூற்றுக்கொண்டிருந்தார். நூல் அடிக்கடி அறுந்து போய்க்கொண்டிருந்தது. சாரதை அருகில் உட்கார்ந்து, "நிறுத்துங்கள், இழுங்கள்" என்று சொல்லிக் கொடுத்துக்கொண்டும், நூல் அறும்போது இணைத்துக் கொண்டுமிருந்தாள். நாராயணன் தடபுடலாக உள்ளே நுழைந்த சத்தம் கேட்டு, அவள் தூக்கிவாரி போடப்பட்டவள் போல் எழுந்தாள். "என்ன அத்தான், கொஞ்சமும் உனக்கு நாசூக்கு தெரியாமல் போய்விட்டது. என்ன தடபுடல்? சொல்லிவிட்டு உள்ளே வரக்கூடாதா?" என்றாள்.

நாராயணன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். "இல்லை; நீங்கள் இங்கிருப்பது எனக்குத் தெரியாது. மன்னியுங்கள்" என்று தடுமாறிக்கொண்டே கூறினான். "தெரியாதா? லட்சுமி அடுப்புள்ளேயே இருக்கிறாளா என்ன?"

லட்சுமி தன்னைத் தடுத்ததன் காரணம் இப்பொழுது நாராயணனுக்குப் புலனாயிற்று. இதற்குள் சாரதையின் கணவன், "அது கிடக்கெட்டும், நீங்கள் சற்று இங்கே வாருங்கள். உங்களுக்கு நன்றாக நூல் நூற்கத் தெரியுமே? கொஞ்சம் கற்றுக் கொடுங்கள். என் உயிரை வாங்குகிறாள்" என்றார்.

"இதோ வருகிறேன்" என்று நாராயணன் சொல்லிவிட்டுத் தன் சட்டைப் பையில் மறைத்து எடுத்துக்கொண்டு வந்த கைத் துப்பாக்கியை, அலமாரிக்குள் வைத்துப் பூட்டப் போனான். அதற்குள், "அதென்ன அத்தான்" என்று சாரதை கேட்டுக்கொண்டு அருகில் வந்து, "ஓ! கைத்துப்பாக்கியெல்லாம் எப்போதிருந்து. யாரைக் கொல்லப் போகிறாய்?" என்றாள்.

பின்னர் சற்று தணிந்த குரலில், "குதிரைப் பந்தயத்துக்குப் போகிறவர் எல்லாருக்கும் கையில் துப்பாக்கிகூட வேண்டுமா என்ன?" என்று கேட்டாள்.

## 8

நாராயணனின் மூளை இயந்திரம் இப்போதுதான் சுழல ஆரம்பித்தது; பளிச்சென்று அவனுக்கு உண்மை விளங்கிற்று.

அவனுக்கு வந்த கடிதங்களில் கண்ட எழுத்து எங்கோ பார்த்த னைவாயிருந்ததே! சாரதையின் கையெழுத்தல்லவா அது? பட்சுமிக்குச் சாரதை எப்பொழுதோ எழுதிய இரண்டொரு டிதங்களிலல்லவா அந்தக் கையெழுத்தைப் பார்த்தது? கொஞ்சம் சிரமப்பட்டு மாற்றி எழுதியிருக்கிறாள். ஓ! இந்த விஷமக்காரி த்தனை தூரம் ஏமாற்றிவிட்டாள்? லட்சுமின் மீது தான் கொண்ட ந்தேகங்கள் அவ்வளவும் ஆதாரமற்றவை என அறிந்து நாராயணன், ஆனந்தக் கடலில் மூழ்கினான். அவன் இதயத்தை அமுக்கியிருந்த ஒரு பெருஞ்சுமை நீங்கியது போலிருந்தது.

சட்டென்று அவனுக்கு இன்னொரு சந்தேகம் உண்டாயிற்று. ாரதையின் கணவனுக்கு இந்த விவரங்கள் தெரியுமோ? தெரிந்திருந்தால் எத்தகைய அவமானம்! அவர் முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதெப்படி? அவன் எண்ணத்தைக் குறிப்பாக உணர்ந்த சாரதை ன் கணவரைப் பார்த்து, "நூல் நூற்பது இருக்கட்டும். அத்தானிடம் ாம் வந்த காரியத்தைச் சொல்லுங்கள். நேரமாகிவிட்டதே, போக வேண்டாமா?" என்றாள்.

அவர், "நாராயணன்! தங்களுக்குச் சங்கதி தெரியுமா? எங்கள் ட்டில் இப்போது 'ஹோம் ரூல்'தான். இவள் வைத்ததே சட்டம். இன்று மாலை சினிமாவுக்குப் போக வேண்டும்' என்றாள். உடனே றப்பட்டு வந்தேன். உங்கள் பாடு பாதகமில்லை. அன்றொரு நாள் வளை இங்கே கொண்டுவிட வந்தபோதும், உங்களைக் காணோம். ஓ! அன்று வீட்டு வாசலில் வண்டியில் இருந்தவர் நீங்கள்தானோ? ன்ன அசட்டுத்தனம்?'- என்று எண்ணிக்கொண்டான் ாராயணன்.) லட்சுமியைத் தனியே விட்டுவிட்டு நீங்கள் பாட்டுக்குப் பாய்விடுகிறீர்கள். போகட்டும். இன்றாவது வந்தீர்களே, வாருங்கள் பாவோம்" என்றார்.

அவருடைய வார்த்தைகள் நாராயணனுக்குச் சுருக்கென்று தைத்தன. ஆனால், அவருக்குத் தன் அசட்டுத்தனத்தைப் பற்றி எதுவும் தெரியாதென்று அறிந்து ஆறுதல் அடைந்தான். நன்றியறிதலுடன்

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்,
ஆசிரியர்: ர.பாஸ்கரன், அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம்,
ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.
தொலைபேசி: 25324771 FAX: 044-26426884
E-MAIL: raniweekly@vsnl.net



சாரதையைப் பார்த்துவிட்டு, "ஓ... போகலாம், இதோ கீழே போய்விட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே சென்றான்.

சாரதை அவனுடன் போய் மாடிப் படியில் வழியை மறித்துக்கொண்டு, "அசட்டு அத்தான்! லட்சுமியிடம் ஒரு வார்த்தையும் சொல்லாதே. சந்தேகப்பட்டாய் என்று தெரிந்தால் உயிரை விட்டுவிடுவாள். மேலும் என்னை மன்னிக்கவே மாட்டாள்?" என்றாள். "சாரதை உனக்குக் கைம்மாறு என்ன செய்யப் போகிறேன்?" என்றான் நாராயணன். "கைமாறா? நீ என் மீது கோபித்துக்கொள்ளப் போகிறாயோவென்று பயந்தேன். நல்லது... எனக்குக் கைம்மாறு செய்ய விரும்பினால், குதிரைப் பந்தயத்தை மறந்துவிடு. உன் மனைவியைத் தனியே விட்டுவிட்டு ஊர் சுற்றவும், சீட்டு விளையாடவும் போகாதே" என்றாள். "இல்லை... இல்லை. ஆண்டவன் மீது ஆணை! இந்த ஒரு மாதமாய் நான் அனுபவித்தது போதும்" என்று கூறிக்கொண்டு நாராயணன் விரைந்து கீழே ஓடினான்.

லட்சுமி ஒரு தூணில் சாய்ந்து கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள். தன் கணவனின் கடுங்கோபத்துக்கு உரியவளாவதற்குத் தான் செய்த தவறு இன்னதென்பது அவளுக்குப் புலனாகவில்லை. நாராயணன் கீழிறங்கி வந்து அவளருகில் உட்கார்ந்தான். தாமரை இதழ் போன்ற மிருதுவான அவள் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு, "லட்சுமி! என்னை மன்னித்துவிடு" என்றான். "ஐயோ அப்படியெல்லாம் சொல்லாதேயுங்கள்" என்று லட்சுமி அவன் வாயைத் தன் கரத்தினால் மூடினாள். "ஒரு வருஷமாக உனக்குத் துரோகம் செய்துவிட்டேன். பாழும் குதிரைப் பந்தய மோகத்தில் மூழ்கிக் கிடந்தேன். பணத்தைத் தொலைத்தேன். இன்றுடன் குதிரைப் பந்தயத்துக்குத் தர்ப்பணம் செய்துவிடுகிறேன்" என்றான்.

மாடியின் மீது ஸ்ரீனிவாசனும், சாரதையும் காத்துக் காத்துப் பார்த்தனர். லட்சுமியாவது, நாராயணனாவது வரும் வழியைக் காணோம். எனவே, சினிமாக் காட்சிக்குச் செல்லும் யோசனையை அவர்கள் கைவிட வேண்டியதாயிற்று. ஆனால், இதன் பொருட்டு அவர்கள் சிறிதும் வருந்தினார்களில்லை. ஸ்ரீனிவாசன் அன்று நன்றாக நூல் நூற்கப்பழகிக்கொண்டார்.

**(முற்றும்)**